REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/Thinakaran.lk /ThinakaranLK

2022 மார்ச் 14 திங்கட்கிழமை

தினகரன்
THINAKARAN
தினகரன்

வரு. 90 இல. 62 | Monday 14, March, 2022 | 20பக்கங்கள் | 30/-

இன்னும் 01 நாள்!
தினகரன்

உள்ளூராட்சி சபைத் தேர்தல் செப்டெம்பருக்கு முன் நடைபெறும்?

உள்ளூராட்சி தேர்தலை விரைவாக நடத்துவதற்கு அரசாங்கம் தயாராவதால்,எந்த வேளையிலும் தேர்தலை எதிர்கொள்ள ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியினர் தயாராக இருக்க வேண்டுமென சுற்றாடல் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார். நீர்ப்பாசன அமைச்சின் அம்பாறை வளாகத்தில் கட்சியின் அமைப்பாளர்கள் மத்தியில் உரையாற்றும்போதே அமைச்சர் நேற்றுமுன்தினம் இவ்வாறு தெரிவித்தார். இங்கு பேசிய அவர் தெரிவித்ததாவது, மாகாணசபை தேர்தலை நடத்தும் நோக்குடனே உள்ளூராட்சி சபைகளின் ஆயுட்காலம் ஒரு வருடத்தால் நீடிக்கப்பட்டது. எதிர்வரும் செப்டம்பர் ஜெனீவா அமர்வுக்கு முன்னர் மாகாணசபை தேர்தலை நடத்தும் சூழல் இல்லை. இதனால், உள்ளூராட்சி தேர்தலை நடாத்தி அரசாங்கம் தனது பலத்தை நிரூபிக்க 06

நிதியமைச்சர் பசிலின் வருகை

இருநாட்டு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துமென இந்தியா நம்பிக்கை

நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷவின் இந்திய விஜயம் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான பொருளாதார ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்தும் என இந்திய அரசாங்கம் தெரிவித்துள்ளது.

நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ இந்தியாவிற்கு விஜயம் செய்யவுள்ளதாக இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலயம் தனது டுவிட்டர் கணக்கில் குறிப்பொன்றை வெளியிட்டுள்ளது. 06

பொலிஸ் திணைக்களத்தின் பெயரில் போலி தகவல் பரப்பப்படுவதாக எச்சரிக்கை

சமூக வலைத்தளங்களில் தற்போது பகிரப்படும் தகவல், பொலிஸ் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட செய்தியல்லவென பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் அறிவித்துள்ளது. "அனைவரும் படிக்க வேண்டிய பொலிஸ் செய்தி பொருளாதார நெருக்கடியில் ஜாக்கிரதை" என 22 விடயங்கள் உள்ளடக்கப்பட்டு, இறுதியில் அவதானமாக இருங்கள் பொலிஸ் திணைக்களம் 06

மக்களின் பிரச்சினைகளில் இ.தொ.கா கரிசனை

(ஹற்றன் சுழற்சி நிருபர்)

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், அரச பங்காளிக்கட்சியாக இருந்தாலும் எமது மக்களுக்கு ஏதேனும் பிரச்சினை ஏற்பட்டால் ஒருபோதும் மௌனம் காத்தது கிடையாது. எனவே, காங்கிரஸை நம்புங்கள். அந்த அமைப்பு உங்களை ஒருபோதும் கைவிடாது என்று இ.தொ.காவின் நிதிச் செயலாளரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஸ்வரன் தெரிவித்தார்.

பாலின சமத்துவம் என்ற தொனிப்பொருளின்கீழ் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் ஹற்றன் பிரதேசத்திற்கான மகளிர் தின விழா நேற்று காலை கொட்டகலை ஸ்ரீ முத்துவிநாயகர் ஆலய கலாசார மண்டபத்தில் வெகு விமர்சையாக இடம்பெற்றது.

அவர் மேலும் கூறியவை வருமாறு, "இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் வளர்ச்சிக்கு பெண்களும் அளப்பரிய பங்களிப்பை வழங்கியுள்ளனர். காங்கிரஸில் பெண்களே 06

மக்களின் மீது சுமையேற்றாது பஸ் கட்டணம் மறுசீரமைப்பு

அமைச்சரவை கூட்டத்தில் இன்று இறுதி தீர்மானம்

(ஷம்ஸ் பாஹிம்)

பஸ் கட்டண மறுசீரமைப்பு குறித்து இன்று நடைபெறும் அமைச்சரவை கூட்டத்தில் ஆராய்ந்த பின்னர் தீர்மானம் எடுக்கப்படும் என போக்குவரத்து அமைச்சர் திலும்அமுனுகம தெரிவித்தார்.

எரிபொருள் விலைகள் மற்றும் ஏனைய உதிரிப் பாகங்கள் அதிகரித்துள்ளதை கருத்திற் கொண்டு பஸ் கட்டணத்தை அதிகரிக்க வேண்டுமெனவும், மக்களுக்கு தாங்கிக் கொள்ளக்கூடிய வகையில் இந்த அதிகரிப்பு மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

பஸ் சங்கம் – போக்குவரத்து அமைச்சருக்கிடையில் நேற்று பேச்சுவார்த்தை

எரிபொருள் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில், பஸ்கட்டணங்களை அதிகரிக்குமாறு பஸ் சங்கங்கள் அரசாங்கத்தை கோரியுள்ளன. இது தொடர்பில் அமைச்சருக்கும் பஸ் உரிமையாளர்களுக்கும் இடையில் நேற்று பேச்சுவார்த்தை நடைபெற்றது.

தனியார் பஸ் உரிமையாளர்களின் கோரிக்கைக்கு அமையவும், தேசிய கொள்கைக்கு அமைவாகவும் எரிபொருள் விலையில் குறிப்பிடத்தக்க மாற்றத்துக்கு ஏற்ப பஸ் கட்டணத்தை அதிகரிப்பதற்கான யோசனையை இன்று அமைச்சரவையில் முன்வைக்க இதன்போது உடன்பாடு காணப்பட்டது. இதுதொடர்பில், போக்குவரத்து அமைச்சில் நேற்று (13) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். 06

விலை அதிகரித்தாலும் ஒரு லீற்றர் டீசலுக்கு 120 ரூபா நஷ்டம்

விலையை மேலும் அதிகரிக்க வேண்டும்

தற்போது ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடி நிலையில் டீசல் விலைகளை அதிகரித்தாலும் ஒரு லீற்றர் டீசலுக்கு 120 ரூபா நஷ்டத்தை சுமக்க வேண்டியுள்ளதாக இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் தலைவர் சுமித் விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

ஒரு லீற்றர் டீசலுக்கு 120 ரூபா நஷ்டம் ஏற்படுகின்ற போதிலும், ஒரு லீற்றர் டீசல் 06

ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் 25 ஆவது மாநாடு மருதானை அல்ஹிதாயா மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. பிரதம அதிதியாக கலந்து கொண்ட ஊடக அமைச்சர் டலஸ் அழகப்பெருமவுக்கு போரத்தின் தலைவர் என்.எம். அமீன் பொன்னாடை போர்த்தி கௌரவிப்பதையும் அருகில் இந்திய பாராளுமன்ற உறுப்பினர் நவாஸ் கனி, போரத்தின் முன்னாள் செயலாளர் ஸாதிக் ஷிஹான் ஆகியோரையும் படத்தில் காணலாம்.

படம்: அஷ்ரப் ஸமத்

புதுப்பிக்கத்தக்க வலுசக்தி ஊடாக ஆறு வருடங்களில் 5000 மெ.வோ மின்உற்பத்தி

(ஷம்ஸ் பாஹிம்)

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலமாக அடுத்த ஆறு ஆண்டுகளுக்குள் 5,000 மெகா வோட் மின் உற்பத்தி செய்து, தேசிய மின்கட்டமைப்புடன் இணைப்பதற்கு ஜனாதிபதி பணிப்புரை வழங்கியுள்ளார்.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தித் திட்டத்திற்காக இந்திய அதானி நிறுவனத்திடமிருந்து 500 மில்லியன் டொலர் முதலீட்டை பெற அமைச்சரவை உபகுழு அனுமதி அளித்துள்ளதாக ஆளும் தரப்பு பிரதம கொறடா, நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

நாட்டுக்கு கிடைக்கும் முதலீடுகள் எக்காரணம் கொண்டும் தாமதிக்கப்படமாட்டாது எனவும், இந்த முதலீடுகளை தாமதப்படுத்த முயற்சிப்பவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். புதிய வீடுகள் நிர்மாணித்தல், புதிய தொழிற்சாலைகள் அமைக்கப்படுவது போன்றவை காரணமாக வருடாந்தம் 5% முதல் 8% மின் தேவையை அதிகரிக்கிறது. இந்த தேவையை பூர்த்தி செய்யும் வகையில், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை 06

சீமெந்து, கம்பி, மணல் விலைகள் அதிகரிப்பு

நிர்மாணத்துறை சார்ந்த சீமெந்து, மணல், செங்கல், உருக்குக் கம்பி என்பவற்றின் விலைகள் அதிகரித்துள்ளன.

இதற்கமைய சுமார் 1,375 ரூபாவாக இருந்த ஒரு மூடை சீமெந்து தற்போது 1,850 தொடக்கம் 1,900 ரூபாவாக விற்பனை செய்யப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் சந்தையில் விற்பனை செய்யப்படும் ஒரு தொன் இரும்பு கம்பியின் விலை 38,000 ரூபாவினால் அதிகரித்துள்ளது. கடந்த மூன்று நாட்களுக்குள் இவ்வாறு விலை அதிகரித்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

முன்னர் 254,500 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட ஒரு தொன் இரும்பு கம்பியின் விலை தற்போது 292,500 ரூபாவாக அதிகரித்துள்ளது. இதற்கமைய 10 மில்லிமீற்றர் இரும்பு கம்பி ஒன்று 1,040 ரூபாவுக்கும், 12 மில்லிமீற்றர் கம்பி 1,500 06

தேசிய அரசாங்கம் அமைந்தால் ஸ்ரீல.சு.க அங்கம் வகிக்காது

தேசிய அரசாங்கம் ஒன்று அமைக்கப்பட்டால், அதில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அங்கம் வகிக்காது என கட்சி பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

பதுளையில் நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மாநாட்டில் கலந்துக்கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

தேசிய அரசாங்கம் ஒன்றில் அமைச்சு பதவிகள் மற்றும் பொறுப்புக்களை பெற்றுக் கொள்வதில்லைஎன்பது சுதந்திரக் கட்சியின் நிலைப்பாடு எனவும் தயாசிறி கூறியுள்ளார். தற்போதைய நிலையில் அமைச்சு பதவிகளை குறைக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். 2015 ஆம் ஆண்டு 06

சகல பாடசாலைகளும் இன்று முதல் வழமைக்கு

சகல பாடசாலைகளும் இன்று முதல் வழமைபோன்று நடைபெறும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இது தொடர்பாக கல்வியமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா அறிக்கையொன்றை விடுத்துள்ளார். இதற்கமைவாக மாணவர்களை வழமை போன்று பாடசாலைக்கு அழைக்க முடியும்.

கொவிட் தொற்றுடன் தொடர்புடைய ஏதாவது பிரச்சினைகள் எழுமாயின், வலய 06

சர்வகட்சி மாநாட்டுக்கு அழைப்பு

நிபந்தனையின்றி ஜனாதிபதியுடன் பேச த.தே.கூட்டமைப்பு தயாரில்லை

நிபந்தனைகள் எதுவுமின்றி ஜனாதிபதியோடு பேச, தயாரில்லை என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம் தெரிவித்தார்.

வவுனியாவில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்தும் தெரிவிக்கையில், நாங்கள் பல போராட்டங்களை நடாத்தினால்தான் எங்களுக்குரியதை, எங்களுடைய உரிமையை பெற முடியும். போராடாமல் வீட்டுக்குள்ளே இருந்தால் எங்களுடைய உரிமையை நிச்சயமாக பெற்றுக்கொள்ள முடியாது. ஜனாதிபதி எதிர்வரும் 15ம் திகதி சந்திக்குமாறு தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு அழைப்பு விடுத்திருக்கிறார்.

நாடு தற்போது இக்கட்டான நிலைமையில் இருக்கிறது. விடியும் ஒவ்வொரு வேளையிலும் விலைவாசிகள் அதிகரித்துக்கொண்டே இருக்கின்றன.

அத்தியாவசிய பொருட்களுக்கான தட்டுப்பாடுகளும் மிக மோசமானதாக இருக்கின்றது. வரிசையாக நிற்கின்ற யுகத்தை மீண்டும் சந்திக்கின்ற நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

118 நீதவான்களுக்கு இடமாற்றம்

நீதிபதிகள் மற்றும் நீதவான்கள் உட்பட 118 நீதித்துறை அதிகாரிகளை இடமாற்றம் செய்ய நீதிச்சேவை ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

வருடாந்த இடமாற்ற நடைமுறையின் கீழ், இந்த இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி, இந்த ஆண்டு ஏப்ரல் 04 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் இந்த இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளன. இடமாற்றங்கள் தொடர்பான மேன்முறையீடுகளை எதிர்வரும் 18ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளுமாறு நீதிச்சேவை ஆணைக்குழு தெரிவித்துள்ளது. இவ்வருட வருடாந்த இடமாற்றத்தின் கீழ், கொழும்பு நீதவான் நீதிமன்றம் உட்பட நாடளாவிய ரீதியில் உள்ள பல முக்கிய நீதிமன்ற நீதவான்கள், மாவட்ட நீதிபதிகள் மற்றும் மேலதிக மாவட்ட நீதிபதிகள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. இது தவிர, 27 பயிற்சி பெற்ற நீதித்துறை அதிகாரிகள் புதிதாக நீதவான்கள், மாவட்ட நீதிபதிகள் மற்றும் மேலதிக மாவட்ட நீதிபதிகளாக நியமிக்கப்பட்டுள்ளதாக நீதிச்சேவை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பாடசாலைகளின் நீர்க்கட்டணத்தை செலுத்துவதற்கு திறைசேரி மறுப்பு

ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு

அரசாங்க பாடசாலைகளின் குடிநீர் கட்டணத்தை திறைசேரி இனி ஏற்காது எனவும், அதனை பாடசாலைகளினூடாகவே செலுத்த வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது. இதனால் நீர்க்கட்டணத்தை பெற்றோர்கள் செலுத்த வேண்டியுள்ளதாகவும் சங்கம் தெரிவித்துள்ளது. இந்த ஆண்டு முதல் குடிநீர் கட்டணத்திற்கு அரசு நிதி வழங்காது என அனைத்து பாடசாலைகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாக, சங்கத்தின் 06

சர்வதேச செய்திகள்

உக்ரைனின் 'மேற்கத்திய' பக்கம் ரஷ்யா முதல்முறையாக தாக்குதல்

மேற்கு நாடுகளின் ஆயுத கப்பல்களுக்கு எச்சரிக்கை

போலந்து நாட்டின் எல்லைக்கு அருகில் இருக்கும் உக்ரைனின் மிகப் பெரிய இராணுவத் தளம் ஒன்றின் மீது ரஷ்யா நேற்று ஞாயிற்றுகிழமை ஏவுகணை தாக்குதல் ஒன்றை நடத்தியுள்ளது. உக்ரைன் படையெடுப்புக்குப் பின் ரஷ்யா மேற்கை நோக்கி நடத்திய முதல் தாக்குதலாக இது உள்ளது. தலைநகர் கியேவில் நேற்றும் வான் தாக்குதல் சைரன் ஒலி எழுப்பப்பட்டது.

யவோரிவ் நகரில், "அமைதிகாப்பு மற்றும் பாதுகாப்புக்கான சர்வதேச மையத்தின் மீது ஆக்கிரமிப்பாளர்கள் வான் தாக்குதல் ஒன்றை நடத்தினர்" என்று ல்விவ் பிராந்திய இராணுவ நிர்வாகம் வெளியிட்ட அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது. இங்கு எட்டு ஏவுகணைகள் வீசப்பட்டதாக ஆரம்பத் தகவல்கள் கூறுகின்றன.

360 சதுர கிலோமீற்றர் அளவு கொண்ட இந்தத் தளம் போலந்து எல்லையில் இருந்து 25 கிலோமீற்றருக்கும் குறைவான தூரத்திலேயே உள்ளது. இது உக்ரைனில் மேற்குப் பக்கமாக இருக்கும் மிகப்பெரிய மற்றும் பாரிய இராணுவத் தளமாக இருப்பதோடு இங்கு உக்ரைன் நேட்டோ நாடுகளுடன் இணைந்து இராணுவ ஒத்திகைகளிலும் ஈடுபடுகின்றமை குறிப்பிடத்தக்கது.

மேற்கில் இருக்கும் மற்றொரு நகரின் மேயரான இவானோ பிரான்கிவ்ஸ் வெளியிட்ட அறிவிப்பில், ரஷ்ய துருப்புகள் நகரில் இருக்கும் விமான நிலையம் மீது தொடர்ந்து தாக்குதல் நடத்தியதாகவும் உயிரிழப்புகள் பற்றி ஆரம்பத்தில் உறுதி செய்யப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளார். தலைநகர் கியேவை கைப்பற்ற முயன்றால் ரஷ்ய படைகள் மரணப் போராட்டத்தை சந்திக்க வேண்டி இருக்கும் என்று உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் செலென்ஸ்கி எச்சரித்துள்ளார். ஞாயிறு காலையிலும் வான் தாக்குதல் எச்சரிக்கை விடுக்கும் சைரன் ஒலியுடனேயே கியேவ் மக்கள் விழித்தார்கள்.

"அவர்கள் குண்டுவீச்சை தீவிரப்படுத்தி, இந்தப் பிராந்தியத்தின் வரலாற்றை அழித்து, எம் அனைவரையும் அழித்தால், அவர்களால் கியேவ் நகருக்குள் நுழையலாம். ஆனால் அவர்கள் தான் இந்த நிலத்தில் வாழ்வார்கள்" என்று செலென்ஸ்கி தெரிவித்துள்ளார்.

தலைநகரில் இருந்து சமூக ஊடகத்தின் வழி தொடர்ந்து தோன்றும் ஜனாதிபதி, ரஷ்ய தாக்குதல் மூன்றாவது வாரத்தை எட்டியிருக்கும் நிலையில் சில சிறு நகரங்கள் தொடர்ந்தும் வரை படத்தில் இருந்து அழிந்துவிட்டதாக குறிப்பிட்டுள்ளார்.

ரஷ்யாவின் ஷெல் தாக்குதல்களால் முற்றுகை நகரங்களில் ஆயிரக்கணக்கான மக்கள் சிக்கித் தவிப்பதோடு 2.5 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் அண்டை நாடுகளுக்கு தப்பிச்சென்றுள்ளனர்.

கியேவுக்கு அருகில் மோதலில் இருந்து தப்பிக்க முயன்ற பெண்கள் மற்றும் சிறுவர்கள் உட்பட பொதுமக்கள் ஏழு பேர் கடந்த சனிக்கிழமை கொல்லப்பட்டதாக ரஷ்யப் படை மீது உக்ரைன் குற்றம்சாட்டியுள்ளது. ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் அமைதி முயற்சிக்கான தயார்நிலையை வெளிப்படுத்தவில்லை என்று பிரான்ஸ் குறிப்பிட்டுள்ளது.

பொதுமக்கள் இலக்கு வைக்கப்படுவதான குற்றச்சாட்டை ரஷ்யா மறுப்பதோடு சுற்றிவளைக்கப்பட்ட நகரங்களில் இருந்து பொதுமக்களை வெளியேற்றும் முயற்சிகள் தோல்வி அடைந்ததற்கு உக்ரைன் மீது குற்றம் சாட்டியுள்ளது. எனினும் இந்தக் குற்றச்சாட்டை உக்ரைன் மற்றும் அதன் மேற்கத்திய நட்பு நாடுகள் மறுத்துள்ளன.

200 மில்லியன் டொலர் பெறுமதியான மேலதிக சிறிய ஆயுதங்கள், டாங்கி எதிர்ப்பு மற்றும் விமான எதிர்ப்பு ஆயுதங்களை உக்ரைனுக்கு வழங்குவதை விரைவுபடுத்தி இருப்பதாக அமெரிக்கா குறிப்பிட்டுள்ளது.

அமெரிக்கா பதற்றத்தை அதிகரிப்பதாகக் குறிப்பிட்டிருக்கும் ரஷ்ய பிரதி வெளியுறவு அமைச்சர் செர்கெய் ரியாப்கொவ், உக்ரைனுக்கு அனுப்பப்படும் மேற்கத்திய ஆயுதக் கப்பல்களின் வருகை நிலைமையை மோசமடையச் செய்திருப்பதாகவும், அவைகளை தாக்குதல் இலக்குகளாக ரஷ்ய இராணுவம் கருதுவதாகவும் எச்சரித்துள்ளார். அவ்வாறான கப்பல்கள் தாக்குப்படும் நிலையில் இந்தப் போர் மேலும் விரிவடையும் நிலை ஏற்படலாம் என்று அவதானிகள் குறிப்பிட்டுள்ளனர்.

ரஷ்யா மற்றும் உக்ரைன் இடையிலான நெருக்கடிப் பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து இடம்பெற்று வருவதாக ரஷ்யாவின் ஆர்.ஐ.ஏ செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. இது பற்றி எந்த மேலதிக விபரமும் வெளியிடப்படவில்லை. ஆனால் உக்ரைன் சரணடையவோ அல்லது எந்த நிபந்தனைகளையும் ஏற்கவோ மாட்டாது என்று உக்ரைன் வெளியுறவு அமைச்சர் ட்மிட்ரோ குலெபா தெரிவித்துள்ளார்.

கியேவின் மத்தியில் இருந்து 25 கிலோமீற்றர் தூரத்தில் ரஷ்ய தரைப் படை நிலைகொண்டிருப்பதோடு, கார்கிவ், செர்னிஹிவ், சுமி மற்றும் முக்கிய கருங்கடல் துறைமுக நகரான மரியுபோல் தொடர்ந்து முற்றுகையில் ஷெல் தாக்குதல்களுக்கு இலக்காகி வருவதாக பிரிட்டன் பாதுகாப்பு அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

ரஷ்ய தாக்குதல்கள் குறைந்திருப்பதாகவும் பல இடங்களில் படைகள் முன்னேறாமல் நின்றுவிட்டதாகவும் உக்ரைன் இராணுவம் குறிப்பிட்டுள்ளது. எனினும் அது பற்றிய விபரங்கள் வெளியிடப்படவில்லை. இதில் மரியுபோல் நகரின் நிலை மோசமடைந்துள்ளது. கடந்த 12 நாட்களாக முற்றுகையில் இருக்கும் அந்த நகரில் ரஷ்யா தொடர்ந்து ஷெல் குண்டுகளை வீசி வரும் நிலையில் குறைந்தது 1,582 பொதுமக்கள் கொல்லப்பட்டிருப்பதாக அந்த நகர சபை குறிப்பிட்டுள்ளது. நகரில் அடிப்படை பொருட்கள் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே காணப்படும் நிலையில் பொதுமக்களிடை திருட்டு மற்றும் வன்முறைகள் பதிவாவதாக ஐ.நா மனிதாபிமான விவகாரங்களின் ஒருங்கிணைப்பு அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

ஐரோப்பிய போர்: மோடி விளக்கம்

தற்போதைய போருக்கான தீர்வுக்கு உக்ரைன் மற்றும் ரஷ்யாவுக்கு இடையே நிலையான பேச்சுவார்த்தை மற்றும் அமைதிக்கு அழைப்பு விடுத்துள்ள இந்திய பிரதமர் நரேந்திர மோடி, இதில் இந்தியா நடுநிலை வகிப்பது பற்றியும் விளக்கியுள்ளார். "போரிடும் நாடுகளுடன் பொருளாதாரம், பாதுகாப்பு, கல்வி மற்றும் அரசியலில் இந்தியா ஒரு தொடர்பை கொண்டுள்ளது. இந்தியாவின் பல தேவைகள் இந்த நாடுகளுடன் தொடர்புபட்டுள்ளது" என்று புது டெல்லியில் பாரதிய ஜனதா கட்சி தலைமையகத்தில் உரையாற்றிய மோடி தெரிவித்தார்.

இந்தியாவின் வளர்ச்சி பற்றிய கணிப்பு உறுதி

2022–2023 நிதியாண்டுக்கான இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி 7.8 வீதம் இருக்கும் என்ற கணிப்பை கிறிசில் ஆய்வு நிறுவனம் மீண்டும் உறுதி செய்துள்ளது. கொவிட்–19 தொற்றின் லேசான மூன்றாவது அலை முன்கூட்டிய முடிவின் காரணமாக ஏற்படக் கூடிய எந்த ஒரு சாத்திமான நிலை மாற்றத்தையும் உக்ரைன் ரஷ்யாவுக்கு இடையிலான தற்போதைய பிரச்சினை இல்லாமல் செய்துள்ளது என்று அது குறிப்பிட்டுள்ளது. ஐரோப்பாவில் ஏற்பட்டுள்ள பதற்றம் சர்வதேச வளர்ச்சியை ஸ்தம்பிக்கச் செய்துள்ளதோடு எண்ணெய் மற்றும் பொருட்களின் விலையை அதிகரிக்கச் செய்துள்ளது.

"லிட்டில் ஹார்ட்ஸ்" க்கு 27 மில்லியன் ரூபா நன்கொடை வழங்கிய டயலொக் வாடிக்கையாளர்கள்

இடமிருந்து வலமாக: மனுசத் தெரண திட்டத் தலைவர் மகேஷ் ஜயவர்தன, டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி யின் வணிக மேம்பாட்டு முகாமையாளர் Group Loyalty ஷோன் வாண்டர்வோல், டயலொக் ஆசிஆட்டா பிஎல்சியின் Group Loyalty மற்றும் சாதன வர்த்தக பிரிவு சிரேஷ்ட பொது முகாமையாளர் அபேமால் குணசேகர, Little Hearts திட்டத்தின் இணைப்பாளர் டாக்டர் துமிந்த சமரசிங்க, மற்றும் தலைமைச் செயற்பாட்டு அதிகாரி / TV தெரணவின் நிறைவேற்றுப் பணிப்பாளர் மாதவ மடவல

இதய நோய்கள் மற்றும் தீவிர நோய்களால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு உதவும் வகையில், லேடி ரிட்ஜ்வே மருத்துவமனையில் 12 மாடிகள் கொண்ட இருதய மற்றும் தீவிர சிகிச்சை பிரிவை மேம்படுத்துவதற்கு ஆதரவாக, 300,000 க்கும் மேற்பட்ட Dialog வாடிக்கையாளர்கள் இணைந்து 'Little Hearts' திட்டத்திற்கு 2021 இல் 27 மில்லியன் ரூபாவினை Star Points ஊடாக நன்கொடை வழங்கியுள்ளார்கள். 2016 முதல், டயலொக் வாடிக்கையாளர்கள் விட்டில் ஹார்ட்ஸ் முன்முயற்சிக்கு Star Points ஊடாக ரூ.95 மில்லியனுக்கு அதிகவான தொகையை நன்கொடையாக வழங்கியுள்ளார்கள்.

இலங்கை குழந்தை மருத்துவர் கல்லூரி தலைமையில் (Sri Lanka College of Paediatricians) 'Little Hearts' திட்டத்தின் கீழ் லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் அமைக்கப்படவுள்ள புதிய கட்டிடத்தில் நான்கு இருதய சத்திரசிகிச்சை ஆய்வகங்கள், 100 க்கும் மேற்பட்ட இருதய, மருத்துவ மற்றும் நியோ-நேட்டல் தீவிர சிகிச்சை படுக்கைகள், மற்றும் பிறந்த குழந்தைகளின் தீவிர சிகிச்சை பிரிவுகள், எலும்பு மாற்று சிகிச்சை பிரிவு அதிநவீன இருதய பரிசோதனை மற்றும் பயிற்சி வசதிகளும் அமைக்கப்படவுள்ளன. கட்டுமான செலவு ரூ.2 கோடிக்கும் அதிகமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதன்போது உரையாற்றிய டயலொக் ஆசிஆட்டா பிஎல்சியின் செய்தித் தொடர்பாளர், "லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் 12 மாடிகளைக் கொண்ட இருதய மற்றும் பராமரிப்பு வளாகத்தின் நிர்மாணப் பணிகளை விரைவுபடுத்துவதற்கும் நிதி திரட்டுவதற்கும் Star Points ஐ நன்கொடையாக வழங்கி தாராள ஆதரவினை வழங்கியமைமது வாடிக்கையாளர்களுக்கு நாங்கள் நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம். இதய நோயுடன் போராடும் ஒவ்வொரு குழந்தையும் சிறப்பு மிக்க கவனிப்புக்கு தகுதியானவர் என்று நாங்கள் நம்புகிறோம். மேலும் இந்த காரணத்திற்கான ஒற்றுமையை வெளிப்படுத்தும் வகையில் அனைவரையும் ஒன்றிணைக்கும் வாய்ப்பிற்காக நாங்கள் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம்" என தெரிவித்தார்.

"விட்டில் ஹார்ட்ஸ் திட்டத்தின் இணைப்பாளர் டாக்டர் துமிந்த சமரசிங்க கருத்து தெரிவிக்கையில், "விட்டில் ஹார்ட்ஸ் தொண்டு நிறுவனத்துடன் கைகோர்த்து தங்கள் வாடிக்கையாளர்களின் Star Points ஐ நன்கொடை வழங்குவதற்கான தேசிய திட்டத்தினை முன்னெடுத்த டயலொக் ஆசிஆட்டாவிற்கு நாங்கள் நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம். இந்த தாராள நன்கொடையை வழங்க முன்வந்த அனைத்து டயலொக் வாடிக்கையாளர்களுக்கும் நாங்கள் குறிப்பாக நன்றிகளை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறோம். ஏனெனில் அவர்களின் ஆதரவு இல்லாமல் தேசத்தின் குழந்தைகளின் வாழ்க்கையில் எங்களால் மாற்றத்தை ஏற்படுத்த முடியாது. இலங்கையின் எதிர்கால சந்ததியினரின் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு தொடர்பான தேசிய சேவையை செயல்படுத்துவதற்கு Star Points ஊடாக ஒன்றாக இணைந்து நிதியளித்தலுக்கு மிகச்சிறந்த எடுத்துக்காட்டு" என தெரிவித்தார்.

Little Hearts திட்டத்திற்கு மேலதிகமாக, Dialog வாடிக்கையாளர்கள் Trail, SOS Children's Villages Sri Lanka, Helpage Sri Lanka, My Friend, UNICEF, Atlas SipSavi, CCC அறக்கட்டளை மற்றும் Ayati அறக்கட்டளை உட்பட பல குறிப்பிடத்தக்க தொண்டு நிறுவனங்களுக்கும் தங்கள் Star Points களை நன்கொடையாக வழங்கியுள்ளனர்.

சவூதியில் 81 பேருக்கு மரண தண்டனை

சவூதி அரேபியாவில் கடந்த சனிக்கிழமை ஒரே நாளில் 81 பேருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டு முழுவதும் நிறைவேற்றப்பட்ட மரண தண்டனையை விடவும் அதிகமாகும்.

இதில் பயங்கரவாதம் உட்பட பல கொடூரமான குற்றங்களில் குற்றங்காணப்பட்டவர்கள் இருப்பதாக சவூதி செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. மரண தண்டனைக்கு உள்ளாகியவர்களில் ஏழு யெமனியர்கள் மற்றும் ஒரு சிரிய நாட்டவரும் உள்ளனர். பலரும் நியாயமற்ற வழக்கு விசாரணைக்கு முகம்கொடுத்தவர்கள் என்று உரிமைக் குழுக்கள் கூறியபோதும் சவூதி அதனை நிராகரித்துள்ளது.

கொவிட்: சீனாவில் சாதனை அதிகரிப்பு

சீனாவில் கடந்த இரண்டு ஆண்டுகளில் இல்லாத அளவில் தினசரி கொரோனா தொற்று எண்ணிக்கை கடந்த சனிக்கிழமை 1,524 ஆக அதிகரித்துள்ளது.

வடகிழக்கின் சாங்சுன் நகரில் பொது முடக்கம் அமுல்படுத்தப்பட்டிருப்பதோடு அந்த நகரில் உள்ள ஒன்பது மில்லியன் மக்களுக்கும் கொரானா சோதனை நடத்தப்படவுள்ளது.

சீனாவில் ஏறக்குறைய 19 மாநிலங்களில் ஒமிக்ரோன், டெல்டா வகை திரிபுகள் ஏற்பட்டுள்ளன.

கொவிட் தொற்றை முழுமையாக துடைத்தொழிக்கும் கொள்கையை பின்பற்றும் நிலையில் தொற்றை கட்டுப்படுத்த கடுமையான கட்டுப்பாடுகளை விதித்து வருகிறது.

கொங்கோவில் ரயில் விபத்து: 60 பேர் பலி

தென் கிழக்கு கொங்கோ ஜனநாயக குடியரசில் இடம் பெற்ற ரயில் விபத்து ஒன்றில் குறைந்தது 60 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

லுவாலாபா மாகாணத்தில் உள்ள கிடன்டா மற்றும் புயொப்வே இடையிலான இந்த ரயில் கடந்த வெள்ளிக்கிழமை தடம்புரண்டுள்ளது. தண்டவாளத்தை விட்டு விலகி சாய்வாகச் சென்ற ரயில் விபத்துக்குள்ளாகியுள்ளது. "பத்து ரயில் பெட்டிகளில் ஏழு பள்ளம் ஒன்றில் விழுந்தது" என்று உள்ளூர் நிர்வாகி ஒருவர் ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார். இந்த சரக்கு ரயிலில் பயணிகள் சட்டவிரோதமாக சென்றுள்ளனர்.

புதிய கொரோனா திரிபு கண்டுபிடிப்பு

உலக சுகாதார அமைப்பு, டெல்டக்ரோன் என்ற புதிய கொரோனா திரிபு உருவாகியிருப்பதை உறுதிசெய்துள்ளது.

அது டெல்டா, ஒமிக்ரோன் வைரஸ் திரிபு வகைகளின் கலவையாக உருவெடுத்துள்ளது.

அமைப்பின் கொரோனா வைரஸ் வகை குறித்த ஆய்வுப் பிரிவின் பணிப்பாளர் மரியா வான் கெர்கோவ் இதனை உறுதிசெய்தார். அந்த வகை திரிபினால் பாதிக்கப்பட்டவர்கள் ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர். இருப்பினும், வைரஸ் வகை குறித்து கவலைப்படுவதா என்பதை இப்போது உறுதி செய்யமுடியாது என்று அமைப்பு கூறியது.

தற்போது சில சம்பவங்கள் பிரான்ஸ், இத்தாலி, நெதர்லாந்து ஆகிய நாடுகளில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் குறிப்பிட்டது. அதனுடன் தொடர்புடைய சுமார் 30 சம்பவங்களை அடையாளம் கண்டுள்ளதாக பிரிட்டன் சுகாதாரப் பாதுகாப்பு நிறுவனம் கூறியது.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2022 மார்ச் 14 திங்கட்கிழமை

தினகரன்
THINAKARAN
தினகரன்

தொழுகை நேரம்
14முதல் 18 வரை
சுபஹ் - 05.03
லுஹர் - 12.21
அஸர் - 03.35
மஃரிப் - 06.22
இஷா - 07.31

இன்றைய சுபதினம்
பிலவ வருடம் மாசி 30
ராகுகாலம் : பகல் : 07.30 - 09.00வரை
சுபநேரம் : காலை : 06.00 - 07.30வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சூன்ய

கொள்கலன் சரக்கு போக்குவரத்து கட்டணம் 60 வீதம் அதிகரிப்பு

கொள்கலன் சரக்கு போக்குவரத்திற்கான கட்டணத்தை அதிகரிக்க இலங்கை கொள்கலன் வாகன உரிமையாளர்கள் சங்கம் தீர்மானித்துள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள டொலரின் பெறுமதி வீழ்ச்சியின் காரணமாக, சகல பொருட்களின் விலைகளிலும் அதிகரிப்பு ஏற்பட்டு வருகின்றன.

அதற்கமைய இன்று முதல் நடைமுறைக்கு வரும் வகையில் கொள்கலன் சரக்கு போக்குவரத்திற்கான கட்டணம் 60 சதவீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் அடுத்தடுத்து விலையுயரும் பொருட்கள் மற்றும் சேவைகளினால் மக்கள் குழப்பத்திலும் விரக்தியிலும் வாழ்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

மின்சார சபைக்குள் மாபியா; எதையும் செய்ய முடியாத நிலை

மின்சார சபைக்குள் இருக்கும் மாபியா காரணமாக புதுப்பிக்கத்தக்க வலு சக்தியை ஊக்குவிக்க முடியாதுள்ளதாக அமைச்சர் ரோஹித்த அபேகுணவர்தன தெரிவித்தார்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த அமைச்சர் எரிபொருள் பயன்பாட்டை குறைக்க வேண்டும் என்றும் கோரினார்.

டொலர் அன்று 135 ரூபாவாக இருந்த போதும் எரிபொருள் கியூ இருந்தது.ஆனால் ஏன் பிரச்சினைகளை தீர்க்க முடியவில்லை. நுரைச்சோலை அனல் மின் நிலையம் அமைக்க முயன்ற போது எதிர்த்தார்கள். மஹிந்த ராஜபக்ஷ அன்று தைரியமாக முடிவு எடுக்காவிட்டால் 12 மணி நேரம் மின்வெட்டு அமுலாகியிருக்கும்.

நாட்டை மூடி வைத்தால் பொருளாதரம் வீழ்ச்சி அடையும். பல மாதம் நாடு மூடப்பட்டதால் அந்த நிலை ஏற்பட்டது. 2 வருடங்களாக வருமான வழிகள் மூடப்பட்டன. செலவு அதிகரித்தது. வீடுகளிலும் அவ்வானான நிலை வரும். இன்றுள்ள நெருக்கடி நிலையிலும் மக்களை வாழவைக்க அரசு நடவடிக்கை எடுத்தது. தடுப்பூசி கொள்வனவு செய்ய டொலரில் செலுத்த நேரிட்டது. எரிபொருள் கொள்வனவிற்கு 300 மில்லியன் டொலர் செலுத்தப்படுகிறது. எரிபொருள் நெருக்கடி பல நாடுகளிலும் ஏற்பட்டுள்ளது.

ஏனைய ஆசிய நாடுகளுடன் ஒப்பிடுகையில் குறைந்தளவு எரிபொருள் கட்டணம் இலங்கையிலே அறவிடப்படுகிறது. எரிபொருள் பயன்பாட்டை நாம் குறைக்க வேண்டும்.ஐரோப்பாவில் டீசல் 552 ரூபாவாகும். ஒருமாதத்தில் 150 வீதத்தினால் எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டது. இங்கு விலை அதிகரிக்க நாம் கோரவில்லை.

நாட்டை திறப்பதற்காகவே தடுப்பூசி வழங்க முன்னுரிமை வழங்கப்பட்டது. கொவிட் தொற்று தடிமல்போன்று குணமடைகிறது. இன்று அது தொடர்பில் விமர்சனம் கிடையாது, வருமான வழிகள் மீளத் திறக்கப்பட்டுள்ளன. கஷ்டத்துடன் மீள எழுந்து வருகிறோம்.

எனவே நாம் கவனமாக இந்த பிரச்சினைகளை கையாள வேண்டும்.

வெளிநாட்டில் பணி புரிவோர் அனுப்பும் ஒவ்வொரு டொலருக்கும் 38 ரூபா வீதம் ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்க அமைச்சரவை முடிவு செய்துள்ளது. ஏற்றுமதியாளர்களுக்கும் இவ்வாறே ஊக்குவிப்பு வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. அந்நியச் செலாவணியை பலப்படுத்தினாலே பிரச்சினைக்கு தீர்வு ஏற்படும். அப்பிள் முக்கியமா எரிபொருள் முக்கியமா என முன்னாள் அமைச்சர் ஒருவர் வினவியிருந்தார்.

06

தவக்கால சிந்தனை

துன்பத்தை எதிர்கொள்வோம்

இயேசுவை யூதர்கள் கொலை செய்வதற்காக தேடிக்கொண்டிருந்த அந்த கால கட்டத்திலே, இயேசு தன்னுடைய சீடர்களாகிய பேதுரு, யோவான், யாக்கோபு ஆகிய மூவரையும் கூட்டிக் கொண்டு ஒரு மலை உச்சிக்கு செபிக்கச் சென்றார்.

அந்த செப வேளையிலே மோசே, எலியா ஆகியோர் அங்கு பிரசன்னமாகி இயேசுவோடு உரையாடிக்கொண்டிருந்தனர். சிறிது நேரத்திலே அந்த காட்சி நிறைவுற்றது. அப்போது இயேசுவினுடைய சீடர்கள் இயேசுவை நோக்கி 'ஆண்டவரே

நாம் இங்கே இருப்பது நல்லது. உமக்கு ஒன்றும், மோசேக்கு ஒன்றும், எலியாவிற்கு ஒன்றுமாக மூன்று கூடாரங்களை அமைப்பமென சொன்னார்கள். அதாவது

இயேசுவினுடைய உயிருக்கு அச்சுருத்தல் இருக்கக் கூடிய ஒரு காலகட்டத்திலே விண்ணக மனிதர்களை இயேசு சந்திக்கிறார். இது இயேசுவினுடைய சீடர்களுக்கு ஒரு நம்பிக்கையை தருகிறது. நாம் இவர்களோடு இருந்தால் வர இருக்கக்கூடிய

துன்பத்திலிருந்து இயேசுவும் நாமும் தப்பித்துக் கொள்ளலாம் என்று. ஆகவே தான் இயேசுவை அந்த இடத்திலேயே அந்த மலையிலேயே இருக்க அவர்கள் வலியுறுத்துகிறார்கள். பல வேலைகளில் நாமும் இயேசுவினுடைய சீடர்களைப் போலத்தான் இருக்கிறோம். அதாவது நம்முடைய வாழ்க்கையிலே துன்பங்கள் வரும்போது, அவற்றிலிருந்து நாம் மறைந்து விட வேண்டும். அவற்றிலிருந்து நாம் விலகிச் செல்ல வேண்டும் அல்லது ஒளிந்து கொள்ள வேண்டும் என்று

விரும்புகிறோம். ஆனால் இயேசு சீடர்களுடைய அந்த எண்ணத்திற்கு மதிப்பு கொடுக்காமல் தான் எந்த பணிக்காக வந்திருக்கிறோமென உணர்ந்து மீண்டும் அந்த பணிக்கு அவர் செல்கிறார். துன்பத்தை எதிர்கொள்வதற்கு

தயாராகிறார். நாமும் துன்பங்களைக் கண்டு ஒளிந்து கொள்ளாமல் அந்த துன்பங்களுக்கு முகம் கொடுத்து அதன் மூலமாக வெற்றியைத் தேடிக் கொள்ள நம்முடைய வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக்கிக் கொள்ள முயற்சி செய்வோம்.

அருட் தந்தை அருண்ரெக்ஸ்...

நங்கூரமிடப்பட்டுள்ள கப்பலிலிருந்து:
இன்று விடுவிக்கப்படாவிட்டால் மீண்டும் கேஸ் தட்டுப்பாடு வரலாம்

லிற்றோ கேஸ் நிறுவனம் தெரிவிப்பு

(லோரன்ஸ் செல்வநாயகம்)

துறைமுகத்தில் நங்கூரமிடப்பட்டுள்ள கப்பலிலிருந்து இன்றைய தினத்திற்குள் சமையல் எரிவாயுவை விடுவித்துக் கொள்ள முடியாமற்போனால், நாட்டில் மீண்டும் பாரிய கேஸ் தட்டுப்பாடு உருவாகும் என லிற்றோ கேஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இறுதியாக கப்பலிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ள எரிபொருள் தொகை இன்றைக்கு மட்டுமே போதுமானதாக உள்ளதாகவும் அந்த நிறுவனத்தின் சிரேஷ்ட உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

நாட்டின் அன்றாட சமையல் எரிவாயுவின் தேவை 1,100 மெற்றிக் தொன் ஆக உள்ள நிலையில், கப்பலிலிருந்து இறுதியாக 3600 மெட்ரிக் தொன் சமையல் எரிவாயு விடுவிக்கப்பட்டுள்ளது. இது மூன்று தினங்களுக்கு மாத்திரமே போதுமானது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அன்றாடம் 12.5 கிலோ எரிவாயு சிலிண்டர் 80.000 தேவைப்படுவதாகவும் 5 கிலோ கிராம் சமையல் எரிவாயு சிலிண்டர் 15,000 தேவைப்படுவதாகவும் அத்துடன் 2.3 கிலோகிராம் ரக எரிவாயு சிலிண்டர்கள் 16,000 தேவைப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.(ஸ)

மஹரகமவில் பங்களாதேஷ் பௌத்த மதகுரு கடத்தல்

பிலியந்தலை – மடபான பிரதேசத்தில் உள்ள விகாரை ஒன்றில் தங்கியிருந்த பங்களாதேஷை சேர்ந்த பிக்கு ஒருவர் கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் பொலிஸார் பரந்தளவில் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

மஹரகமவில் நேற்று முன்தினம் (12) பிற்பகல் ஓட்டோவில் வந்த குழுவினரால் இப்பிக்கு கடத்திச் செல்லப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.குறித்த பிக்கு முறைப்பாடொன்று தொடர்பில் சாட்சியமளிக்கச் சென்றிருந்த போதே, சந்தேகநபர்கள் அவரது முகத்தை மூடிக் கடத்திச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பின்னர் சந்தேகநபர்கள் பிக்குவை ஹாலி – எல பிரதேசத்தில் கைவிட்டு சென்றுள்ளனர். அங்கிருந்த முச்சக்கர வண்டி சாரதி ஒருவர் பொலிஸாருக்கு அறிவித்ததை அடுத்து, அந்த மதகுரு கண்டுபிடிக்கப்பட்டதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.இதுதொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை

ஐக்கிய மக்கள் சக்தி நடவடிக்கை

(லோரன்ஸ் செல்வநாயகம்)

நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றை கொண்டுவருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக, ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

விரைவில் நம்பிக்கையில்லா பிரேரணையைக் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அது தொடர்பில் தற்போது கட்சியின் உள்ளக மட்டத்தில் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி மற்றும் அதனை முகாமைத்துவம் செய்வதற்கு எந்த வித நடவடிக்கையும் எடுக்காமை, நாட்டின் பொருளாதார நிலைமை தொடர்பில் பாராளுமன்றத்திற்கு அறிவிக்காமை மற்றும் அதற்கான பதிலை வழங்காமை உள்ளிட்ட விடயங்களை முன்வைத்தே நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டு வருவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதற்கிணங்க பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு மற்றும் கட்சியின் முகாமைத்துவக் குழு ஆகியவை பேச்சுவார்த்தை நடத்தி விரைவில் அது தொடர்பான தீர்மானத்தை மேற்கொள்ளும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(ஸ)

உயர்தர பெறுபேறு மீளாய்வு செய்ய
இணைய வழி ஊடாக மாத்திரமே விண்ணப்பம் சமர்ப்பிக்கலாம்

க.பொ.த சாதாரண தரப் பரீட்சையின் (2020) செயன்முறைப் பரீட்சை தொடர்பான பாடங்களுக்குரிய பெறுபேறுகளை மீளாய்வு செய்வதற்கான விண்ணப்பங்கள் இணையவழி (Online) ஊடாக மாத்திரமே சமர்பிக்கவேண்டும் என்று பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது. 2022.03.10 ஆம் திகதி முதல் 2022.03.18 ஆம் திகதி வரை இதற்கான விண்ணப்பங்களை இணையவழி ஊடாக (Online) சமர்பிக்க முடியும்.

USS FITZGERALD எனும் அமெரிக்க கடற்படை கப்பல் நேற்று (13) திருகோணமலை துறைமுகத்தை வந்தடைந்தது. 160 மீற்றர் நீளமுள்ள இந்த போர்க் கப்பலில் 300 பணியாளர்கள் உள்ளனர். இந்த கப்பல் மார்ச் (16)இல் இலங்கையிலிருந்து புறப்பட உள்ளது.

தினகரன்
THINAKARAN
35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321
பிலவ வருடம் மாசி மாதம் 30ம் நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 ஷஃபான் பிறை 10

குறள் தரும் சிந்தனை

முன்னுறக் காவாது இழுக்கியான் தன்பிழை
பின்னாறு இரங்கி விடும்.

முன்கூட்டியே சிந்தித்துத் தன்னைக் காத்துக் கொள்ளத் தவறியவன், துன்பம் வந்த பிறகு தன் பிழையை எண்ணிக்கவலைப்பட நேரிடும்.

ஊடகவியலாளர்கள் முன்பாக உள்ள தார்மிகப் பொறுப்பு

இன்றைய நவீன அறிவியல் யுகத்தில் முழு உலக மும் ஒரு கிராமமாக மாறியுள்ளது. உலகின் ஒரு மூலையில் இருப்பவர் மற்றொரு மூலையில் நடக்கும் நிகழ்வை அதே நேரத்தில் அறிந்து கொள்ளும் வசதி உருவாகியுள் ளதோடு, உலகின் மற்றொரு மூலையில் இருப்பவர் இன்னொரு மூலையில் இருப்பவருடன் ஒரே நேரத் தில் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளவும் கூடிய வகையில் உலகம் சுருக்கம் அடைந்துள்ளது.

இவ்வாறு உலகம் ஒரு கிராமமாக மாறுவதற்கு தகவல் தொடர்பாடல் சாதனங்கள் பெரிதும் வழிவகுத் துள்ளன. அந்தளவுக்கு இத்துறை அபரிமித வளர்ச்சி அடைந்திருக்கின்றது. இவ்வாறான ஒரு வளர்ச்சியை உலகம் முன்னொரு போதுமே கண்டிருக்கவில்லை. இன்றைய காலகட்டத்தில் தகவல் தொடர்பாடல் துறை யானது எந்தவொரு விடயத்திலும் தீர்மான சக்தியாக விளங்கிக் கொண்டிருக்கின்றது. அதிலும் ஜனநாயக நாடொன்றில் தகவல் தொடர்பாடல் துறை நான்கா வது தூணாகத் திகழ்கின்றது.

அந்த வகையில் இந்நாட்டிலும் இத்துறை பெரிதும் வளர்ச்சியடைந்துள்ளது. தகவல் தொடர் பாடல் துறையின் அடிப்படையாக விளங்கும் ஊடக சுதந்திரம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கு இந் நாட்டின் வெகுஜன ஊடகங்களே நல்ல சாட்சிய மாக விளங்கிக் கொண்டிருக்கின்றன. கொவிட் 19 தொற்றின் விளைவாக நாடு பொருளாதார சவா லுக்கு முகம் கொடுத்துள்ளது. இதன் காரணத்தி னால் பலவிதமான பொருளாதார நெருக்கடிகளை நாடு எதிர்கொண்டுள்ளது. இந்த நெருக்கடிகளின் விளைவுகளையும் தாக்கங்களையும் மக்கள் மத்தி யில் கொண்டு செல்வதில் ஊடகங்கள் முக்கிய பங் காற்றி வருகின்றன.

கொவிட் 19 தொற்றினால் நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிகள் பாதிப்பு மிக்கவைாக இருந்த போதிலும், அவற்றை ஊடகவியலாளர் கள் சுதந்திரமாக வெளிப்படுத்த இடமளிக்கப்பட் டுள்ளது. அவை தொடர்பில் ஊடகவியலாளர்கள் எவ்வித தடங்கல்களுக்கும் உள்ளாவதில்லை. தற் போதைய ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் நாட்டு மக்களுக்கு அளித்த வாக்குறுதியின்படி, ஊடக சுதந்திரம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

ஆன போதிலும், 'தனிநபர் தரவு பாதுகாப் புச் சட்டம்' அண்மையில் பாராளுமன்றத்திற்கு கொண்டு வரப்பட்ட சமயம், 'இது ஊடக சுதந்திரத் தைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கை' என்று எதிர்க்கட்சியினர் குறிப்பிட்டனர். ஆனால் ஊடக சுதந்திரத்தைக் கட்டுப்படுத்த வேண்டிய தேவை அர சாங்கத்திற்கு இருப்பதாக தெரியவில்லை என்பது தான் அரசியல் விமர்சகர்களின் கருத்தாக உள்ளது.

அதேநேரம் இன்றைய டிஜிட்டல் அறிவியல் யுகத் தில் ஊடகச் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்த வேண்டிய தேவை ஜனநாயக நாடொன்றுக்கு இருக்குமென வும் எதிர்பார்க்க முடியாது. அதனால் எதிரணியின ரின் இக்கூற்றை இந்நாட்டு ஊடக சமூகமும் ஏற்றுக் கொள்வதாக இல்லை. அற்ப அரசியல் இலாபம் தேடும் நோக்கில் எதிரணியினர் முன்வைத்த கதை யாகவே இதனை மக்கள் பார்க்கின்றனர்.

இவ்வாறான சூழலில் கடந்த சனிக்கிழமை நடை பெற்ற ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் 25 வது வருடாந்த மாநாட்டில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட வெகுஜன ஊடக அமைச்சர் டளஸ் அழகப்பெரும, 'ஊடகவியலாளர்களின் பேனா வுக்கு நான் ஒரு போதும் தடை விதிக்கப் போவ தில்லை' என்று குறிப்பிட்டுள்ளதோடு, 'இந்நாட்டின் ஊடகத் துறையை மேம்படுத்துவதற்கு முன்னெடுக் கப்படும் திட்டங்களையும் எடுத்துக் கூறியுள்ளார். அமைச்சரின் இந்த அறிவிப்பு எதிரணியினருக்கு நல்ல பதிலடியாகும்.

தற்போதைய அரசாங்கம் மக்களின் நலன்க ளுக்கு எப்போதும் முன்னுரிமை அளித்து செயற் பட்டு வருகின்றது. அவ்வாறான ஒரு அரசாங்கம் எதிரணி குறிப்பிடுவது போன்று, ஊடக சுதந்திரத் தைக் கட்டுப்படுத்தவோ மட்டுப்படுத்தவோ ஒருபோ தும் விரும்பாது. அதனை அமைச்சரின் அறிவிப் பும் எடுத்துக் காட்டுகின்றது.

ஆனாலும் ஊடகவியலாளர்கள் பொறுப்புடனும் பக்குவத்துடனும் செயற்பட வேண்டிய பொறுப்பு ஊடகவியலாளர்கள் முன்பாக உள்ளது. இப்பொ றுப்பை உணர்ந்து செயற்படுவது மிகவும் அவசி யம். இதைவிடுத்து கையில் பேனா இருக்கின்றது என்பதற்காக, அதனை பொறுப்பற்ற முறையில் பயன்படுத்தலாகாது. அவ்வாறு பாவிக்கும் போது தோற்றம் பெறும் விளைவுகள் எல்லா மட்டங்களி லும் தாக்கங்களையும் பாதிப்புக்களையும் ஏற்ப டுத்தி விடலாம்.

ஆகவே நாடும் மக்களும் நன்மை பெறும் வகையில் ஊடகவியலாளர்கள் செயற்பட வேண்டும். அதற்கு ஏற்ப வெகுஜன ஊடகங்களை அவர்கள் பயன்படுத்த வேண்டும், அதுவே நாட்டின் ஊடக சுதந்திரத்தைப் பலப்படுத்தி மேம்படுத்த வழிவகுக் கும்.

editor.tkn@lakehouse.lk

ஊடகவியலாளர்களின் பேனாக்களுக்கு நான் தடைவிதிக்கப் போவதில்லை

ஊடகவியலாளர்களின் பேனாக்களுக்கு நான் ஒரு போதும் தடைவிதிக்கப் போவதில்லை. இந்த அமைச்சு எனக்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ளது. அதனை எவ்வித தடங்கலுமின்றி சீராக எடுத்துச் செல்ல வேண்டிய பொறுப்பு எனக்கு உள்ளது. இந்நாட்டில் ஊடகவியலாளர்களுக்கு ஊடகச் சுதந்திரம் உள்ளது என்று ஊடகத்துறை அமைச்சர் டலஸ் அழகப் பெரும தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடை பெற்ற ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் வருடாந்த மாநாட்டில் உரை யாற்றிய ஊடக அமைச்சர் டலகஸ் அழ கப்பெரும இவ்வாறு தெரிவித்தார்.

அமைச்சர் அங்கு உரையாற்றுகையில் மேலும் தெரிவித்த தாவது:

"இலங்கையில் ஊடகத்துறைக்கென தனியானதொரு அரச நிறுவனம் இல்லை. ஊடகக் கல்வியைப் பயிலுவதற்கும், பயிற்சி பெறுவதற்கும் அரச நிறுவனமொன்று இந்த நாட்டில் இல்லை. பாடசாலைகளில் உயர்தரத் தில் ஊடகக் கல்விக்கென தனியான பாடம் கற்பிக்கப்படுகின்றது. உலகில் உள்ள சகல நாடுகளிலும் ஊடகத்துக் கென தனியான பல்கலைக்கழகங்கள் உள்ளன. ஆனால் எமது நாட்டில் அவ் வாறானதொரு ஊடக கற்கை நிலையம் இல்லை. அதனைக் கருத்திற் கொண்டு இந்த நாட்டில் உள்ள ஊடகம் சம்பந்த மான பல்கலைக்கழக பீடங்கள் மற்றும் ஊடக நிறுவனங்களின் தலைவர்களைக் கொண்ட அமைப்பொன்றை ஏற்படுத் தியுள்ளேன். அவர்கள் கடந்த மாதம் கூடி இவ்விடயமாக ஆராய்ந்தார்கள். மிக விரைவில் தனியான அரச ஊடகக் கற்கை நிறுவனமொன்றை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளேன்.

இலங்கையில் உள்ள பாடசாலைக ளில் நான் ஓர் சிறந்த பௌத்தனாகவும், சிறந்த இந்துவாகவும், சிறந்த கிரிஸ்த வராகவும், சிறந்த முஸ்லிமாகவும் வரு வதற்கே ஒவ்வொரு பிரஜையினதும் சிந்தனை உள்ளது. ஆனால் நான் ஒரு சிறந்த இலங்கையன் என்ற சிந்தனை இல்லை.

உலகில் அரசியல் தலைவர்களை யும் அரசாங்கத்தினையும் ஆட்சிக்குக் கொண்டு வருவது அரசியல் கட்சிகள் அல்ல ஊடக நிறுவனங்கள் ஆகும். ஆக வேதான் இந்த நாட்டில் ஊடக சுதந்தி ரம், சட்டம் பற்றி அண்மையில் அமைச் சர்களான அலி சப்ரி, நாமல் ராஜபக்ஷ ஆகியோர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினேன். ஊடகவியலாளர்கள் சுதந்திரமாக தனது பேனாவைப் பாவிப் பதற்கு ஊடகச் சுதந்திரம் இருத்தல் வேண்டும். நான் ஒரு பத்திரிகையாளனா கவே எனது தொழிலை ஆரம்பித்தேன். நான் ஒருபோதும் நாம் எழுதும் பேனாக் களுக்கு தடைவிதிக்கப் போவதில்லை. இந்த அமைச்சு எனக்கு பொறுப்பளிக் கப்பட்டுள்ளது. அதனை எவ்வித தடங்களுமின்றி சீராக எடுத்துச் செல்ல வேண்டிய பொறுப்பு எனக்கு உள்ளது".

ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் வருடாந்த மாநாட்டில் ஊடகத்துறை அமைச்சர் டலஸ் அழகப்பெரும

இவ்வாறு அமைச்சர் தனது உரையில் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் 25 ஆவது ஆண்டினை முன்னிட்டு 'மீடியா டிரக்ரி' ஒன்றும் வெளி யிட்டு வைக்கப்பட்டது. இம்மா நாட்டிற்கு இந்திய பாராளுமன்ற உறுப்பினரும், இந்திய யூனியன் முஸ்லிம் லீக்கின் தமிழ்நாடு மாநில துணைத் தலைவருமான கே. நவாஸ்கனி கௌரவ அதிதி யாக கலந்து கொண்டார்.

இவ்வருடத்தின் மீடியா போரத்தின் தலைவியாக சிரேஷ்ட ஊடகவியலாளர் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தின் சேவையாற்றியவ ருமான ஓய்வு பெற்ற ஆசிரியை ஜனாபா புர்ஹான் பீ இப்திகார் தெரிவானார்.

பிஸ்ரின் மொஹமட் செய லாளராகவும், பொருளாளராக சிஹார் எம். அனீஸும் தெரிவாகினர். 18 பேர் கொண்ட நிர்வாக உறுப்பினர் சபையும் தெரிபு செய்யப்பட்டது. போரத்தின் புதிய யாப்பின் திருத்தமும் இடம்பெற்றது.

தெஹிவளை - கல்கிசை விசேட நிருபர்)

உலகத் தமிழர் வம்சாவளி அமைப்பின் சர்வதேச மாநாடு; 'சாதனைத் தமிழன் விருது' பெற்றார் கலாநிதி வி. ஜனகன்

உலகத் தமிழர் வம்சாவளி அமைப்பின் எட்டாவது ஆண்டு சர்வதேச மாநாட்டு நிகழ்வில் 2021 ஆம் ஆண்டுக்கான சாதனைத் தமிழன் விருதை கலாநிதி வி. ஜனகன் பெற்றுக் கொண்டார். தமிழ் நாடு அமைச்சர் கே.ரி.மஸ்தான் அவர் கள் கைகளில் இருந்து ஜனகன் இந்த விருதைப் பெற்றுக் கொண்டார்.

இலங்கை பாராளுமன்ற கௌரவ உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் மற்றும் இந்தியாவின் VIT பல்கலைக்கழகத்தின் தலைவர் கலாநிதி ஜி. விஸ்வநாதன் ஆகி யோரின் முன்னிலையில் இந்த கௌரவ விருது வழங்கப்பட்டது.

உலகத் தமிழர் வம்சாவளி அமைப் பானது ஆண்டு தோறும் உலகம் முழு வதும் பரந்து வாழும் தமிழர்களை ஒன்றிணைத்து சர்வதேச மாநாடுகளை நடத்தி திறமையான தமிழர்களை அடை யாளப்படுத்துவதுடன், அவர்களுக்கான விருதுகளையும் வழங்கி வருகின்றது. அந்த வகையில் 2021 ஆம் ஆண்டுக் கான சர்வதேச மாநாடு சென்னையில் சர்வதேச வர்த்தக மண்டபத்தில் 11/03/2022 இல் நடைபெற்றது. இந்த மாநாட் டில் உலகின் பல பாகங்களில் இருந்து தமிழ்த் தலைவர்களும், தமிழ் வர்த்தகப் பிரமுகர்களும் மற்றும் கல்வியாளர்க ளும் பங்குபற்றியிருந்தார்கள்.

இந்த நிகழ்வில் இலங்கையில் இருந்து பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஊடத்துறை சார்ந்த பிரதானிக ளும் பங்குபற்றியிருந்தார்கள்.

கலாநிதி வி. ஜனகன் அவர்களின் பெயரை சாதனைத் தமிழன் விருதுக்கு உலகத் தமிழர் வம்சாவளி அமைப்பின் தலைவர் செல்வக்குமார் பரிந்துரை செய் திருந்தார். இந்த நிகழ்வில் இலங்கை உட்பட உலகின் பல நாடுகளில் இருந்து வந்திருந்த தமிழர்கள் பல்வேறு துறை களில் விருதுகளை பெற்றுக் கொண் டார்கள் என்பது இங்கு சிறப்பான விட யமாகும். இந்த நிகழ்வில் பல்வேறு கலைநிகழ்வுகளும் ஒன்றுகூடல்களும் இடம்பெற்றன. கடந்த எட்டு ஆண்டு களாக உலகில் பல்வேறு நாடுகளில் வாழும் தமிழர்களை அடையாளப்ப டுத்தி அவர்களின் திறமைகளை பறை சாற்றும் வகையில் விருதுகளையும் கௌரவங்களையும் உலகத் தமிழர் வம் சாவளி அமைப்பு வழங்கி வருகின்றது. மேலும் இந்தச் செற்பாடு இனிவரும் ஆண்டுகளிலும் தொடரும் என இந்த அமைப்பின் தலைவர் செல்வக்குமார் மேற்படி நிகழ்வில் குறிப்பிட்டார்.

தமிழர்கள் எங்கிருந்தாலும் இடர் நேரும் போது காப்பாற்றுவோம்!

தமிழர்கள் எங்கு இருந்தாலும், அவர்களுக்கு இடர் நேரும் போது அவர்களைக் காப்பாற்றுவோம் என தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ் டாலின் உறுதியளித்துள்ளார்.

சென்னையில் நடைபெற்ற நிகழ்ச் சியொன்றில் பேசிய அவர், "தமிழர் என்றாலே நமக்கெல்லாம் ஒரு உணர்வு வருகிறது. உள்ளூர் தமிழராக இருந்தா லும், வெளியூர் தமிழராக இருந்தாலும் சரி அந்த உணர்வை மாற்ற முடியாது. இந்தியாவிலேயே தமிழ்நாடு மட்டும் தான் உக்ரைனில் தவிக்கும் மாணவர் களை மீட்க குழுவை அமைத்தது. அங்கு சென்று 2,000 தமிழ் மாணவர்களை மீட்டு வந்தோம். எங்கு இருந்தாலும் தமி ழர்களை காப்பாற்றும் இயக்கம் தி.மு. கதான்" என்று ஸ்டாலின் மேலும் தெரி வித்தார்.

தமிழக முதல்வர் ஸ்டாலின் அளித்த உறுதி

உக்ரைன் மீது ரஷ்யா நடத்தி வரும் தாக்குதல் காரணமாக அந்நாட்டில் தங்கி யிருந்த மாணவர்கள் உட்பட ஏராளமான வர்கள் கடும் இன்னல்களுக்கு ஆளாகி னர். குறிப்பாக மருத்துவம் படிப்பதற்காக உக்ரைனுக்கு சென்ற இந்திய மாணவர் கள் செய்வதறியாது தவித்து உதவி கோரி வீடியோக்களை வெளியிட்டு வந்தனர்.

கர்நாடகா மற்றும் பஞ்சாப்பைச் சேர்ந்த 2 மாணவர்கள் ரஷ்யாவின் தாக்குதல்களில் கொல்லப்பட்டனர். அங்கு மருத்துவம் உள்ளிட்ட உயர்கல்வி கற்பதற் காக சென்ற தமிழ்நாடு மாணவர் களின் பெற்றோரும் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் கோரிக்கை மனுக்களை வழங்கி னர்.

இந்திய அரசும் 'ஒப்பரேசன் கங்கா' என்ற பெயரில் சிறப்பு விமானங்கள் மூலம் இந்திய மாணவர்களை மீட்கும் பணியில் ஈடுபட்டது.

இதனிடையே, உக்ரைனில் சிக்கி இருக் கும் தமிழ்நாடு மாணவர்களை மத்திய அரசு மீட்க வேண்டும் என வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு முதல மைச்சர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதி னார். தமிழ்நாடு மாணவர்கள் உக்ரைனில் சிக்கி இருப்பதாவும் அவர் தனது கடிதத் தில் குறிப்பிட்டு இருந்தார். இதனை அடுத்து உக்ரை னிலிருந்து ருமேனியா, போலந்து, ஹங்கேரி ஆகிய நாடுகளுக்கு தப்பிச் சென்ற தமிழக மாணவர் களும் பல்வேறு குழுக் களாக விமானங்களில் அழைத்து வரப்பட்டனர். நேற்றுமுன்தினம் உக் ரைனிலிருந்து சென்னை விமான நிலையம் வந் தடைந்த தமிழ்நாடு மாணவர்களின் கடைசி குழுவை முதலமைச்சர் மு.க.ஸ் டாலின் நேரில் சென்று வரவேற்றார். அதன் பின்னர் மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கருடன் தொலைபே சியில் தொடர்பு கொண்ட முதலமைச் சர் மு.க.ஸ்டாலின் உக்ரைனில் சிக்கித் தவித்த தமிழ்நாடு மாணவர்களை பத்தி ரமாக அழைத்து வந்ததற்கு நன்றி தெரி வித்தார்.

இதுகுறித்து ட்விட்டரில் பதிவிட் டுள்ள அ.தி.மு.க இணை ஒருங்கிணைப்பாளர் எடப்பாடி பழனிசாமி, "தமிழக மாணவச் செல் வங்களை மீட்டு தாயகம் அழைத்து வந்த பிரதமர் நரேந்திர மோடி அவர்க ளுக்கும், வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய் சங்கருக்கு நன்றியினை தெரிவித்துக் கொள்கி றேன்" எனக் குறிப்பிட்டு இருக்கிறார். தமிழ்நாடு மாணவர்களை மீட்க தி.மு.க அரசு தனியாக குழுவை அமைத்து, உதவி எண்களை அறிவித்து தொடர்ந்து பல்வேறு உதவிகளை செய் ததுடன் மத்திய அரசுக்கு பல்வேறு வகைகளில் அழுத்தம் கொடுத்து வந்தது. ஆனால், எடப்பாடி பழனிசாமி மாநில அரசை குறிப்பிடாமல் மத்திய அரசை மட்டும் வாழ்த்தி இருந்தார்.

இந்த நிலையில்தான், தமிழ்நாடு முத லமைச்சர் இவ்வாறு பேசி இருக்கிறார்.

இந்திய ஏவுகணை பாகிஸ்தானின் எல்லைக்குள் சென்றது எவ்வாறு?

பாகிஸ்தான் எல்லைக்குள் இந்திய ஏவுகணை பாய்ந்தது எவ்வாறு? ஏவுகணை ஒன்று எப்படி தவறு தலாக விண்ணில் ஏவப்பட்டது என்பன தொடர்பான விவரங்கள் வெளியாகி உள்ளன. இந்தியாவின் சூப்பர் சோனிக் ஏவுகணை ஒன்று திடீரென பாகிஸ்தான் எல்லைக்குள் வந்ததாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது. இதை இந்திய இராணு வமும் ஏற்றுக் கொண்டுள்ளது.

இந்தியாவிற்குச் சொந்தமான சூப்பர் சோனிக் ஏவுகணை 124 கிலோ தூரம் பாகிஸ்தான் எல்லைக்குள் புதன்கிழமை மாலை சென்றது. 40 ஆயிரம் அடி உயரத் தில் இந்த ஏவுகணை பறந்து, பாகிஸ்தான் எல்லைக்குள் சென்றுள்ளது. ஆனால் இதில் குண்டுகள், ஆயுதங்கள் இல்லை என்பதால் சேதம் ஏற்படவில்லை என்று பாகிஸ்தான் இராணுவத்தின் InterServices Public Relations பிரிவின் இயக்குனர் பாபர் இப்திக்கார் பேட்டி அளித்துள்ளார்.

இந்த ஏவுகணை ஏவப்பட்ட நேரத் தில் இருந்து 6.46 நிமிடங்கள் இது பறந் துள்ளது என்று அவர் குறிப்பிட்டுள்ளார். இந்தியா இந்த செயலுக்கு வருத்தம் தெரி வித்துள்ளது. இந்த நிலையில் பாகிஸ் தான் எல்லைக்குள் இந்திய ஏவுகணை பாய்ந்தது எப்படி? ஏவுகணை ஒன்று எப்படி தவறுதலாக விண்ணில் ஏவப் பட்டது என்பது தொடர்பான விபரங்கள் வெளியாகி உள்ளன.

இந்த ஏவுகணை பிரம்மோஸ் ஏவுகணை ஆகும். இது ஆயுதம் பொருத்தப்பட்டது அல்ல. பயிற்சிக்காக தயார் நிலையில் இருந்த practice version பிரம்மோஸ் ஆகும். இந்தியாவின் சிர்சா ஏவுகணை தளத்தில் இருந்து இது ஏவப்படவில்லை. மாறாக பிரம்மோஸ் ஏவுகணை இரகசிய செய்மதி ஏவுதளம் ஒன்றில் இருந்துதான் ஏவப்பட்டு இருக்கிறது. இந்த ரொக் கெட்டை வேண்டுமென்றே சோதனை செய்யவில்லை. inspection செய்யும் போதே இப்படி நடந்துள்ளது.

"ஏவுகணை சோதனை என்றால் அதை அந்தமான் நிக்கோபார் மையத்தில் இருந்தே செய்திருப்போம். இதைப் பற்றி உயர்மட்ட கமிட்டி விசாரணை நடத் தப்பட்டுள்ளது. இந்தியா இபெ் பற்றி ரொக்கெட் ஏவப்பட்ட உடன் பாகிஸ் தானிடம் தெரிவித்து விட்டது. ஆனால் நாங்கள் உரிய நேரத்தில் தகவல் தெரி விக்கவில்லை என்று பாகிஸ்தான் மேஜர் ஜெனரல் பாபர் கூறுகிறார். பாகிஸ்தான் எங்களின் ஏவுகணை பாதையை கணிக் கவும் தவறி விட்டது. எங்கள் ஏவுகணை எப்படி செல்கிறது என்பதை அவர்களால் கணிக்க முடியவில்லை. ஏவுகணைகளை கணிக்கும் அல்லது எதிர் தாக்குதல் நடத் தும் ஆற்றல் அவர்களுக்கு இல்லை என்பதை இது உணர்த்துகிறது. 124 கிலோ மீட்டர் தூரத்திற்கு பாகிஸ்தான் எல்லைக்குள் பிரம்மோஸ் சென்றுள்ளது. 3.44 நிமிடம் நேரம் இருந்தும் பாகிஸ் தானால் அழிக்க முடியவில்லை. அவர் களின் வான்வெளி பாதுகாப்பு சிறப்பாக இல்லை என்பதை இது உணர்த்துகிறது" என்று இந்திய தரப்பு செய்தி வெளியிட் டுள்ளது.

அம்பாறை, அக்கரைப்பற்று

பனங்காடு மாதுமை உடனுறை ஸ்ரீ பாசுபதேசுவரர் ஆலயப் பெருவிழா

அம்பாறை மாவட்டித்திலே அழகிய அற்புதங்கள் நிறைந்த வரலாற்று சிறப்பு மிக்க ஆலயங்கள் பல உள்ளன. ஆயினும் அனைத்திற்கும் சிகரம் வைத்தால்போல் அழகிய சிற்பக்கலையுடன் சகலவித பரிவார மூர்த்திகளுடனும் இரு தள விமானங்களுடனும் விளங்கும் ஒரே ஒரு சிவாலயம் என்ற பெருமை இத்தலத்திற்கே உரியது .

தற்போது இவ்வாலயம் பல வெளிநாட்டுத் தன வந்தர்களின் நண்கொடைகள் மூலமும் ஊர் மக்களின் பங்களிப்பின் மூலமும் செப்பனிடப்பட்டு தலைநகரில் உள்ள ஆலயத்திற்கு இணையான ஒரு சிவத்தலமாக காட்சி தருகின்றது.

உலகப் பரம் பொருளாம் சிவபெருமானை முழு முதற் கடவுளாகக் கொண்டு வழிபடும் சமயம் சைவசமயமாகும். "நமசிவாய என்னும் சொல்லின் முழுவடிவம் சிவபெருமான்". இதை ஞானசம்பந்தர் தனது திருவாக்கில் "நாதன் நாமம் நமசிவாயவே" என்று தேவாரப் பாடலில் பாடியிருப்பது நோக்கத்தக்கது.

சிவனே முழுமுதற் கடவுள். அவரது நமசிவாய மந்திரத்தினை ஓதினால் இன்னல்கள் தீரும்.

திருநாவுக்கரசு நாயனாரை கல்லில் கட்டி கடலில் வீசியெறிந்தபோது அவர் சிவனை மனதினில் நிறுத்தி "சொற்றுனை வேதியன் ஜோதிவானவன்"எனும் பாடலை பாடி மீண்டார்

உலகையே தனது ஒற்றைக்கால் பெரிவிரலின் கீழ் கட்டுப்படுத்தி வைத்திருக்கும் ஈசனின் அற்புதங்கள் பல நிறைந்த ஆலயங்களுள் ஒன்று இவ்வாலயம்.

இவ்வாலயம் ஈழத்தின் கிழக்கு பகுதியில் கண்ணகி வழிபாடு ஆரம்பமாவதற்கு முன்னரே தோற்றம் பெற்றதாக சரித்திரவியலாளர்கள் கூறுகின்றனர்.

ஆரம்பத்தில் இங்கு ஐயனார் ஆலயம் அமைக்கப்பட்டு வழிபாடுகளில் மக்கள் ஈடுபட்டு வந்துள்ளனர். இதற்குச் சான்றாக இவ் வாலயத்திற்கு முன்னால் உள்ள நெற்காணிகள் ஐயனார் வெளி எனவும் அண்மித்த குளம் ஐயனார் குளம் எனவும் இன்று வரை பேசப்படுகின்றது

ஏறக்குறைய நூறு ஆண்டுகளுக்கு முன்னர் தென்னிந்தியாவிலிருந்து முப்பெரும் சித்தர்கள் இலங்கை மண்ணிற்கு வருகை தந்திருந்தனர். இவர்களில் ஒருவரே கிழக்கு காரைதீவில் சமாதியடைந்த சித்தானைக்குட்டி சுவாமிகள் (சித்தர்) ஆவார்.

இவர் தனது வழிபாட்டின் நிமிர்த்தம் பனங்காட்டிற்கும் வருகை தந்திருந்தார்.

இந்த சித்தானைக்குட்டி சுவாமிகள் இந்த ஐயனார் ஆலயத்தில் பல மாதங்கள் தங்கி ஊர் மக்களுடன் உணவருந்தி இன்புற்று நன்மை தீமைகளில் பங்கு கொண்டிருந்தார்.

ஊர் பெரியவர்கள் பிற்பகல் வேளைகளில் சித்தருடன் ஆலயத்தின் வெளி வீதியில் தங்கி அளவளாவது வழக்கமாகவும் இருந்து வந்தது.

சித்தர் ஒரு நாள் இந்த ஐயனார் ஆலயத்திற்கு

அருகில் உள்ள ஓர் இடத்தினை தனது கால் பெருவிரலினால் கோடிட்டு அடையாளப்படுத்தி இந்த இடத்தில் ஒரு சிவாலயம் அமையும். இது காலத்தின் போக்கில் தென்கையிலாயமாகத் திகழும் என்று அன்றுரைத்தார்.

அத்துடன் இவ்விடத்தில் சிவாலயம் அமைக்குமாறும் இதனால் நல்ல அறிவுள்ள அழகான செல்வம் மிக்க சந்ததி உருவாகும் எனவும் அருளுரைத்தார்,

இவரது சித்த வாக்குப்படி ஊர்மக்கள் ஒன்றிணைந்து முடிவெடுத்து தென் இந்தியாவிலிருந்து சிற்பாச்சாரிகளை வரவழைத்து சிவாலயம் அமைப்பதற்கு ஏற்ற இடத்தையும் நிலையத்தினையும் வடிவினையும் திட்டமிட்டனர். இன்று மூலமூர்த்தி அமைந்திருக்கும் இடம் சித்தர் கோடிட்டுக் காட்டிய இடமே

ஆர்.நடராஜா ..✍
பனங்காடு தினகரன் நிருபர்

ஆகும் என இவ் ஆலய வரலாற்று நூல்கள் தெரிவிக்கின்றன.

இக் கிராமத்தில் பிறக்கின்ற குழந்தைகள் கறுப்பானவர்களாகவும் அழகிழந்தவர்களாகவும் வறுமையில் வாடியதாகவும் வரலாற்றுடன் முதியவர்களும் இன்றும் கதை சொல்வதை கேட்கமுடிகின்றது

இதன் பின்னர் சித்தானைக் குட்டி சித்தர் காலத்தில், சிவன் ஆலயத்தை அம்மன் ஆலயம் என வழிபடலாயினர். பல ஆண்டுகள் கழிந்த பின்னர் கிழக்கின் மரபுப்படி ஆறு குடிகளாக ஒன்று சேர்ந்து வண்ணக்குமார் சபை என்ற ஒரு நிருவாகக் கட்டமைப்பினை ஏற்படுத்தி ஆலயத்தினை பதிவு செய்து புதிய ஆலயம் அமைக்கும் பணியில் ஈடுபட்டனர். இவ் ஆலய கட்டுமானப் பணிக்கு, ஊர்மக்களதும் பிரதேச அமைப்புக்களதும் நன்கொடையாளர்களதும் அரசாங்கத்தினதும் உதவியும் கிடைக்கப் பெற்றிருந்தமை சிறப்பாகும்.

"பாரூரும் பனங்காட்டூர்ப் பவளத்தின் படியானைச்
சீரூரும் திருவாருச் சிவன் பேர் சென்னியில் வைத்த
ஆரூரன் அடித்தொண்டன் அடியன்சொல் அடிநாய்சொல்
ஊரூரன் உரை செய்வார் உயர் வானத்து உயர்வாரே."

என சுந்தரர் தேவாரம் பாடலில் இவ் ஆலயத்தின் சிறப்பினை பாடியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இவ் ஆலயத்தின் முதலாவது மகா கும்பாபிஷேகம் 1963ஆம் ஆண்டு ஆவணித் திங்களில் இடம் பெற்றது. பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை மகா கும்பாபிஷேகம் இடம் பெற வேண்டுமென்பதற்கு அமைய பல இடர்பாடுகளுக்கு மத்தியில் 1981இல் பாலஸ்தானம் செய்யப்பட்டது.

நாட்டின் போர் சூழலுக்கு மத்தியிலும் 1988ஆம் ஆண்டு விபவ வருடம் ஆவணித்திங்கள் 29ம் நாள் (14.09.1988) நவாலியூர் பிரமஸ்ரீ சாமி விஸ்வநாதக் குருக்களால் மகாகும்பாபிஷேகம் நடத்தப்பட்டது. ஒரு ஊரின் பெருமையினையும் கல்வி, செல்வம்,வீரம் போன்றவற்றை எடுத்துக் காட்டுவது ஆலயம் என்பதை இத்தலம் நிருபித்து தலைநிமிர்ந்து காட்சி தருகின்றது.

ஆலய திருக் கொடியேற்றம் கடந்த (09)புதன் கிழமை ஆலய பிரதம குருவும் மகோற்சவ குருவுமான ஈசான சிவாச்சாரியார் சிவஸ்ரீ புண்ணிய கிருஷ்ணகுமார சிவாச்சாரியார் அவர்களால் நடத்தப்பட்டது.

ஆலயத்தில் கொடியேற்றத்தினைத் தொடர்ந்து பத்துநாட்கள் சிறப்பாக திருவிழாக்கள் இடம் பெறும். இதில் திரிபுரதகனத் திருவிழா(11), தெப்பத்திருவிழா(12), பாசுபதாஸ்திரத் திருவிழா(14) , மாம்பழத்திருவிழா(15) ,திருவேட்டைத் திருவிழா(16) ,சங்காபிஷேகம்(17), இடம் பெற்று எதிர்வரும் 18ம் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறும். அதனைத், தொடர்ந்து பூங்காவனத் திருவிழா(19)வுடன் இவ்வாண்டின் உட்சவங்கள் நிறைவடையவுள்ளது குறிப்பிடத்தக்கது.

மானுடவியல் (தொடர்)

கண்ணப்ப நாயனார்

திண்ணனார் அவ்விருவரும் போனதை அறியாதவராகி, சீக்கிரம் கல்லையிலே மாமிசத்தை வைத்துகொண்டு, திருமஞ்சனமாட்டும்பொருட்டு ஆற்றில் நீரை வாயினால்முகந்து, பூக்களைக்கொய்து தலைமயிரிலே செருகி, ஒரு கையிலே வில்லையும் அம்பையும் மற்றக்கையிலே இறைச்சி வைத்த தேக்கிலைக்கல்லையையும் எடுத்துக்கொண்டு,

"ஐயோ! என்னுயிர்த் துணையாகிய சுவாமி மிகுந்த பசியினால் இளைத்தாரோ" என்று நினைந்து இரங்கிப் பதைபதைத்து ஏங்கி, தன் குஞ்சுக்கு இரை அருந்துதற்குத் தாழாதோடுகின்ற பறவைபோல மனோகதியும் பின்னிட ஓடிப்போய்க் கடவுளை அடைந்தார்.

அடைந்து, அவருடைய திருமுடிமேல் இருந்த பூக்களைத் தம்முடைய காற்செருப்பால் மாற்றி, தம்முடைய வாயில் இருக்கின்ற திருமஞ்சனநீரைத் தம்முடைய மனசில் உள்ள அன்பை உமிழ்பவர்போலத் திருமுடியின் மேல் உமிழ்ந்து, தம்முடைய தலையில் இருந்த பூக்களை எடுத்துத் திருமுடியின் மேல் சாத்தி, தேக்கிலையிலே படைத்த இறைச்சியைத் திருமுன்னே வைத்தார்.

"சுவாமீ! கொழுமையாகிய இறைச்சிகள் எலாவற்றையும் தெரிந்து, அம்பினாலே கோத்து நெருப்பிலே பதத்தோடு காய்ச்சிப் பல்லினால் அதுக்கி, நாவினாலே சுவைபார்த்துப் படைத்தேன். இவ்விறைச்சி மிக நன்றாயிருக்கின்றது. எம்பெருமானே! இதை அமுதுசெய்தருளும்" என்று சொல்லி, உண்பித்தார்.

பின்பு சூரியன் அஸ்தமயமாயிற்று, திண்ணனார் அவ்விரவிலே துஷ்டமிருகங்கள் சுவாமிக்குத் துன்பஞ்செய்தல் கூடுமென்று அஞ்சி, அம்பு தொடுக்கப்பட்ட வில்லைக் கையிலே பிடித்துக்கொண்டும், மறந்தும் கண்ணிமையாமல் சுவாமிக்குப் பக்கத்திலே விழித்துக்கொண்டு நின்றார். **(தொடரும்)**

கலாநிதி சிவஸ்ரீ
கு.வை.க. வைத்தீஸ்வர குருக்கள்

2013 ஆம் ஆண்டு தைமாதம் அடிக்கல் நாட்டுவிழாவுடன் ஆரம்பிக்கப்பட்ட கொழும்பு-13 ஸ்ரீ ஸ்ரீ இராதாகிருஷணர் ஆலயத்தின் திருப்பணிகள் முடிவடைந்தநிலையில் காணப்படுவதை படத்தில் காணலாம்.இவ்வருடம் ஆவணி 16இல் இவ் ஆலய கும்பாபிஷேகம் நடைபெறு திருவருள் கூடியுள்ளது.
(படம்: வடகொழும்பு தினகரன் நிருபர்)

அறநெறி அறிவுநோடி

கே. ஈஸ்வரலிங்கம்
தமிழர் நற்பணி மன்றத் தலைவர்

18923) விநாயகரின் வயிற்றுக்குள் சென்ற அனலாசுரன் என்ன செய்தான்?
உள்ளேயே அக்னியை உமிழ்தான்,

18924) விநாயகருக்கு என்ன நடந்தது?
எரிச்சல் தாங்க முடியாமல் குதிக்கத் துவங்கினார்.

18925) விநாயகரின் துடிப்பை கண்ட இந்திரனும் தேவர்களும் என்ன செய்தார்கள்?
கங்கையை அவர்மீது பொழிந்தார்கள்.

18926) அப்போது எரிச்சல் தணிந்ததா? விநாயகரின் எரிச்சல் தணியவில்லை.

18927) சந்திரன் என்ன செய்தான்?
தன் குளிர்ச்சியான நிலைவை விநாயகரின் மீது பொழிந்தான்.

18928) விநாயகரின் எரிச்சல் அடங்கியதா?
அப்போதும் விநாயகரின் எரிச்சல் அடங்கவில்லை.

18929) அப்போது அங்கு வந்த ரிஷி என்ன செய்தார்?

அறுகம்புல்லைக் களைந்து அவற்றை விநாயகரின் தலையில் கொட்டினார்.

18930) அப்போது என்ன நடந்தது?
உடனே விநாயகரின் எரிச்சல் அடங்கியது.

18931) அனலாசுரன் நிலை என்னவாயிற்று?
அவரது வயிற்றிலேயே ஜீரணமாகிவிட்டான்.

18932) அகம்மகிழ்ந்த விநாயகர் என்ன செய்தார்?
'இனி என்னை அறுகம் புல்லால் அர்ச்சனை செய்து வழிபடுபவர்களின் குறைகள் அனைத்தும் நீங்கும்' என்று வரமளித்தார்.

18933) அன்றுமுதல் என்ன நடந்தது?
விநாயகருக்கு அறுகம்புல் அர்ச்சனை சிறப்புப்பெற்றது,

18934) அனலாசுரனை விழுங்கி அவனை ஜீரணம் செய்ததால்தான் விநாயகருக்கு என்ன நடந்தது?
பெருத்த வயிறு உண்டாயிற்று.

கொழும்பு 10 பஞ்சிகாவத்தை ஸ்ரீ தேவி கருமாரியம்மன் ஆலய வருடாந்த உற்சவத்தில் தேர் பக்தர்கள் வெள்ளத்தில் அசைந்தாடி வருவதையும் ஏனைய காட்சிகளையும் படங்களில் காணலாம்.
(படம்: வட கொழும்பு தினகரன் நிருபர்)

நாதப் பிரம்ம யோகம் - 10

இசையின் சூக்ஷ்ம சக்திகளையும், அது ஏற்படுத்தக் கூடிய பௌதிக நன்மைகளையும் உணர்ந்துகொண்ட ஒருவன் மிகக் கவனமாக தனது பயிற்சிக்கும் கேட்பதற்குமுரிய இசையினை சங்கீதத்தினை, மெல்லிசையுடன் தூய இசையாக சாஸ்திரீய (கர்நாடக, இந்துஸ்தானி) இசையாக தேர்ந்தெடுப்பது அவசியம்.

ஏற்கனவே கூறப்பட்ட து போல சாஸ்திரீய சங்கீதம் நாதப் பிரம்மத்திலிருந்து இயற்கையாகத் தோன்றிய ஒன்று. சாஸ்த்திரங்கள் நாத பிரமம் வெளிப்பட்ட நிகழ்வினை நடராஜரின் பேரதிர்வுடன் கூடிய தாண்டவத்திலிருந்து வெளிப்பட்ட அதிர்விலிருந்து தோன்றிய நாதமாக குறிப்பிடுகிறது. நாரதரின் பக்தியினை வீணையின் ஸ்வரத்துடன் அதிகரிப்பதாக கூறப்படுகிறது. புராதன காலத்தில் இசையானது ஸ்வர யோகம், நாத யோகம் ஆகிய இரண்டினதும் அடிப்படையிலேயே உருவாக்கப்பட்டது. இடைக் காலத்தில் சமூகம் உயர் யோக உணர்விலிருந்து நழுவி இலக்கியம், கலைகள், இசை என்பவை தாழ் உணர்ச்சி பொழுதுபோக்காகவும், காம எண்ணங்களை வெளிப்படுத்துவதாகவும், சுய நலத்திற்காக பயன்படும் ஒன்றாகவும் மாறியது.

முற்காலத்தில் போர்க்களத்தில் வீரத்துடனும், உற்சாகத்துடனும் சண்டையிடும் போர்வீரர்களை உருவாக்கும் உற்சாகமூட்டும் பாடகர்கள் இருந்தார்கள். இப்படியான இசையின் பயன்பாடுகள் மெதுவாக இந்திய வரலாற்றில் சமூகத்திலிருந்து வழக்கொழிந்து போயின. பிற்காலத்தில் இசை தாழ் உணர்ச்சிகளை உருவாக்குகிறது என்று சில மன்னர்களால் ஒதுக்கப்பட்டு இசைக் கலைஞர்கள் அவர்களின் இசைக்கருவிகளுடன் வெளியேற்றப்பட்டனர். இன்றும் இசை பயில்வதும், பயிற்சிப்பதும் சமூகத்தின் உயர்ந்த நிலையில் இருப்பவர்களுக்கு உரிய கலை இல்லை என்ற எண்ணம் இருக்கிறது. மிகச் சில இசைப்பள்ளிகளே உண்மையான சாஸ்திரீய சங்கீத த்தினை கற்பிக்கின் றன. இந்திய கலாச்சாரத்திலும், மெய்யியலிலும் இசையின் மகத்துவத்தை புரிந்துகொள்ள சாஸ்திரீய சங்கீதத்தினை முறையாக பயில்வது அவசியமாகின்றது.

நவீன கால அறிவியல் வளர்ச்சி இசையினைப் பற்றிய புதிய பரிணாமத்தைப் புரிந்துகொள்ள உதவியுள்ளது. பலவிதமான பரிசோதனைகள் இசை எப்படியான தாக்கத்தை தாவரங்களில், விலங்குகளில், பூச்சிகளில், மனிதர்களில் ஏற்படுத்துகிறது என்ற விபரங்களைத் தந்துள்ளது. இசையினால் தாவரவியல் உலகில் புற்களின் வளர்ச்சி வீதம், பெரிய, அதிக நிறையுடைய மரக்கறி, பழங்களை தாவரங்கள் உற்பத்தி செய்கின்றன, தாவரங்கள் ஆரோக்கியமாக வளர்கின்றன போன்ற அறிவியல் உலகினால் முறையான பரிசோதனை மூலம் அவதானிக்கப்பட்டுள்ளன. சில தாவர இனங்களில் இசையினை தொடர்ந்து கேட்கும் தாவரங்களின் மரப்பட்டை, வைரம் என்பவை மிகத்தடிப்பாக உறுதியாக வளர்கின்றன என்ற முடிவுகள் பெறப்பட்டுள்ளன.

(தொடரும்)

பண்டிட் ஸ்ரீ ராம் சர்மா ஆச்சார்யா
தமிழில்: ஸ்ரீ ஸக்தி சுமனன்

கொழும்பு கதிரேசன் வீதியில் அமைந்துள்ள ஸ்ரீகதிரேசன் கோயிலில் சிவராத்திரி அன்று பூஜை வழிபாடு நடத்தப்படுவதையும் ஸ்ரீ கதிரேசன் ஆலய அறநெறி பாடசாலை மாணவ மாணவிகள் நடத்திய கலைநிகழ்ச்சிகளையும் படங்களில் காணலாம்.

ரயில் கட்டணங்களை அதிகரிக்க முஸ்தீபு

ரயில் கட்டணத்தை அதிகரிக்குமாறு மீண்டும் கோரிக்கை விடுத்துள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது. பஸ் கட்டணத்திற்கு இணையாக, ரயில் கட்டணத்தை அதிகரிக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளதாக திணைக்களத்தின் பொது முகாமையாளர் தம்மிக்க ஜயசுந்தர குறிப்பிட்டுள்ளார்.

போக்குவரத்து அமைச்சிடமிருந்து ஆலோசனை பெற்று, தமது கோரிக்கையை நிதி அமைச்சிடம் முன்வைக்கவுள்ளதாக அவர் கூறியுள்ளார். ஆனால் ரயில் கட்டணங்களை அதிகரிக்க இது வரை தீர்மானிக்கவில்லை என போக்குவரத்து அமைச்சர் தெரிவித்துள்ளார்.டீசல் விலை உயர்வால் ரயில் சேவைகளுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக அமைச்சு தெரிவித்தது.

இதனிடையே, கொள்கலன் போக்குவரத்துக் கட்டணத்தை நேற்று(13) முதல் 60 வீதத்தினால் அதிகரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

புத்தளம் நகர சபையின் மகளிர் தின நிகழ்வுகள்

புத்தளம் தினகரன் நிருபர்

மகளிர் தினத்தை முன்னிட்டு "நாடும், தேசமும், உலகும் அவளே" எனும் தொனிப் பொருளில் புத்தளம் நகர சபையினால் ஏற்பாடு செய்யப்பட்ட மகளிர் தின நிகழ்வை (10) நகரபிதா எம்.எஸ்.எம்.ரபீக், சக நகர சபை உறுப்பினர்கள் சகிதம் ஆரம்பித்து வைத்தார்.

நகர பிதா தேசிய கொடியை ஏற்றி நிகழ்ச்சிகளை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தார். தேசிய கீதம் மற்றும் மகளிர் கீதமும் இசைக்கப்பட்டது.

நிகழ்வில் உரையாற்றிய நகரபிதா, தனது தலைமையிலான சக நகர சபை உறுப்பினர்களின் ஒத்துழைப்போடு மகளிருக்கான இவ்வாறான பல வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருவதோடு இன்றும் மகளிருக்காக சுயதொழில் சந்தைப்படுத்தல் விடயங்களும் மைதானத்தில் ஏற்பாடுகள் செய்துள்ளதாகத் தெரிவித்தார். மைதானத்தில் மகளிருக்கான இலவச ஹோமியோபதி மருத்துவ முகாமும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

புத்தளம் மாவட்ட விளையாட்டரங்கில் இலவசமாக பெண்களுக்கான வேடிக்கை விநோத விளையாட்டு நிகழ்ச்சிகள், மகளிர் சுயதொழில் சந்தைப்படுத்தல், விற்பனை நிலையங்கள் உட்பட பல்வேறு நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

இந்நிகழ்வில் நகர சபை உறுப்பினர்கள், நகரசபை உயரதிகாரிகள், மகளிர் சங்க பிரதிநிதிகள் உள்ளிட்ட பெருந்திரளான மகளிரும் கலந்து கொண்டனர்.

போட்டிகளில் ஆர்வத்துடன் கலந்து கொண்டு வெற்றி பெற்ற மகளிருக்கு நகர பிதா பரிசில்களையும் வழங்கி வைத்தார்.

கிழக்கு பல்கலைக்கழகத்தின் 2020 மாணவர்களுக்கான பட்டமளிப்பு விழா நேற்று முன் தினம் (12) இடம்பெற்றது. இதில் சுமார் 2,000 மாணவர்கள் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். நிகழ்வில் மருத்துவர் சேகு முகைதீன் அஹ்மத் றிஹான் பல்கலைக்கழக உபவேந்தரினால் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்ட போது.

மேல் மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் நிதி ஒதுக்கீட்டில், கொலன்னாவ பிரதேச பிரிவைச் சேர்ந்த அங்கவீனர் ஒருவருக்கு முச்சக்கர நாற்காலி வழங்கப்பட்டது. உதவி பிரதேச செயலாளர் சமிந்த பரணமான இதை, பயனாளிக்கு வழங்குவதைப் படத்தில் காணலாம்.சமூக சேவைகள் உத்தியோகத்தர் எம்.தர்மசேனவின் ஏற்பாட்டில் இந்நிகழ்வு இடம்பெற்றது. (பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)

இவ்வருடத்தில் 72 மனிதர்கள் 285 யானைகள் பலி

இரத்தினபுரி சுழற்சி நிருபர்

மனிதன், யானை சமரினால் இவ்வருடம் இதுவரை 72 மனிதர்களும் 28 5 யானைகளும் பலியாகியுள்ளதாக வன பரிபாலன திணைக்கள தகவல் குறிப்புக்கள் தெரிவிக்கின்றன.

இரத்தினபுரி மாவட்டத்தின் உடவளவை சங்கபால சிங்கராஜ உட்பட இரத்தினபுரி மாவட்டத்தில் உள்ள

காடுகளை அண்டிய சரணாலயங்களின் காரியாலயங்கள் வனபரிபாலனத் திணைக்கள காரியாலய தகவல் குறிப்புக்களில் இத்தகவல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

இத்தகவல்களின் பிரகாரம் காடுகளுக்கு அண்டிய பிரதேசங்களில் கிராமங்களில் வாழும் அப்பாவி மக்கள் யானைகளின் தாக்குதலுக்குள்ளாகி மரணத்திற்கு உள்ளாவதாகவும் மனிதர்களின் துப்பாக்கிச்சூடு நிலப்பொறிகள், கட்டுதுவக்கு ஆகியவற்றில் சிக்கி இதுவரை 285 யானைகள் கொல்லப்பட்டுள்ளதாகவும் இத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வெளிநாடு செல்வோருக்கான பி.சி.ஆர் பரிசோதனை நிறுத்தம்

யாழ் போதனா வைத்தியசாலையில் வெளிநாடு செல்பவர்களுக்கான பி.சி.ஆர் பரிசோதனை இன்று (14) முதல் மேற்கொள்ளப்படமாட்டாது என வைத்தியசாலை பணிப்பாளர் நந்தகுமாரன் தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும்போதே அவர், இவ்விடயம் பற்றித் தெரிவித்தார்.

அவர் இது தொடர்பில் தெரிவிக்கையில்,யாழ் போதனா வைத்தியசாலையில் மேற்கொள்ளப்படும் வெளிநாடு செல்பவர்களுக்கான பி.சி.ஆர் பரிசோதனையில் மாதிரி சேகரிப்பு பணியிலிருந்து வைத்தியர்கள் விலகுவதால் வெளிநாடு செல்பவர்களுக்கான பி.சி.ஆர் பரிசோதனை நிறுத்தப்படுகிறது.

அதேவேளை நோயாளிகளுக்கான பி.சி.ஆர் பரிசோதனைகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படும் என கூறியுள்ளார்.

மின்சார சபைக்குள் மாபியா;... (03ஆம் பக்கத் தொடர்)

637 பொருட்களின் பட்டியலில் உள்ள பொருட்களுக்கும் வருடம் முழுவதும் 90 மில்லியன் டொலர்களே செலவிடப்பட்டுள்ளது. ஆனால் எரிபொருள் கப்பலுக்கு செலவிடும் தொகையே அது.

மின்சார சபையில் பல பிரச்சினைகள் உள்ளன. அங்கு பெரும் மாபியா உள்ளது. புதுப்பிக்கத்தக்க வலு சக்தி முன்னேற்றப்படுவதை அவர்கள் விரும்பவில்லை. அதற்கான வழிகள் இருந்தும் முடியாதுள்ளது. சிலர் அதற்கு இடமளிப்பதில்லை.

முதலீட்டாளர்களை கொண்டுவருவதற்கு எதிராக எமது அமைச்சர்கள் சிலர் நீதிமன்றம் சென்றார்கள். நாம் சவால்களை எதிர்கொண்டு வெற்றிகொள்வோம் என்றார். (பா)

தேசிய அரசாங்கம்...

பொதுத்தேர்தலின் பின்னர் உருவாக்கப்பட்ட தேசிய அரசாங்கம் 2019 வரை நீடித்தது. அன்றைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் பிரதமர் ரணி'ல் விக்கிரமசிங்கவுக்கும் இடையிலான மோதல் காரணமாக அந்த அரசில் தொடர்ச்சியாக மோதல் நிலை ஏற்பட்டது தெரிந்ததே.

இதேவேளை எதிர்வரும் தேர்தலில் கூட்டணியில் போட்டியிடுவதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தயார் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

பாடசாலைகளின் நீர்க்கட்டணத்தை...

செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இதனால், பாடசாலை குடிநீர் கட்டணத்தை பெற்றோர் செலுத்த வேண்டியுள்ளது. இதனால் கடும் நெருக்கடி ஏற்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.இது தொடர்பில் அமைச்சர் வாசு தேவ நாணயக்காரவுடன் பேசிய போது, தனக்கு அது பற்றி தெரியாது என அவர் அறிவித்துள்ளார்.

எனவே இந்த முடிவை மாற்றுமாறு கல்வி அமைச்சை கோருவதாகவும் ஸ்டாலின் தெரிவித்தார்'

சீமெந்து, கம்பி...

ரூபாவுக்கும், 16 மில்லிமீற்றர் கம்பி ஒன்று 1,725 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

ஆயினும் அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் வீழ்ச்சி காரணமாக மூலப்பொருட்களின் விலை அதிகரித்துள்ளதோடு, எதிர்காலத்தில் குறித்த கம்பிகளின் விலை மேலும் அதிகரிக்கக்கூடும் என உற்பத்தியாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

அத்தோடு மணல் மற்றும் செங்கல் விலைகளும் குறிப்பிட்ட தொகையினால் உயர்ந்துள்ளதாக அறிய வருகிறது.

இருநாட்டு ஒத்துழைப்பை...

அவரை வரவேற்பதற்காக ஆவலுடன் காத்திருப்பதாக இந்திய உயர்ஸ்தானிகராலயம் டுவிட்டர் செய்தியில் பதிலளித்துள்ளது.

இலங்கைக்கான அத்தியாவசிய உணவுப் பொருட்கள் மற்றும் மருந்துப் பொருட்களை கொள்வனவு செய்வதற்காக இந்தியாவிடமிருந்து ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் கடனுதவி பெறுவதற்கான ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்காக நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ அடுத்த வாரம் இந்தியா செல்லவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வாரம் நிதியமைச்சர் மற்றும் இந்திய வெளிவிவகார அமைச்சருக்கு இடையில் தொலைபேசி உரையாடல் ஒன்றும் இடம்பெற்றது.

இதன் போதே விஜயம் தொடர்பான ஆரம்ப உடன்பாடுகள் எட்டப்பட்டன.

பொலிஸ் திணைக்களத்தின்...

என இந்த போலி தகவல் தயாரிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

ஊடகங்களுக்கோ அல்லது பொது மக்களுக்கோ அவ்வாறான செய்தி எதுவும் வழங்கப்படவில்லை எனவும், பொலிஸார் ஒரு விடயம் தொடர்பில் பொதுமக்களுக்கு அறிவிக்க விரும்பினால், ஊடகப் பிரிவிலிருந்து ஊடக அறிவித்தலை வெளியிடுவதாகவும் அலுவலகம் தெரிவித்துள்ளது. இந்த போலி செய்திகளுக்கு ஏமாற வேண்டாமென பொதுமக்களை அறிவுறுத்தி வரும் ஊடகப் பேச்சாளர் அலுவலகம், போலி செய்திகளை வெளியிட்ட நபர்களை கண்டறிய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதென குறிப்பிட்டுள்ளது.

சகல பாடசாலைகளும்...

கல்விப் பணிப்பாளரின் தீர்மானத்தின்படி அடுத்த கட்ட நடவடிக்கை மேற்கொள்ளலாம் என கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

2022 ஆம் ஆண்டிற்கான 2ஆம் தவணை பாடசாலை கல்வி நடவடிக்கைகள் கடந்த (07) ஆம் திகதி ஆரம்பமாகியது.

2021 கல்வி பொது தராதர உயர் தர பரீட்சைகள் நிறைவடைந்ததையடுத்து, பாடசாலை கல்வி நடவடிக்கைகளை நேற்று முதல் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.புதிய பாடசாலை வாரம் ஆம்பமாகியுள்ள நிலையில், பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் தொடர்பில் கல்வியமைச்சின் செயலாளரின் கையொப்பத்துடன் கூடிய புதிய சுற்றுநிருபம் அண்மையில் வெளியிடப்பட்டது. 20 மாணவர்களைக் கொண்ட வகுப்புகளில் அனைத்து மாணவர்களும் அனைத்து நாட்களிலும் பாடசாலைக்கு அழைக்கப்பட வேண்டுமென அறிவிக்கப்பட்டது.20 தொடக்கம் 40 வரையான மாணவர்களைக் கொண்ட வகுப்புகளில், மாணவர்கள் இரு குழுக்களாக பிரிக்கப்பட்டு ஒருவாரம் விட்டு ஒருவாரம் என்ற அடிப்படையில் கல்வி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டுமெனவும் 40 க்கும் மேற்பட்ட மாணவர்களைக் கொண்ட வகுப்புகளில் மாணவர்களை சமமான எண்ணிக்கையில் 03 குழுக்களாக பிரித்து கல்வி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டுமெனவும் சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்த நிலையிலே இன்று முதல் வழமை போன்று பாடசாலைகள் நடைபெறும் என அறிவிக்கப்பட்டது.

மக்களின் மீது...

பஸ் கட்டண அதிகரிப்பு தொடர்பில் பஸ் சங்கங்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது, பஸ் உரிமையாளர்கள் பஸ் கட்டண அதிகரிப்பையோ அல்லது எரிபொருள் சலுகையையோ கோரினார்கள். ஆனால், எரிபொருள் மானியம் வழங்குவது நடைமுறை சாத்தியமற்றது எனவும் இ.போ.ச ஊடாக எரிபொருள் வழங்குவதை தொடர்ந்தும் முன்னெடுப்போம் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

உலக சந்தையில் எரிபொருள் விலை பாரியளவில் அதிகரித்துள்ளதோடு பஸ் உதிரிப்பாகங்களின் விலைகளும் அதிகரித்துள்ளன. பொதுமக்களுக்கு கட்டுப்படியாகக் கூடிய வகையில் பஸ் கட்டணத்தை அதிகரிக்க பஸ் சங்கங்கள் இணங்கியுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார். இது தொடர்பில் பஸ் சங்கங்களுக்கு நன்றி தெரிவிப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

பஸ்கட்டணங்களை 50 வீதத்தினால் அதிகரிக்குமாறு தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கங்கள் முன்னதாக கோரியிருந்தன. நேற்றைய சந்திப்பில் குறைந்தபட்ச பஸ் கட்டணத்தை 30 ரூபாவினாலும் ஏனைய கட்டணங்களை 25 தொடக்கம் 30 வீதத்தினாலும் அதிகரிக்குமாறு பஸ் உரிமையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

லீற்றர் பெட்ரோலின் விலை 77 ரூபாவினாலும், ஒரு லீற்ற ர் டீசலின் விலை 55 ரூபாவினாலும் அதிகரிக்கப்பட்டுள்ளது தெரிந்ததே. சுப்பர் டீசலின் விலை 95 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் புதிய விலை 254 ரூபாவாகும்.

ஒக்டேன் 92 ரக பெட்ரோல் லீற்றர் ஒன்றுக்கு 77 ரூபா அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 254 ரூபாவாகும்.ஒக்டேன் 95 ரக பெட்ரோல் லீற்றர் ஒன்றுக்கு 76 ரூபா அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 283 ரூபா என்பது குறிப்பிடத்தக்கது. (பா)

உள்ளூராட்சி சபை...

ஆலோசிக்கிறது. எனவே, எவ்வேளையிலும் எந்தத் தேர்தலுக்கும் முகங்கொடுக்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் தயாராக இருக்க வேண்டும். நிதியமைச்சரின் இந்திய விஜயத்திலும் இதுபற்றி அரசுக்கு அறிவுறுத்தப்படும் என எதிர்பாக்கப்படுவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார். மேலும்,ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அநுராதபுரத்தில் முதலாவது கூட்டத்தை நடாத்தியதுடன், மாவட்டங்கள் தோறும் மகளிர் மாநாடுகளும் நடத்தப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

இதுகுறித்து, அண்மையில் பிரதமரும் கருத்து தெரிவித்திருந்ததுடன், நிதியமைச்சரும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தேர்தலுக்கு தயாராக உள்ளதாகவும் கூறியிருந்தார்.

மக்களின் பிரச்சினைகளின்...

அதிகளவு அங்கத்தவர்களாக உள்ளனர். எமது பலம் பெண்கள்தான். அதனால்தான் எல்லா விடயங்களிலும் நாம் பெண்களுக்கு முன்னுரிமை வழங்கிவருகின்றோம். சபைகளில் உயர் பதவிகளையும் வழங்கியுள்ளோம் . காங்கிரசுக்கு சோதனை வந்த கால கட்டங்களில் எல்லாம் நீங்கள் எமக்கு பக்க பலமாக இருந்துள்ளீர்கள். இனியும் இருப்பீர்கள். நாமும் உங்களை கைவிடமாட்டோம்.

இன்று தோட்டக் கம்பனிகளின் அடாவடி அதிகரித்துள்ளது. எமது தலைவர் ஜீவன் தொண்டமான் தலைமையில் இதற்கு விரைவில் தீர்வு காணப்படும். நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளது, விலைவாசி உயர்ந்துள்ளது. இவை பற்றி காங்கிரஸ் கதைப்பதில்லை என சிலர் விமர்சிக்கின்றனர். நாம் அரச பங்காளிகளாக இருந்தாலும், மக்களுக்கு பிரச்சினை என்றால் மௌனம் காக்கமாட்டோம். ஐயா தொண்டமான் காலம் முதல் தற்போதைய தலைவர் ஜீவன் தொண்டமான் காலம்வரை, மக்கள் பக்கமே காங்கிரஸ் நின்றுள்ளது." என்றார்.

புதுப்பிக்கத்தக்க...

வழங்குவது குறித்து கவனம் செலுத்தப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

புதுப்பிக்கத்தக்க எரி சக்தி திட்டங்களை மேற்கொள்ள ஆர்வமுள்ள முதலீட்டாளர்களில் தகுதியானவர்களை தெரிவு செய்யவும், திட்டங்களை முன்னெடுப்பதிலுள்ள சட்டச் சிக்கல்களை நீக்குதல், வினைத்திறனான ஆற்றல் வலையமைப்பு இணைப்பு வசதிகளை மேம்படுத்துதல் போன்ற விடயங்கள் குறித்து அமைச்சரவை உபகுழு கவனம் செலுத்தி வருவதாக உபகுழு தலைவர் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

மின்சார நெருக்கடி நிலையில் புதுப்பிக்கத்தக்க வலு சக்தி மூலமான உற்பத்திகளை விரைவுபடுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இதற்காக அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோவின் தலைமையில் 5 அமைச்சர்கள் அடங்கிய அமைச்சரவை உப குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

2030 ஆம் ஆண்டுக்குள் நாட்டின் 70% மின்சாரத்தை புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலங்களிலிருந்து உற்பத்தி செய்ய வேண்டும் என்ற அரசின் கொள்கை, நோக்கங்களை அடைவதற்கும் , புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்களைத் துரிதப்படுத்துவதற்காகவும், 5 அமைச்சர்களைக் கொண்ட அமைச்சரவை உப குழு அண்மையில் நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

தற்பொழுது அடையாளங் காணப்பட்டுள்ள புதுப்பிக்கத்தக்க வலுசக்தி திட்டங்களை செயற்படுத்துவதற்கு ஆர்வமுள்ள முதலீட்டாளர்களில் தகுதியானவர்களை தெரிவு செய்தல், உயர்ந்த பயனுள்ள திட்டங்களை அடையாளங் காணுதல், திட்டங்களை செயற்படுத்துவதற்காக அமுலிலுள்ள சட்டங்கள் மற்றும் தடைகளை அடையாளங் கண்டு நீக்குதல், புதுப்பிக்கத்தக்க வலு சக்தி மூலங்களினூடாக உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை தேசிய கட்டமைப்புடன் இணைப்பதற்கான வசதிகளை மேம்படுத்துதல் என்பன குறித்து உப குழு கவனம் செலுத்துவதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

இந்த உபகுழுவின் நடவடிக்கைகள் மற்றும் அவற்றின் முன்னேற்றம் பற்றிய அறிக்கை இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட உள்ளது. (பா)

விலை அதிகரித்தாலும் ஒரு...

55 ரூபாவினால் மட்டுமே அதிகரிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். அண்மைக்காலமாக அதிகரித்துள்ள எரிபொருள் விலைகள், பெற்றோல் மற்றும் சுப்பர் டீசலுக்கு ஏற்பட்ட நஷ்டத்தை மட்டுமே ஈடு செய்யும். டீசலுக்கு ஏற்பட்டுள்ள நஷ்டத்தை ஈடு செய்ய லீற்றருக்கு 120 ரூபாவால் விலையை அதிகரிக்க வேண்டும் எனவும் விஜேசிங்க குறிப்பிட்டுள்ளார்.

40,000 மெட்ரிக் தொன் டீசலை இறக்குமதி செய்வதற்கு முன்னர் 32 மில்லியன் டொலர்கள் செலவிடப்பட்டன. எனினும் உலக எரிபொருள் விலையேற்றம் காரணமாக 51 மில்லியன் டொலர்களாக அது அதிகரித்துள்ளது. பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தொடர்ந்தும் பழைய விலைக்கே எரிபொருளை விற்பனை செய்திருந்தால், இந்த மாதம் 26 பில்லியன் ரூபா நஷ்டம் ஏற்பட்டிருக்கும் என விஜேசிங்க தெரிவித்தார்.

கடந்த இரு தினங்களுக்கு முன்னர், ஒரு லீட்டர் பெட்ரோலின் விலை 77 ரூபாவினாலும், ஒரு லீட்டர் டீசலின் விலை 55 ரூபாவினாலும் அதிகரிக்கப்பட்டது. சுப்பர் டீசலின் விலை 95 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் புதிய விலை 254 ரூபாவாகும். ஒக்டேன் 92 ரக பெட்ரோல் லீட்டர் ஒன்றுக்கு 77 ரூபா அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 254 ரூபாவாகும். ஒக்டேன் 95 ரக பெட்ரோல் லீட்டர் ஒன்றுக்கு 76 ரூபா அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 283 ரூபாவாகும். (பா)

லேக்ஹவுஸ் நிறுவனத்திற்கு சவால்களை வெற்றி கொள்ள

அனைத்து தொழிற்சங்கங்களும் அதிகபட்ச ஒத்துழைப்பை வழங்கின

தலைவர் டபிள்யூ. தயாரத்ன

லேக் ஹவுஸ் நிறுவனம் முகம் கொடுத்துள்ள சவால்களை வெற்றி கொள்வதற்கு நிறுவனத்தின் அனைத்து தொழிற்சங்க நிர்வாகிகளும் அதிகபட்ச ஒத்துழைப்பை வழங்கியதாக லேக் ஹவுஸ் நிறுவனத்தின் தலைவர், முகாமைத்துவ பணிப்பாளர் ஜனாதிபதி சட்டத்தரணி டபிள்யூ. தயாரத்ன தெரிவித்தார்.

அவர் இதனை லேக்ஹவுஸ் 2022 2024 கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் சந்தர்ப்பத்தில் கடந்த 11 ஆம் திகதி தெரிவித்தார்.

ஜனாதிபதி சட்டத்தரணி டபிள்யு. தயாரத்ன, நிதி பணிப்பாளர் ஜனக ரணதுங்க ஆகியோர் வர்த்தக கைத்தொழில் மற்றும் சேவைகள் ஊழியர் சங்கத்தின் தலைவர் எம் .ஜி. ஏ சமன் குமார, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஊழியர் சங்கத்தின் தலைமை செயலாளர் லெஸ்லி தேவேந்திர, வர்த்தக கைத்தொழில் மற்றும் சேவைகள் பிரகதசீலி ஊழியர் சங்கத்தின் (லேக்ஹவுஸ் கிளை) தலைவர் சந்தன பண்டார ,ஸ்ரீலங்கா சுதந்திர ஊழியர்கள் சங்கத்தின் (லேக் ஹவுஸ் கிளை) அனுர கொட கந்த, லேக் ஹவுஸ் ஊழியர் சங்க தலைவர் டபிள்யூ டி.டி.எஸ்.கே. பர்னாந்து, லேக் ஹவுஸ் ஊழியர் சங்க செயலாளர் கே.ரசிக த சில்வா, தேசிய ஊழியர் சங்க உப தலைவர் சுனில் த சில்வா, தேசிய ஊழியர் சங்க (லேக் ஹவுஸ் கிளை) தலைவர் லலித் குமார ஆகியோர் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டார்கள்.

அங்கு உரையாற்றுகையில் தலைவர் பின்வருமாறு கூறினார்.

2019 ஆம் ஆண்டுக்கு பின்னர் 62 நாட்கள் இந்த நிறுவனம் மூடப்பட்டிருந்தது. நாம் அச்சந்தர்ப்பத்தில் ஊழியர்களின் பக்கமிருந்தே பார்த்தோம். நாம் அவ்வேளையில் அடிப்படை சம்பளத்தை வழங்க நடவடிக்கை எடுத்தோம். நாம் ஏப்ரல் மாதத்தில் எமது சம்பளத்தை பெறாமல் ஒப்படைத்தோம். எல்லா சந்தர்ப்பங்களிலும் அனைத்து தொழிற்சங்கங்களும் எமக்கு அதிகபட்ச ஒத்துழைப்பை வழங்கின.

எமது நிறுவனம் முகம் கொடுத்துள்ள சவால்களை எமது முயற்சியாலேயே வெற்றி கொள்ள வேண்டும். அனைத்து பிரச்சினைகளுக்கும் மத்தியில் மாற்று வருமானங்களை பெற்றுக் கொள்வது குறித்து கவனம் செலுத்த வேண்டியுள்ளது. அநாவசிய செலவுகளை குறைத்து பிரச்சினைகளை நட்புடன் கலந்துரையாடி தீர்த்துக் கொள்வோம்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் இணைந்த வர்த்தக கைத்தொழில் மற்றும் சேவைகள் பிரகதசீலி ஊழியர் சங்கத்தின் தலைவர் சந்தன பண்டார-

கூட்டு ஒப்பந்தம் மூலம் லேக்ஹவுஸ் சரித்திரத்திலேயே அதிகளவு சம்பள உயர்வை ஊழியர்களுக்கு பெற்றுக் கொடுக்க முடிந்தது மிகவும் மகிழ்ச்சி. பொதுஜன பெரமுனவின் லேக் ஹவுஸ் தொழிற்சங்கமாக இந்த சரித்திர பூர்வமான அதிகளவு சம்பள உயர்வைப் பெற்றுக் கொடுக்க தலைமை வகித்தது.

இங்கு நிர்வாகம், பணிப்பாளர் சபை உள்ளிட்ட அனைவரினதும் அர்ப்பணிப்பை மிகவும் மதிக்கின்றோம். லேக்ஹவுஸ் நிறுவன சரித்திரத்திலேயே கூட்டு ஒப்பந்தம் மூலமான அதிகளவு சம்பள உயர்வு இதுவாகும்.

நாம் அதற்காக தொழிற்சங்கம் என்ற ரீதியில், ஸ்ரீலங்கா சுதந்திர உழியர் சங்கம், தேசிய ஊழியர் சங்கம், சுயாதீன ஊழியர் சங்கம் உள்ளிட்ட தொழிற் சங்கங்களின் அனைத்து தலைவர்களினதும் ஒத்துழைப்புடன் இந்த நடவடிக்கையை வெற்றிகரமாக நிறைவேற்றியமை குறித்து மிகவும் மகிழ்ச்சி அடைகின்றோம்.

இச்சந்தர்ப்பம் எமது நிறுவன ஊழியர்கள் மகிழ்ச்சி அடைய வேண்டிய சந்தர்ப்பமாகும். இந்த சம்பள அதிகரிப்பை பெற்றுக் கொள்வதற்கு 4 தொழிற்சங்கங்களும் ஒரே மாதிரியான பங்களிப்பை வழங்கினார்கள். இதன் கௌரவம் நான்கு தொழிற் சங்கங்களுக்கும் சமமாக கிடைக்க வேண்டும்.

ஸ்ரீலங்கா சுதந்திர ஊழியர் சங்கத் தலைவர் அனுர கொடகந்த-

ஊழியர்களாக நாம் பெற்ற பெரிய வெற்றியாகும். அதற்காக நான்கு தொழிற்சங்கங்களும் ஒன்றிணைந்த நிர்வாகமும் ஒரே இடத்திற்கு வந்து நிறுவனம் மற்றும் ஊழியர்களுக்கு இடையே எவ்வித பிரச்சினையும் ஏற்படாத வகையில் இதனை தீர்த்துக் கொள்ள முடிந்ததையிட்டு நாம் மகிழ்ச்சியை தெரிவிக்கின்றோம்.

எமது அரசாங்க காலத்தில் கூட எம்மால் எட்டு, பத்து வருடங்களுக்கு ஒரு முறையாவது ஒப்பந்தங்களை மேற்கொள்ள முடியாத வேளையில் 2016ல் தான் நாம் கூட்டு ஒப்பந்தத்தை ஆரம்பித்தோம்.அன்று ஆரம்பித்த முன்னாள் தலைவர்களான காவன் ரத்னாயக்க, கிரிசாந்த குரே மற்றும் தற்போதைய தலைவர் டபிள்யூ தயாரத்ன ஆகிய மூவராலும் அடிப்படை சம்பளம் ரூ 20 ஆயிரத்துக்கு அதிகமாக இந்த கூட்டு ஒப்பந்தம் மூலம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

நீங்கள் நிறுவனத்தை மேம்படுத்த ஆலோசனைகளைக் கொண்டு வாருங்கள். தொழிற்சங்கங்களாக நாம் இரண்டு கைகளையும் உயர்த்தி அதற்கு ஒத்துழைப்பு வழங்குவோம். தற்போதுள்ள நிலைமையில் தொழிற் சங்கங்கள் மற்றும் முகாமைத்துவம் இரண்டும் இரண்டு பக்கங்களுக்கு செல்ல முடியாது. அனைத்து விடயங்கள் தொடர்பாகவும் கடுமையான முடிவுகளை எடுக்க வேண்டும். இந்த நிறுவனத்தை மேம்படுத்துவதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் என்னவென சிந்திக்க வேண்டும்.

தேசிய ஊழியர் சங்க செயலாளர் பயுது சுதந்த்ரி-

சரித்திரத்திலேயே முக்கியமான நாள். இதற்கான பாதையைக் காட்டிய தலைவர், பணிப்பாளர் சபை வழங்கிய ஒத்துழைப்பை மிகவும் மதிக்கின்றோம். நான் சம்பள ஒப்பந்தத்தை ஒப்படைக்கும் சந்தர்ப்பத்தில் தேசிய ஊழியர் சங்கமாக 1400 குடும்பங்களை சேர்ந்த 6 ஆயிரத்துக்கும் அதிக மானோரின் வாழ்வை பாதுகாக்க இந்த வேண்டுகோளை விடுத்தோம். நீங்கள் பெற்றுக் கொடுத்த இந்த சம்பள உயர்வின் மூலம் பாடசாலைக்கு செல்லும் எமது பிள்ளைகள், உயர் கல்வியை கற்கும் பிள்ளைகள். குடும்பத் தலைவிகள் அனைவரினதும் வாழ்வு வளம் பெறும் என்பதை மிகவும் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோன்று இந்நிறுவனத்தை பாதுகாப்பதற்காக எடுக்கப்படும் நியாயமான எந்த ஒரு முடிவுக்கும் தேசிய ஊழியர் சங்கமாக நாம் அனைத்து தொழிற்சங்கங்களுடனும் கைகோர்த்து ஒத்துழைப்பு வழங்குவோம். நான் விசேடமாக ஞாபகப்படுத்த வேண்டும் அரச தொழிற்சங்கத்தின் தலைவராக சந்தன பண்டார சரித்திர ரீதியான சம்பள உயர்வை ஊழியர்களுக்கு பெற்றுக்கொடுக்க அனைத்து தொழிற்சங்கங்களுக்கும் தலைமை வகித்தார். இதற்காக அவருக்கு நன்றி தெரிவிக்கின்றேன்.

லேக்ஹவுஸ் ஊழியர் சங்கத்தின் தலைவர் வி.பி.எஸ்.கே பெர்னாந்து

லேக்ஹவுஸ் ஊழியர்களாக விவாதங்களை மேற்கொண்டு நாம் அனைவரும் இணைந்து கலந்துரையாடிய தன் பலனை பெற்ற நாள் இன்று. அது தொடர்பாக மகிழ்ச்சி அடைந்தாலும் இது பாரிய சுமையாகும். அந்த சுமையை குறைப்பதற்காகவும் இவ்வாறு நாம் இணைந்து கலந்துரையாடி ஒன்றிணைந்து நடவடிக்கையில் ஈடுபடுவோம்.

லேக்ஹவுஸ் தலைவர்,முகாமைத்துவ பணிப்பாளர் ஜனாதிபதி சட்டத்தரணி டபிள்யூ. தயாரத்ன, பணிப்பாளர் (சட்டம் மற்றும் நிர்வாகம்) சட்டத்தரணி ரகித்த அபேகுணவர்தன, பணிப்பாளர் (நிறைவேற்று) சட்டத்தரணி கனிஷ்க விதாரண, பணிப்பாளர் (நிதி) ஜனக்க ரணதுங்க, பொது முகாமையாளர் (பிரதி) சுமித் கொத்தலாவல, நிறுவன செயலாளர் சுதர்சனி ஹேவாவசம்,சிரேஷ்ட பதில் பொது முகாமையாளர் (நிதி) விராஜித் சமிந்ர போய்ஸ், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன வர்த்தக கைத்தொழில் மற்றும் சேவைகள் பிரகதசீலி ஊழியர் சங்க தேசிய அமைப்பாளர் அமரபால கமகே, லேக்ஹவுஸ் கிளை செயலாளர் திஸ்ஸ தம்மிக, பொருளாளர் நிலந்த படுகெதர, உப தலைவர் லக்மால் பிரதீப் ரவீந்திர தலைமை ஏற்பாட்டாளர்கள் கயான் பண்டார ஆகியோர் உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டார்கள்.

கிருஷாந்தி விதாரன
தமிழில்: **வீ.ஆர். வயலட்**

தலவாக்கலையில் இ.தொ.காவின் மகளிர் தின விழா

தலவாக்கலை குறூப் நிருபர்

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் மகளிர் தின நிகழ்வுகள் நேற்று (13) இ.தொ.காவின் பொதுச் செயலாளரும் தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தலைமையில் தலவாக்கலை கதிரேசன் ஆலய மண்டபத்தில் நடைப்பெற்றது.

பாலின சமத்துவம் எனும் தொனிப் பொருளில் பேச்சுக்கள், கலாசார நிகழ்வுகள், விவாத மேடைகள் ஆகியன இடம்பெற்றன. இந்நிகழ்வில் இ.தொ.கா வின் பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமான், நிதிச் செயலாளர் மருதபாண்டி ரமேஸ்வரன்,பிரதித் தலைவர் அனுஷியா சிவராஜா, இ.தொ.வின் உபதலைவர்கள்,முன்னாள் மாகாண சபை உறுப்பினர்களான பி.சக்திவேல், பிலிப்குமார்,தலவாக்கலை லிந்துலை நகர சபைத் தலைவர் லெ.பாரதிதாஸன், பிரதேச சபைத் தலைவர்கள், உறுப்பினர்கள், மாவட்ட மகளிர் தலைவிகள், மகளிர் அணி நிர்வாகசபை பெண் உறுப்பினர்கள், மகளிர் இணைப் பதிகாரிகள், இ.தொ.கா வின் அரசியல் அமைப்பாளர்கள், மாநில இயக்குனர்கள்,மாநில பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துக் கொண்டனர். அந்த வகையில் நேற்று (13) நோர்வூட், புசல்லாவ,தலவாக்கலை, நுவரெலியா ஆகிய பகுதிகளில் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலைமையில் மகளிர் தின நிகழ்வுகள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

பெருந்தோட்டத்துறை 'சிஸ்டம்' மாற தொழிலாளர்களும் ஒத்துழைக்க வேண்டும்

இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான்

ஹற்றன் சுழற்சி நிருபர்

நாட்டில் இன்று எல்லா துறைகளிலும் 'சிஸ்டம்' மாறியுள்ளது. ஆனால் பெருந்தோட்டத்துறை மட்டும் 150 ஆண்டுகளுக்கு மேலாக அப்படியே உள்ளது. இந்நிலைமை மாற வேண்டும். அதனை செய்வதற்கே நாம் வந்துள்ளோம். இதற்கு மக்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

பாலின சமத்துவம் என்ற தொனிப் பொருளின்கீழ் இலங்கைதொழிலாளர் காங்கிரஸின் ஹற்றன் மாநிலத்திற்கான மகளிர் தின விழா 13.03.2022 அன்று காலை கொட்டகலை ஸ்ரீ முத்துவிநாயகர் ஆலய கலாசார மண்டபத்தில் வெகு விமர்சையாக இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

"கப்பல் துறை, ஹோட்டல்துறை என எல்லா துறைகளிலும் 'சிஸ்டம்' மாறியுள்ளது. ஆனால் பெருந்தோட்டத்துறை மட்டும்தான் மாறவில்லை. நமது அழிவுக்கு நாமேதான் காரணம். ஏனெனில் நாளொன்றுக்கு 20 கிலோ கொழுந்து பறிக்க முடியாது, தோட்டங்கள் எல்லாம் காடாகியுள்ளது என தோட்டத் தொழிலாளர்களுக்காக நாம் நீதிமன்றத்தில் வாதிட்டு வருகின்றோம். ஆனால் நிர்வாகங்களால் நடத்தப்படும், கொழுந்து பறிக்கும் போட்டியில் பங்கேற்று, 3 மணி நேரத்துக்குள் 40 கிலோ பறிந்துள்ளனர். கோடி நன்றிகள், பாராட்டியே ஆக வேண்டும். 20 கிலோ பறிக்கமுடியாது என் கிறீர்கள், அங்கே 40 கிலோ பறிக்கின்றனரே என எம்மிடம் கேட்கப்படுகின்றது.

தொழிலாளர்களை ஊக்குவிப்பதற்காக அல்ல, சமாதி கட்டவே கொழுந்து பறிக்கும் போட்டி நடத்தப்படுகின்றது. இது நமக்கு புரிவதில்லை. இதனை சொன்னால், ஜீவன் தொண்டமான் விமர்சிக்கின்றார் என கூறுகின்றனர். எனக்கு பாராட்டி பேசி பழக்கம் இல்லை. தவறு இடம்பெற்றால் அதனை தைரியமாக சுட்டிக்காட்டுவேன்.

மலையகத்தில் அமைச்சு பதவியை வகித்தவருக்கும், எனக்கும் இடையில் தனிப்பட்ட ரீதியில் முரண்பாடு இல்லை. அரசியல் ரீதியிலான முரண்பாடுகளே உள்ளன. 'மலையக மக்களுக்காக இறுதி மூச்சு இருக்கும்வரை செயற்படுவேன்." என அவர் கூறியுள்ளார்.

அந்த செய்தி சமூக ஊடகங்களில் வந்ததும், 'நீ எப்ப செத்துபோவ' என சிலர் கருத்து பதிவிடுகின்றனர். இப்படியான அரசியல் வேண்டாம். நமது கலாசாரமும் மாறவேண்டும்.

மலையக பெருந்தோட்டப்பகுதிகளில் உள்ள சுகாதார துறையை மத்திய அரசு பொறுப்பேற்றுள்ளது. அதற்கு நாம்தான் காரணம். ஆனால் அதனை வைத்து அரசியல் செய்யவில்லை. நாம் 10 விடயங்களை செய்தால் கூட, செய்யாத 11 ஆவது விடயம் பற்றியே பேசப்படுகின்றனர். நம்பிக்கையை இழந்துவிட வேண்டாம். இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பயணம் தற்போது சற்று மெதுவாக இருந்தாலும் நாம் முன்னோக்கி சென்றுக் கொண்டிருக்கின்றோம் என்பதை கூறியாக வேண்டும்.

கேள்வி கோரல்

கண்டி மாநகர சபை

2022 ஆம் ஆண்டிற்காக கண்டி மாநகர சபையின் கிழ்க்காணும் உருப்படிக்காக தகைமையுள்ள கேள்விதாரர்களிடமிருந்து 2022.04.01 மு.ப.10.00 வரை பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன. கேள்வி ஆவணங்களை பெற்றுக்கொள்வதற்காக காசுப்பற்றுச்சீட்டு அல்லது காசுக்கட்டளையுடன் வேண்டுதல் கடிதம் மற்றும் குறித்த வியாபார பெயர் சட்டவாக்கத்தின் கீழ் அல்லது கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவுச் சான்றிதழில் பிரதியொன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.

விற்பனை

உருப்படி - வாகனங்களில் இருந்து கழற்றி அகற்றப்பட்ட டயர்மற்றும் பற்றரி விற்பனை

டயர் வகை	அளவு
900X20	08
750X15	10
11X28	08
825X16	20
750X16	20
700X16	33
Tubless Tyre	76
600X16	15
1000X20	05

டயர் வகை	அளவு
400X8	15
450x10	14
12.5X80X18	08
16.9X28	05
Battery	60

01	ஒரு உருப்படிக்காக கேள்வி ஆவணத்தின் விலை	ரூ.1080.00 (சகல வரிகளும் அடங்கிய மீளளிக்கப்படாத கட்டணத்தை) கண்டி மாநகர சபையின் காசாளரிடம் செலுத்தி கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம். இல்லையெனில் காசுக்கட்டளை ஆயின் மாநகர ஆணையாளர் கண்டி பெயரில் செலுத்தி 2022.03.31 ஆம் திகதி வரை மட்டும் அனுப்புதல் வேண்டும்.
02	கேள்வி ஆவணங்கள் விநியோகிப்பதற்கு ஆரம்பிக்கும் தினம்	2022.03.15 முதல் மு.ப.9.00 முதல் பி.ப. 2.45 வரை வாரத்தின் வேலை நாட்களில்
03	கேள்வி ஆவணங்கள் விநியோகிக்கப்படும் இறுதி திகதி மற்றும் நேரம்	2022.03.31 பி.ப.2.45
04	கேள்வி ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி மற்றும் நேரம்	2022.04.01 மு.ப.10.00 இற்கு அல்லது அதற்கு முன்
05	உருப்படிக்காக கேள்விப் பிணை (நிபந்தனையற்ற மற்றும் கோரும் போது செலுத்தப்படும்)	கேள்வித் தொகையாக ரூ.10000.00 தொகையை கண்டி மாநகர சபையின் காசாளரிடம் செலுத்தி பற்றுச்சீட்டை சமர்ப்பித்தல் வேண்டும்.
06	பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்களை ஏற்றுக்கொள்ளும் இடம்	பதிவுத்தபாலில் அல்லது கையோடு கொண்டுவந்து 2022.04.01 மு.ப.10.00 இற்கு அல்லது அதற்கு முன் பிரதான மாநகர கணக்காளரின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

விலைமனுக்கள் பற்றிய இறுதித்தீர்மானம் எடுத்தல் கண்டி மாநகர சபைக்கு உரியது. மேலதிக விபரங்களை கணக்காளர் (வழங்கல்கள்) இன் தொ.பே.இல.081-2232071 அல்லது 0703738117 மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

2022.03.10ஆம் திகதி
கண்டி மாநகர சபை

கே.கே.ஜீ.ஐ.டி.பி.விஜே திலக்க
மாநகர ஆணையாளர்.

இலங்கை சனநாயக சோசலிச குடியரசு
நெடுஞ்சாலைகள் அமைச்சு
வீதி அபிவிருத்தி அதிகாரசபை

விலைமனுக்கோரல்

வீதி அபிவிருத்தி அதிகார சபையில் "மகநெகும மஹமெதுரயினுள்"
பிரதான சிற்றுண்டிச்சாலையின் பழச்சாறு சாலையை
நடாத்துவதற்கான விலைமனுக்கோரல்
ஒப்பந்த இலக்கம் : RDA/DPR/CANT/JUICE BAR/2022/01

01. வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் வழங்கல் குழுவின் தலைவரினால் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்காக மகநெகும மஹமெதுரயினுள் பிரதான சிற்றுண்டிச்சாலையின் பழச்சாறு சாலையை நடாத்துவதற்கு தகுதியான மனுதாரர்களினால் முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றது.
02. வீதி அபிவிருத்தி அதிகாரசபை பிரதம செயற்படுத்தும் நிறுவனமாக செயற்படும்.
03. மனு கோரல் தேசிய மனு கோரல் போட்டி முறைக்கமைய செயற்படுத்தப்படும்.
04. மனு ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியிலிருந்து **91 கலண்டர் நாட்கள்** வரை மனுக்கள் செல்லுபடியாகும்.
05. மனுக்கள் **ரூ.10,000/-** பெறுமதியுடைய **2022.08.03** ஆம் திகதி வரை செல்லுபடியான காப்புறுதிப்பிணை இணைக்கப்பட்டிருக்க வேண்டும். காப்புறுதிப்பிணை இணைக்கப்படாத அனைத்து மனுக்களும் நிராகரிக்கப்படும்.
06. மனுக்கோரல் விண்ணப்பத்தை சமர்பிக்கும் நேரத்தில் கீழ்க்கூறப்பட்டுள்ள விதிமுறைகளை பின்பற்ற வேண்டும்.
    - தொடர்புகொள்ளும் இலக்கங்களுடன் இதற்கு முன்னர் சேவையாற்றிய மற்றும் தற்போது சேவையாற்றும் இது தொடர்பான சேவைக்கு சமமான சான்றிதழ்
    - அரச, மற்றும் அரச சார்பற்ற நிறுவனத்தினால் வழங்கப்பட்ட தகுதிவாய்ந்த சான்றிதழை பெற்றிருத்தல் (உ+ம் : ISO, SLS தரத்திலான)
07. மனு ஆவணங்களின் அனைத்து பக்கங்களிலும் மனுதாரர் தனது உத்தியோக பூர்வ முத்திரையுடன் கையொப்பமிட வேண்டும்.
08. மனு தொடர்பான கூட்டம் **2022.03.28** ஆம் திகதி **மு.ப 10.30** மணிக்கு வீ.அ.அ.ச கொள்முதல் குழு, நான்காவது மாடி, "மகநெகும மஹமெதுர" இல-216 டென்சில் கொபேகடுவ மாவத்தை, கொஸ்வத்தை, பத்தரமுல்லையில் அமைந்துள்ள காரியாலயத்தில் இடம்பெறும்.
09. **பத்தரமுல்லை, கொஸ்வத்தை, டென்சில் கொபேகடுவ மாவத்தை, "மகநெகும மஹமெதுர" 4வது மாடியில் அமைந்துள்ள வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் (கொள்முதல் பிரிவு)** காரியாலயத்தில் எவ்வித கட்டணமும் இன்றி மனு ஆவணங்களை அலுவலக நேரத்தில் இலவசமாக பரீட்சிக்க முடியும்.
10. இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் **2022.03.15** ஆம் திகதியிலிருந்து **2022.04.05** ஆம் திகதி வரை **09.00** மணியிலிருந்து **15.00** மணி வரையான அலுவலக காலப்பகுதியினுள் **வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகத்தின் பெயரில் 0000001943 என்ற இலங்கை வங்கியின் கூட்டுறவு கிளைக் கணக்கு இலக்கத்திற்கு** மீளச்செலுத்தப்படாத **ரூ.3,240/- (வட்வரி உள்ளடங்களான)** கட்டணத்துடன் எழுத்து மூல விண்ணப்பத்தை **பத்தரமுல்லை, டென்சில் கொபேகடுவ மாவத்தை, இல.216 என்ற இலக்கத்தில் அமைந்துள்ள "மகநெகும மஹமெதுர" 4வது மாடியில் அமைந்துள்ள வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர், (கொள்முதல் பிரிவு)** காரியாலயத்தில் சமர்ப்பிப்பதன் மூலம் விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ள முடியும்.
11. முத்திரையிடப்பட்ட மனு ஆவணங்களை **பிரதிகளுடன் 2022.04.06 ஆம் திகதி பி.ப.2.00** மணிக்கு முன் கிடைக்குமாறு **தலைவர், வீ.அ.அ.ச கொள்முதல் குழு, முதலாவது மாடி, "மகநெகும மஹமெதுர" இல-216 டென்சில் கொபேகடுவ மாவத்தை, கொஸ்வத்தை, பத்தரமுல்லை** எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும் அல்லது நேரில் கையளிக்க வேண்டும். மனுக்கள் அடங்கியுள்ள கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"மகநெகும மஹமெதுரயில் குளிர்பானசாலையை நடாத்துதல்"** என குறிப்பிடப்பட வேண்டும்.
12. **பத்தரமுல்லை, கொஸ்வத்தை, டென்சில் கொபேகடுவ மாவத்தை, "மகநெகும மஹமெதுர" 4வது மாடியில் அமைந்துள்ள வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் (கொள்முதல் பிரிவு) காரியாலயத்தில்** மனு ஏற்றுக்கொள்ளல் முடிவுற்ற உடனேயே ஒவ்வொரு மனுக்களாக திறக்கப்படும். மனுக்கள் திறக்கப்படும் வேளையில் மனுதாரர் அல்லது அவரது பிரதிநிதிக்கு அவ்வேளையில் பிரசன்னமாயிருக்க முடியும்.
13. மேலதிக விபரங்களுக்கு தொலைபேசி இலக்கம் : **011-2884790** ஊடாக **வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளரை (கொள்முதல் பிரிவு)** தொடர்பு கொள்ள முடியும்.

தலைவர்,
வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கொளமுதல் குழு,
வீதி அபிவிருத்தி அதிகார சபை

பொது மக்களுக்கான அறிவித்தல்

இல. 79, ஐயபுர, சித்தமுல்ல, பிலியந்தலயில் வசிக்கும், தே.அ.அட்டை இல. 531291972V உடைய **திரு. அநுர பலிஹவடன ரணதுங்க** என்பவர் வெலிபல் பிளான்டேஷன் பிரைவட் லிமிட்டட் மற்றும் அதனுடன் இணைந்த தோட்டங்களில் சுயாதீன ஆலோசகராக பணியாற்றி 2020 ஒக்டோபர் 31ம் திகதி முதல் ஆலோசகர் பதவியில் இருந்து விலகியுள்ளதுடன், இத் திகதியின் பின்னர் எமது நிறுவனத்தின் எந்தவொரு பணிக்கும் இவர் பங்களிப்பு செய்யவில்லை எனவும், இவரால் மேற்கொள்ளப்படும் எந்தவொரு கொடுக்கல் வாங்கல்களுக்கும் எமது நிறுவனம் பொறுப்பாகாது எனவும், சகல இலங்கைவாழ் மக்களுக்கும் இத்தால் அறியத்தருகிறோம்.

வெலிபல் பிளான்டேஷன் பிரைவட் லிமிட்டட்,
27-2, கிழக்கு கோபுரம், உலக வர்த்தக மையம்,
கொழும்பு 01.

அறிவித்தல்

நிறுவனத்தின் 2007ம் ஆண்டு 7ம் இலக்க சட்டப்பிரிவு 5 கீழ் பின்வரும் நிறுவனத்தின் கூட்டுறவு தொடர்பான அறிவிப்பு

நிறுவனத்தின் பெயர்
குவன்டம் குவாட்ஸ் (பிறைவட்) லிமிட்
நிறுவனத்தின் பதிவு இலக்கம்
பீ.வி 105865
பதிவுசெய்யப்பட்ட திகதி
26.05.2015
பதிவுசெய்யப்பட்ட காரியாலயம் இல.
இல.105/1, மாதுபிடிய வீதி, மஹாவில, பாணதுறை.
S C Ranganath A Fernando
கம்பனி செயலாளர்

Repeat Your ad For Better Offers

அற்றோணித்தத்துவத்தை இல்லாதொழித்தல்

வென்னப்புவ, தும்மலதெனிய கிழக்கு, 83 ஆம் இலக்கத்தைச் சேர்ந்தவரும் தற்போது நியுசிலாந்து, ஒக்லண்ட், பே வியு, கிளென்பீல்ட் வீதி, 606 என்ற இலக்கத்தில் வசிப்பவருமாகிய வர்ணகுலசூரிய a நெல்சன் குரூஸ் ஆகிய நான் 2018.01.16 ஆம் திகதியிடப்பட்டதும் 40231 என்ற இலக்கத்தைக் கொண்டதும் பிரசித்த நொத்தாரிஸ் டென்சில் பொன்சேகாவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு வென்னப்புவ, தும்மலதெனிய தெற்கு, ''சேர்ச் வியு'' என்ற முகவரியைச் சேர்ந்த வர்ணகுலசூரிய லெஸ்லி நெல்சன் குரூஸ் என்பவருக்கு வழங்கப்பட்டதுமான அற்றோணித்தத்துவத்தை இத்தால் இல்லாதொழித்து மற்றும் இரத்துச் செய்துள்ளேன்.

வர்ணகுலசூரிய நெல்சன் குரூஸ்

Marriage Proposals in the Sunday Observer
Is the best way to fulfil your Future Dreams

இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு
பெருந்தெருக்கள் அமைச்சு
வீதி அபிவிருத்தி அதிகார சபை

கேள்விகோரல்

01. வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நுவரெலிய நிறைவேற்று பொறியியலாளர் பணிமனையின் பிரதேச பெறுகைக் குழுவின் தலைவரால் வீதி அபிவிருத்தி அதிகார சபை சார்பாக நுவரெலிய நிறைவேற்று பொறியியலாளர் பணிமனை மூலம் செயற்படும் 100,000 கி.மீ வீதி செயற்றிட்டத்திற்கு தேவையான வாகனங்கள் மற்றும் இயந்திராதிகளைப் பெற்றுக்கொள்வதற்காக தகைமையான தகுதியுடைய கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

நிறைவேற்று பொறியியலாளர் பிரிவு	வேலை அலகு	வாகனம்/இயந்திரம்	தேவைப் படும் அளவு
நுவரெலியா	ரம்பொட	மோட்டர் கிரேடர் இயந்திரம் (120-140 11P)	1
		10 தொன் வீதி தகர்க்கும் இயந்திரம்	1
		05 தொன் வீதி தகர்க்கும் இயந்திரம்	1
		01 தொன் வீதி தகர்க்கும் இயந்திரம்	1
		நீர் பவுசர் 4000 லீ	1
		02 கியூப் டிப்பர்	2
		01 கியூப் டிப்பர்	2
		மின் ஒளி அமைப்பு 9 KVA	1
		பெக்கோ இயந்திரம்	2
		பிரேக்கர் உடன் அகழ்வு இயந்திரம் (120 HP)	1
	சமர்செட்	மோட்டர் கிரேடர் இயந்திரம் (120-140 HP)	1
		10 தொன் வீதி தகர்க்கும் இயந்திரம்	1
		05 தொன் வீதி தகர்க்கும் இயந்திரம்	1
		01 தொன் வீதி தகர்க்கும் இயந்திரம்	1
		நீர் பவுசர் 4000 லீ	1
		02 கியூப் டிப்பர்	2
		01 கியூப் டிப்பர்	2
		மின் ஒளி அமைப்பு 9 KVA	1
		பெக்கோ இயந்திரம்	2
		பிரேக்கர் உடன் அகழ்வு இயந்திரம் (120 HP)	1
	பம்பரகெலே	மோட்டர் கிரேடர் இயந்திரம் (120-140 HP)	2
		10 தொன் வீதி தகர்க்கும் இயந்திரம்	2
		05 தொன் வீதி தகர்க்கும் இயந்திரம்	1
		01 தொன் வீதி தகர்க்கும் இயந்திரம்	2
		நீர் பவுசர் 4000 லீ	2
		02 கியூப் டிப்பர்	4
		01 கியூப் டிப்பர்	2
		மின் ஒளி அமைப்பு 9 KVA	2
		பெக்கோ இயந்திரம்	4
		பிரேக்கர் உடன் அகழ்வு இயந்திரம் (120 HP)	1

02. பொது நிதி சுற்றுநிருபம் இல(04/2016 (ii) இன் பிரகாரம் கேள்வி கோரல் தேசிய ஒப்பந்தக்காரர்களுக்கு இடையில் போட்டி கேள்விகோரல் முறைமையின் பிரகாரம் இடம்பெறும்.
03. கேள்விதாரர்களுக்கு அலுவலக நேரங்களில் கீழ்க்காணும் அலுவலகங்களில் கேள்வி பற்றிய மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். நிறைவேற்று பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகார சபை கிரேடன் விலேஜ், நுவரெலிய.தொ.பே இல - 0552222704 மின்னஞ்சல் : eerdanuwaracliya@gmail.com
04. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்கள் நுவரெலிய கிரேடன் விலேஜ் இல் அமைந்துள்ள வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நிறைவேற்று பொறியியலாளர் பணிமனையில் கேள்வி ஆவணங்களை அலுவலக நேரங்களில் கட்டணங்கள் எதுவும் இன்றி பரீட்சித்துப் பார்க்க முடிவதுடன், 2022.03.14 முதல் 2022.03.28 வரை 9.00 மணிமுதல் 15.00 மணிவரையான காலத்திற்குள் மீளளிக்கப்படாத ரூ.1080.00 வெட் உடனான கட்டணத்துடன் எழுத்துமூல விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து ஆங்கில மொழியில் அச்சிடப்பட்ட முழுமையான கேள்வி விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
05. கேள்வி மேற்படி அட்டவணை காணப்படும் ஒரு வழங்களிற்காக ரூ. 5000.00 பெறுமதியுடைய கேள்விப் பிணையின்றி கொண்டிருப்பதுடன் ஒப்பந்தகாலம் முடியுடையும் வரை அது செல்லுபடியாதல் வேண்டும்.
06. பூர்த்தி செய்யப்பட்ட கேள்விகள் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறித்த ஒப்பந்தத்தை குறிப்பிட்டு 2022.03.28 ஆம் திகதி 15.00 மணிக்கு அல்லது அதற்கு முன்பு பதிவுத் தபாலில் நிறைவேற்று பொறியியலாளர் (நுவரெலியா), வீதி அபிவிருத்தி அதிகாரசபை, நுவரெலிய என்ற முகவரிக்கு அல்லது நிறைவேற்று பொறியியலாளர் பணிமனைக்கு கொண்டுவந்து ஒப்படைத்தல் வேண்டும் தாமதமான கேள்விகள் திறக்கப்படாமலேயே நிராகரிக்கப்படும். அன்றே 15.30 மணிக்கு கெள்விதாரர்கள் அல்லது அவர்களால் தேர்ந்தெடுத்து அனுப்பப்படும் பிரதிநிதிகள் முன்னிலையில் மேற்படி கேள்விகள் திறக்கப்படும்.
07. கேள்விச் சபையின் தீர்மானம் இறுதித்தீர்மானமாகும்.

தலைவர்
நிறைவேற்று பொறியியலாளர் பிரிவு பெறுகைக்குழு,
நிறைவேற்று பொறியியலாளர் பணிமனை,
வீதி அபிவிருத்தி அதிகார சபை
நுவரெலியா.

நந்தவனம் பவுண்டேஷன் சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு சாதனைப் 'பெண்கள் 2022' விருது வழங்கும் விழா சனிக்கிழமை (12) காலை சென்னை விஜய் பார்க் ஹோட்டலில் நடைபெற்ற போது சிறப்பு விருந்தினராக கலந்து சிறப்பித்த உதயன் வார இதழ் (கனடா) ஆசிரியர் ஆர்.என்.லோகேந்திரலிங்கம், இலக்கிய புரவலர் ஹாசிம் உமர் ஆகியோருடன் விருது பெற்ற சாதனையாளர்களான வவுனியாவை சேர்ந்த சூரியாலினீ,மன்னாரை சேர்ந்த வெற்றிச் செல்வி சந்திரகலா, திருகோணமலையை சேர்ந்த சுஹாசினி பரசுராமன் ஆகியோர் உடன் நந்தவனம் பவுண்டேஷன் தலைவர் சந்திரசேகரன் உடன் காணப்படுகின்றார்.

குருக்கள்மடம் ஸ்ரீ முருகன் ஆலய வருடாந்த உற்சவம்

ஆரையம்பதி தினகரன் நிருபர்

மட்டக்களப்பு குருக்கள்மடம் அருள்மிகு ஸ்ரீ முருகன் ஆலய வருடாந்த அலங்கார திருவிழாவும் சங்காபிஷேகமும் இன்று சாந்தி கருமங்கள் உடன் ஆரம்பமாகிறது. தொடர்ந்து நடைபெறும் 3 நாள் திருவிழா காலங்களில் தினமும் இரவு 8.00 மணிக்கு விசேட பூசை இடம்பெறுவதுடன் கூட்டு வழிபாடு, ஆன்மீக சொற்பொழிவுகள், இசைக்கச்சேரிகள் என பல்வேறு கலை நிகழ்வுகளும் இடம்பெறும்.வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு ஸ்ரீ முருகப் பெருமானுக்கு 1008 சங்குகளால் சங்காபிஷேகமும் இடம்பெற்று அன்றிரவு வைரவர் பூஜையுடன் உற்சவம் இனிதே நிறைவுபெறும். கிரியா கால நிகழ்வுகள் அனைத்தும் பிரதம சிவாச்சாரியார் தேசகீர்த்தி சமூக ஜோதி ஜோதிட கலாமணி சிவஸ்ரீ ஜி.என்.திருக்கணேஸ்வர குருக்கள் தலைமையில் மற்றும் பக்தி பூசணம் சாதக திலகம் சிவஸ்ரீ க. வடிவேல் குருக்கள், சர்வசாதகம் சிவஸ்ரீ ப. மயூர சர்மா ஆகியோர் பங்கு பற்றுதலுடன் இடம்பெறும்.

நீராட சென்ற மாணவன் நீரில் மூழ்கி பலி

பதுளை நகரத்தை அண்மித்த மெதிரிய நீர்நிலையில் நீராடச் சென்ற மாணவன் (நிலக்ஷன் வயது 16) நீரில் மூழ்கி பலியாகியுள்ளார்.

சனிக்கிழமை மதியம் நண்பர்கள் அறுவருடன் குறித்த நீர்நிலையில் நீராடிக் கொண்டிருந்தபோது நீரில் மூழ்கி பரிதாபகரமாக பலியாகியுள்ளார்.கிராமத்தவர்களின் உதவியுடன் சடலம் மீட்கப்பட்டு பிரேத பரிசோதனைக்காக பதுளை பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டு உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.இம் மாணவன் பதுளையில் பிரபல பாடசாலையில் கல்வி கற்பவராவார். சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

நடராஜா மலர்வேந்தன்

நீர்கொழும்பு மாநகர சபை

விலைமனு கோரலுக்கான அறிவித்தல்

நீர்கொழும்பு மாநகரசபை வளவில் வர்த்தக வசதிகளுடன் கூடிய இரு மாடி நூலகக் கட்டிடத்தை நிர்மாணிக்கும் திட்டம் - (எஞ்சிய வேலைகளை பூர்த்தி செய்தல்)

நீர்கொழும்பு மாநகர வளவில் வர்த்தக வசதிகளுடன் கூடிய இரு மாடி நூலகக் கட்டிடத்தை நிர்மாணிக்கும் திட்டத்தில் எஞ்சிய வேலைகளை பூர்த்தி செய்வதற்காக தகுதியுடைய ஒப்பந்ததாரர்களிடம் இருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன. திட்டத்திற்கான ஆலோசனை நிறுவனம் ஆர்கிபோம் டிசைன் கன்சால்டன் தனியார் நிறுவனமாகும்.

த கைமை

ஒப்பந்தத்திற்காக தகுதி பெறுவதற்கு நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையினால் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதிருத்தல் வேண்டும் என்பதோடு கீழுள்ள தேவைகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும.

- நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் பதிவு – C3 தரம் அல்லது அதற்கு மேற்பட்ட பிரிவு ஒன்றில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரராக இருத்தல் வேண்டும்.
- இதனை ஒத்த பண்புடைய நிர்மாணம் தொடர்பில் 03 ஆண்டுகளுக்கு மேல் அனுபவம் இருத்தல் வேண்டும்.
- விலைமனுதாரர்/ ஒப்பந்ததாரரிடம் நிலையான நிதி நிலை ஒன்று இருத்தல் வேண்டும் என்பதோடு கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குடன் நிதி நிலை அறிக்கை ஒன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.
- விலைமனுவுடன் ஆவணம் சார்ந்த ஆதாரங்களை சமர்ப்பித்தல் வேண்டும்.

மேல் குறிப்பிடப்பட்ட தகைமை அளவுகோல்களை பூர்த்தி செய்த விண்ணப்பதாரர்கள் மாத்திரம் மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்படும்.

01. விலைமனு விண்ணப்பங்களை பெற்றுக்கொள்வதற்கு இற்றைப்படுத்தப்பட்ட CIDA பதிவு புத்தகத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.
02. விண்ணப்பங்களை 2022.03.15 ஆம் திகதி தொடக்கம் 2022.04.04 ஆம் திகதி வரை மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 2.00 வரையான காலத்தில் மீளளிக்கப்படாத 35000.00 ரூபா வைப்பு ஒன்றை செலுத்திய பின் நீர்கொழும்பு, தெல்வத்த சந்தி, நீர்கொழும்பு மாநகர சபையின் பெறியியலாளர் பிரிவில் இருந்து பெற்றுக்கொள்ள முடியும்.
03. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை நகல் பிரதிகளுடன் 2022.04.04 ஆம் திகதி பி.ப. 2.00 அல்லது அதற்கு முன்னர் மாநகர ஆணையாளர், மாநகர சபை, நீர்கொழும்பு என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புவது அல்லது மாநகர ஆணையாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டிக்கு இடுவதை மேற்கொள்ளல் வேண்டும்.
04. விலைமனுக்கள் திறக்கப்படுவது விலைமனுக்கள் ஏற்பது முடிவுற்ற உடன் மேற்கொள்ளப்படுவதோடு நேரம் முடிவுற்ற பின் கிடைக்கின்ற மற்றும் தாமதித்து ஒப்படைக்கப்படும் விலைமனு விண்ணப்பங்கள் ஏற்கப்படமாட்டாது.
05. விலைமனு ஆவணங்கள் இடப்பட்ட உறையின் இடது பக்க மேற்பகுதியில் ''நீர்கொழும்பு மாநகர வளவில் வர்த்தக வசதிகளுடன் கூடிய இரு மாடி நூலகக் கட்டிடத்தை நிர்மாணிக்கும் திட்டம் - (எஞ்சிய வேலைகளை பூர்த்தி செய்தல்)'' என்று குறிப்பிட வேண்டும்.
06. எந்த ஒரு விலைமனு ஆவணத்தையும் ஏற்பது அல்லது நிராகரிக்கும் உரிமை நீர்கொழும்பு மாநகர சபை வசமானதாகும்.
07. விலைமனுக்களை திறக்கும் சந்தர்ப்பத்தில் விலைமனுதாரருக்கு அல்லது விலைமனுதாரரின் எழுத்துமூல அனுமதியை பெற்ற பிரதிநிதி ஒருவருக்கு மாத்திரம் தோன்றுவதற்கு முடியும். மேலதிக விபரங்களை மாநகர பொறியியலாளரிடம் இருந்து அலுவலக நேரங்களில் கீழுள்ள தொலைபேசி இலக்கத்தை அழைத்து தெரிந்துகொள்ள முடியும்.

என்.பி.ஆர்.வி. பெர்னாண்டோ,
மாநகர ஆணையாளர்,
மாநகர சபை, நீர்கொழும்பு

மாநகர பொறியியலாளர் - 0312233190
மின்னஞ்சல் - nmcengineer@gmail.com
நீர்கொழும்பு மாநகர அலுவலகத்தில்.
2022.03.14

இலங்கை துறைமுக அதிகாரசபை
(மத்திய சமையலறை)

2022 ஆம் ஆண்டுக்கான மீன் வழங்குவதற்கு வழங்குநர்களை பதிவு செய்தல்

2022 ஆண்டு ஏப்ரல் முதல் திசெம்பர் வரையான கால எல்லையினுள் இலங்கை துறைமுக அதிகாரசபையின் மத்திய சமையலறைக்குத் தேவையான மீன் வழங்குவதற்கு ஆற்றல் பெற்றுள்ள அரச நிறுவனங்கள், நியதிச்சட்ட சபைகள், கூட்டுறவு சங்கங்கள், உற்பத்தி நிறுவனங்கள் மற்றும் ஏனைய இலங்கையின் வழங்குநர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இதற்கான விண்ணப்பங்களை பெற்றுக்கொள்வதற்காக உங்கள் நிறுவனத்தின் கடிதத்தலைப்பினூடாக எழுத்து மூலம் விண்ணப்பிக்க வேண்டியதுடன், அதற்காக ரூபா 1000/- மீளளிக்கப்படாத விண்ணப்பக் கட்டணமொன்றினை இவ்வதிகாரசபைக்கு செலுத்த வேண்டும். குறித்த கோரிக்கை கடிதம் கொழும்பு - 13 கொச்சிக்கடை, மத்திய சமையலறை பிரிவு சிரேஷ்ட முகாமையாளரின் (உணவு/ பானங்கள்) அலுவலகத்தில் சமர்ப்பித்து அதற்காக பணம் செலுத்தும் வவுச்சர் பத்திரங்களை பெற்றுக்கொள்ள முடியும்.

விண்ணப்பங்களை விநியோகித்தல் 2022 மார்ச் மாதம் 11ஆம் திகதி மு.ப. 09.00 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு, 2022 மார்ச் 22 ம் திகதி பி.ப 2.00 மணிக்கு முடிவடையும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2022 மார்ச் 23ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு முன் சமையலறை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள 'டென்டர்' பெட்டியில் இடவேண்டும்.

2022.03.23 ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்வது முடிவடைந்த உடனேயே 'டெண்டர்' குழுவின் முன்னால் டென்டர் பெட்டி திறக்கப்படுவதோடு, தேவைப்படின் விண்ணப்பதாரிகளுக்கும் அச்சந்தர்ப்பத்தில் கலந்து கொள்ள முடியும்.

பதிவு செய்வதற்கு தகுதிகள் பெற்ற விண்ணப்பதாரிகளுக்கு அது தொடர்பாக பதிவுத்தபாலில் அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலதிக விபரங்கள் : 011-2434557, 011-2482797, 011-2483283, 011- 2483409, 011- 2483344, 011-2482831 ஆகிய தொலைபேசி இலக்கங்கள் ஊடாக பெற்றுக்கொள்ளலாம்.

பிரதான முகாமையாளர் (நலன்புரி மற்றும் கைத்தொழில் உறவுகள்)
நலன்புரி மற்றும் கைத்தொழில் உறவுகள் பகுதி.

மாகாண கல்வித் திணைக்களம்
வட மேல் மாகாணம்

விலைமனுக்களுக்கான அழைப்பு

மடிக்கணனிகள், ரப்லெட் கணனிகள் மற்றும் ஹெட்போன்கள் ஆகியவற்றை வழங்கல், ஒப்படைத்தல் மற்றும் நிறுவுதல்

Bid Code No.: NWP/EDU/Pro Acc/7/3-2/GEM/2021

செயற்றிட்டப் பெயர்: பொதுக் கல்வி நவீனமயமாக்கல் செயற்றிட்டம் (GEM)

01 ஆம் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு மடிக்கணனிகள், ரப்லெட் கணனிகள் மற்றும் ஹெட்போன்கள் ஆகியவற்றின் வழங்கல், ஒப்படைத்தல் மற்றும் நிறுவுதல் ஆகியவற்றிற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து வட மேல் மாகாண மாகாண கல்விப் பணிப்பாளரின் சார்பாக திணைக்கள பெறுகைக்குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கோருகின்றார்.

1 ஆம் அட்டவணை

அம்ச இல.	விளக்கம்	எண்ணிக்கை (அலகு)	விலைமனுப்பிணை - இ. ரூபாவில்
i.	மடிக்கணனிகள்	43	116,500
ii.	ரப்லெட் கணனிகள்	30	
iii.	ஹெட்போன்கள்	25	

02. அம்சத்தின் முழுமையான அளவிற்கு விலைமனுக்கோரல் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். ஒவ்வொரு அம்சமும் தனித்தனியாக மதிப்பீடு செய்யப்படும். ஒப்பந்தத்தை வழங்கும் திகதியிலிருந்து அறுபது (60) நாட்களுள் ஒப்பந்தமானது பூர்த்தி செய்யப்படல் வேண்டும்.
03. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் மூலம் நடாத்தப்படும்.
04. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை குருநாகல், கண்டி வீதி, வட மேல் மாகாண மாகாண கல்வித் திணைக்களம், பிரதான கணக்காளரிடமிருந்து பெற்று (தொலைபேசி/ தொலைநகல்: 037-2222422) வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 4 மணி வரையும் மேற்கூறப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
05. தகைமைத் தேவைப்படுத்தல்கள் பின்வருமாறு:
    (i) கடந்த மூன்று வருடங்களில் நிகரான பண்டங்களின் வழங்கலின் ஆகக் குறைந்த சராசரி நிதிப்புரள்வானது 8.7 மில்லியனாகவிருத்தல் வேண்டும் (2019-2021)
    (ii) தேவைப்படும் அம்சங்களின் வழங்கலில் ஆகக் குறைந்தது 3 வருட கடந்தகால அனுபவம் இருத்தல் வேண்டும்.
    (iii) விலைமனுதாரர் தொழில்நுட்பரீதியில் தகைமை பெற்ற மற்றும் தேர்ச்சியுள்ள ஊழியர்களைக் கொண்ட வேலைத்தளமொன்றை கொண்டிருத்தல் வேண்டும்.
    (iv) விலைமனுதாரர் வட மேல் மாகாணத்தில் முகவரொருவரை/ நிரந்தரமான உப-அலுவலகமொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.
    (v) 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்ட பதிவுச் சான்றிதழைக் கொண்டிருத்தல் வேண்டும்.
06. 2022 மார்ச் 14 ஆம் திகதியிலிருந்து 2022 ஏப்ரல் 04 ஆம் திகதி வரையும் அலுவலகங்களில் வேலை நேரங்களில் (மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 4 மணி வரையும்) மீளளிக்கப்படாத கட்டணமாக மூவாயிரத்து ஐந்நூறு ரூபாவை (3500 ரூபாவை) வட மேல் மாகாண மாகாண கல்விப் பணிப்பாளருக்கு செலுத்திய பின்னர், கீழேயுள்ள 8 ஆம் பந்தியிலுள்ள முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமையானது ரொக்கப் பணத்தில் அமைந்திருப்பதுடன் அல்லது வங்கி கணக்கிற்கு வரவு வைக்கப்படலாம் (மேலதிக விபரங்களுக்கு எமது இணையதளத்தை தயவு செய்து பார்வையிடவும்)

    2022 மார்ச் 28 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு கீழேயுள்ள 7 ஆம் பந்தியில் வழங்கப்பட்டுள்ள முகவரியான மாகாண கல்வித் திணைக்களத்தில் விலைமனு முன்னோடிக் கூட்டமொன்று நடைபெறும்.
07. முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அடக்கியுள்ள தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் **"Bid for Laptop Computers, Tablet Computers & Headphones"** என குறிப்பிடப்பட்டு பதிவுத்தபாலில் இரு பிரதிகளில் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் 2022 ஏப்ரல் 05 ஆம் திகதியன்று மு.ப. 9.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக ஒப்படைக்கப்படல் வேண்டும் அல்லது குருநாகல், கண்டி வீதி, வட மேல் மாகாண மாகாண கல்வித் திணைக்கள பிரதான கணக்காளரின் அலுவலகத்தில் இந்த நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள ''கேள்விப் பெட்டியில்'' சேர்க்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். 8 ஆம் பந்தியிலுள்ள முகவரியில் நேரடியாக சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் விரைவாகவே திறக்கப்படும். மேலே குறிப்பிட்டவாறான 'விலைமனுப்பிணையொன்றுடன்' அனைத்து விலைமனுக்களும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

    நாட்டில் நிலவும் கொவிட்-19 சூழ்நிலை காரணமாக, இந்த பெறுகை தொடர்பான அனைத்து மாற்றங்களும் எமது இணையதளத்தில் காட்சிப்படுத்தப்படும்.
08. மேலே குறிப்பீடு செய்யப்பட்டுள்ள முகவரியானது பின்வருமாறு:

A.S.K. Jayalath,
Chairman,
Departmental Procurement Committee,
Provincial Department of Education (NWP)
Kandy Road,
Kurunegala.

Telephone: 037-2222422
Facsimile Number: 037-2222422/037-2222545,
Web address: www.nwpedu.lk
Date: 14 March 2022

விலைமனுக்கோரல்

வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி

விலைக்கேள்வி இலக்கம் : 070/T/2021

மத்தளை சர்வதேச விமான நிலையத்தின் வியாபார வகுப்பு ஓய்விடம் மற்றும் தீர்வைகளற்ற பிரதேசத்தினை விரிவாக்கம் செய்தல்

(EXTENSION TO BUSINESS CLASS LOUNGE AND DUTY FREE AREA AT MRIA)

வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி சார்பாக அதன் தவிசாளரால் மத்தளை சர்வதேச விமானநிலையத்தின் வியாபார வகுப்பு ஓய்விடம் மற்றும் தீர்வைகளற்ற பிரதேசத்தினை விரிவாக்கம் செய்வதற்காக முத்திரைக் குறியிடப்பட்ட விலைக்கேள்விகள் தகைமைகளைப் பெற்ற தகுதியுடைய விலைக்கூறுநர்களிடமிருந்து கீழே குறிப்பிட்டுள்ளவாறு இத்துடன் அழைக்கப்படுகின்றன. மதிப்புசேர் வரி (VAT) தவிர்ந்த மதிப்பிடப்பட்ட தொகை ரூபா 161 மில்லியன்களாகும்.

இவ் வேலைப்பகுதிக்குள் மேற்கொள்ளப்பட வேண்டிய கட்டுமான பணிகளாக, வியாபார வகுப்பு ஓய்விடம் மற்றும் தீர்வைகளற்ற பிரதேசத்தினை விரிவாக்கம் செய்வதற்காகத் தேவையான கட்டுமானப் பணிகளை (அண்ணளவாக 710 சதுர மீட்டர் கொண்ட நிலப்பரப்பால்) மேற்கொள்ளப்பட வேண்டியதுடன், அக்குறித்த அனைத்து கட்டுமானப் பணிகளுக்கும் தேவையான அனைத்து கட்டிடப்பொருட்கள் மற்றும் தொழிற்படை பெற்று, விவரக்குறிப்பீட்டில் உள்ளவாறும், விலைப்பட்டியல் மற்றும் வரைப்படங்களுக்கமைவாகவும் மற்றும் உரிய பொறியியல் திட்டமிடலுக்கமைய மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

ஒப்பந்தத்தின் கட்டுமான வேலைகளுக்குரிய கால எல்லை - 270 நாட்களாகும்.

கருத்திட்டங்கள் அமைவிடம் : மத்தளை ராஜபக்ஷ சர்வதேச விமானநிலைய வளாகத்தில்

தேசிய போட்டியிடல் விலைக்கோரல் நடைமுறைகளுக்கமைவாகவே, விலைக்கேள்விகள் இடம்பெறும்.

இவ் ஒப்பந்தம் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விலைக்கேள்வியாளர்களுக்கே வழங்கப்படுவதுடன், இதற்கு முன்னர் நிராகரிக்கப்பட்ட பெயர் பட்டியலில் பெயர் உள்ளடங்கப்படாத ஒருவர் / தாபனமாக அமையப் பெறுதல் வேண்டும். மேலும, இந்த விலைக்கேள்வியாளர்கள் கட்டிட நிர்மாணிப்பு கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை (CIDA), (இதற்கு முன்னர், (ICTAD) பேரில் அழைக்கப்பட்ட), C2 மற்றும் C3 தரங்களில் (கட்டிட கட்டுமானங்களுக்காக) பதிவுசெய்யப்பட்ட குறித்த வகையிலான கட்டுமானப் பணிகள் தொடர்பான அனுபவமுள்ள ஒப்பந்ததாரராக இருத்தல் வேண்டும்.

இது தொடர்பாக ஆர்வம் காட்டும் விலைக்கேள்வியாளர்களுக்கு, 2022.03.15 முதல் 2022.04.19ஆந் திகதி வரையில் ஏதேனும் வேலை செய்யும் நாட்களில் மு.ப 09.00 மணிக்கும் பி.ப 03.00 மணிக்கும் இடையேயான காலப்பகுதிக்குள், கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின், வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவின், வழங்கல் தொடர் தலைவருக்கு திருப்பி தரப்படாத ரூபா 30,000/- (முப்பதாயிரம் ரூபா) மாத்திரம் காசாகச் செலுத்தி மற்றும் எழுத்துபூர்வமான விண்ணப்படிவமொன்றினை சமர்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ள அனைத்தும் பூர்த்திசெய்யப்பட்ட விலைக்கேள்வி இணைப்பு கோவையொன்றினைக் கொள்வனவு செய்துகொள்ள முடியும். அக்குறித்த விலைக்கேள்வி ஆவணங்களை மேற்குறிப்பிட்ட விலாசத்தில் கட்டணங்களின்றி பார்வையிட முடியும்.

விலைக்கேள்வி உத்தரவாதத்திற்காக சகல விலைக்கேள்வியாளர்களும், குறித்த ஒரு விலைக்கேள்விக்காக ரூபா பதினேழு இலட்சம் மாத்திரம் (ரூபா. 1,700,000.00) பணமாக அல்லது விலைக்கேள்வி தகவல் அட்டவணையில் 02 ஆம் பகுதியில் 17.2 பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தாபனமொன்றிலிருந்து பெற்றுக்கொண்ட கேள்வியின் அடிப்படையிலான விலைக்கேள்வி பிணைமுறியுடன் குறித்த விலைக்கேள்வியினை சமர்பிக்கப்படுதல் வேண்டும்.

2022.03.31ஆந் திகதி மு.ப 10.30 மணிக்கு மத்தளை ராஜபக்ஷ சர்வதேச விமானநிலையத்தின் பொறியியல் அலுவலகத்தில் நடைபெறும் ஆரம்ப விலைக்குறிப்பீட்டு கூட்டத்தில் பங்கேற்குமாறு அனைத்து விலைக்கேள்வியாளர்களுக்கும் மற்றும் அவர்களின் அதிகாரம் பூர்வமான பிரதிநிதிகளுக்கும் இத்துடன் அழைப்பு விடுக்கின்றேன்.

பூர்த்தி செய்யப்பட்ட விலைக்கேள்விகள் பிரதியொன்றுடன், 2022.04.20ஆந் திகதி பி.ப 02.00 மணிக்கு முன்னர், தவிசாளர், இலக்கம் 1, பெறுகைக் குழு, வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவு, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், கட்டுநாயக்க என்ற விலாசத்திற்கு நேரடியாக அல்லது பதிவுத்தபால் மூலம் கிடைக்கக்கூடியவாறு ஏற்பாடுகள் செய்தல் வேண்டும். தாமதமாக கிடைக்கும் விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். அத்திகதியில் குறித்த நேரத்தில் விலைக்கேள்விகள் பொறுப்பேற்கும் நேரம் முடிவடைந்ததும், விலைக்கேள்வியாளர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பூர்வமான பிரதிநிதிகள் முந்நிலையில் அக்குறித்த விலைக்கேள்விகள் திறக்கப்படும்.

இது தொடர்பாக மேலதிக தகவல்களைப் பெறவேண்டுமாயின் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின், சிவில் பொறியியலாளர் (திட்டமிடல் மற்றும் வடிவமைப்பு) பிரிவின், கிளைத் தலைவர் மூலம் 011-2263502/07 - என்ற தொலைபேசி இலக்கங்களை அழைப்பதன் ஊடாக அல்லது தொலைநகல் இலக்கம் 011-2251356 மூலம் அறிந்து கொள்ள முடியும்.

தவிசாளர்,
வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி,
பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம்,
கட்டுநாயக்க.

சிறு விளம்பரம்

மோட்டார் வாகனங்கள்

110
மாருதி கார்கள் விற்பனைக்கு
WP KS- 4822 Maruti A Star 2011, WP KD-4726 Maruti Alto 2006 motor ca rs. கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான் ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03 . தொ. பே. 0714 542958. 018653

வேலைவாய்ப்பு

319
வெற்றிடங்கள்
வீட்டு வேலையாளர்கள்
50 வயதுக்குக் குறைந்த வீட்டுப் பணிப்பெண் தேவை. 0773663978, 0712181811 018671

320
வெற்றிடங்கள்
ஹோட்டல்கள், பேக்கரிகள்
கொழும்பு 05, ஹெவ்லொக் வீதியில் இல் ஓர் சீன உணவகத்தில் வெற்றிடங்கள். ப யிலுநர்/ பயிற்சி பெற்ற வெயிட்டர்கள், கிச்சன் ஹெல்பர் , டிஷ் வொஷர்ஸ் மற்றும் வெயிட்டர்/ ரைடர்கள். தொடர்பு 0705323273, 0765718240. 016127

Repeat Your ad For Better Offers

தினகரன்
வடக்கின் உதயம்
Vadakkin Uthayam

வடக்கில் தென்னை முக்கோண வலயம் ஆரம்பிக்க நடவடிக்கை

வடக்கில் தென்னை முக்கோண வலயங்களை அடையாளப்படுத்தி தென்னங்காடுகளை உருவாக்கி மக்களின் வாழ்வாதரங்களை உயர்த்தும் வகையிலான திட்டங்களை கையளித்துள்ளோம் என வனஜீவராசிகள் வன பாதுகாப்பு அமைச்சின் வடக்கிற்கான திட்டங்களின் ஆலோசகர் சகாதேவன் தெரிவித்துள்ளார்.

யாழ்.ஊடக அமையத்தில் சனிக்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவ்வாறு தெரிவித்தார் மேலும் தெரிவிக்கையில்,

எம்மால் வடக்கில் மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்தி மற்றும் பொருளாதார மேம்பாடுகள் தொடர்பில் முன் வைக்கப்பட்ட திட்டங்களை அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ளது. அதன் மூலம் 3 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் வன கிராமம் உருவாக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வடக்கில் குறிப்பாக நெடுந்தீவை பூர்வீகமாகக் கொண்ட மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் முகமான திட்டங்களையும் கையளித்துள்ளோம். உடனடியாக அத்திட்டங்கள் நடைமுறைக்கு வரவுள்ளது.

நெடுந்தீவை பொறுத்த வரை இலங்கையில் சனத்தொகை அடர்த்தி குறைந்த பிரதேசம். அதனால் இலங்கையில் தனித்து விடப்பட்டுள்ளது. அதனாலயே அது அபிவிருத்தியிலும் பின் தங்கி காணப்படுகிறது. அந்த மக்களுக்கான வாழ்வாதாரம் இல்லை. 30 ஆயிரம் மக்களுக்கு மேல் வசித்த பகுதியில் தற்போது 3 ஆயிரம் பேர் வரையிலேயே வசிக்கின்றனர்.

அங்கு 30 ஆயிரம் வசித்த போது, தேங்காய் உற்பத்தி, பால் உற்பத்தி, கடலுணவு என அனைத்திலும் தன்னிறைவு கண்டவர்கள் தற்போது, 3ஆயிரம் பேர் வசிக்கும் நிலையில் தன்னிறைவு காண முடியாத நிலையில் உள்ளனர்.

எமது கணக்குப் படி எமது திட்டம் நிறைவேற இரண்டு வருட கால பகுதி ஆகும். அதன் மூலம் புதிய பொருளாதார மறுமலர்ச்சி ஏற்படும். அதனூடாக ஏறக்குறைய ஒன்றரை பில்லியன் ரூபாய் வருமானம் கிடைக்கும். அதுமட்டுமின்றி அங்குள்ள மக்களுக்கு காணிகள் கிடைக்கும். நெடுந்தீவு மாத்திரமின்றி வடக்கில் மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா, யாழில் வடமராட்சி மணற்காடு என அனைத்து பிரதேசங்களிலும் வனஜீவராசி திணைக்களம் கையகப்படுத்தி உள்ள காணிகளில் பொருளாதார அபிவிருத்திகளை முன்னெடுக்க முடியும் என நம்புகிறேன் என தெரிவித்தார்.

நாட்டுத்துப்பாக்கியுடன் ஒருவர் கைது!

(புதுக்குடியிருப்பு விசேட நிருபர்)

முல்லைத்தீவு மாங்குளம் பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட வன்னிவிளாங்குளம் பகுதியில் சட்ட விரோத நாட்டுத்துப்பாக்கியினை தம்வசம் வைத்திருந்த ஒருவரை மாங்குளம் பொலிசார் கைதுசெய்துள்ளார்கள்.

நேற்று முன்தினம் இரவு வன்னிவிளாங்குளம் பகுதியில் சட்டவிரோத நாட்டுத்துப்பாக்கி வைத்திருப்பதாக மாங்குளம் பொலிசாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து குறித்த பகுதிக்கு விரைந்த பொலிசார் அவரை கைதுசெய்துள்ளதுடன் நாட்டுத்துப்பாக்கியினையும் மீட்டுள்ளார்கள். 32 அகவையுடைய வன்னிவிளாங்குளம் பகுதியினை சேர்ந்த நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சமூகப்பணியாளர்களுக்கு விசேட விருதுகள்

யாழ்.மாவட்ட தந்தை செல்வா நற்பணி மன்றத்தின் தலைவர் சி. மகேந்திரம் தலைமையில் மாலை 3.30 மணிக்கு விருதுகள் வழங்கி வைக்கும் நிகழ்வு இடம்பெறும்.

இவ் நிகழ்வுக்கு பிரதம அதிதியாக இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ.சேனாதிராசாவும் சிறப்பு விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தனும், கௌரவ விருந்தினராக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். அன்றைய தினம் 150 பேருக்கு ஏற்கனவே பரிசோதித்த அடிப்படையில் இலவச மூக்கு கண்ணாடி தந்தை செல்வா ஞாபகார்த்த மன்றம் சார்பில் வழங்கப்படும். இதேவேளை ரெமிங்ரன் கல்லூரி மாணவர்களின் விசேட கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும் என்று செயலாளர் அறிவித்துள்ளார்.

புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய வருடாந்த பங்குனி உத்தரப் பொங்கல்

கிளிநொச்சி மாவட்டத்தின் பிரசித்தி பெற்ற ஆலயங்களில் ஒன்றாக காணப்படுகின்ற புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த பங்குனி உத்தர பொங்கல் விழா எதிர்வரும் 18ஆம் திகதி நடைபெற உள்ளது இந்த நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை (11.03.2022) குறித்த ஆலயத்தில் பாரம்பரிய முறைப்படி விளக்கு வைத்தல் பூசையுடன் ஆரம்பமாகியது பகல் 12 மணிக்கு ஆலய பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து பிரம்பு வழங்கும் வைபவம் இடம் பெற்றதையடுத்து யாழ் தென்மராட்சி புத்தூர் சந்தியிலுள்ள பண்டமரவடிக்கு சென்று பொங்கலுக்கான பண்டம் எடுத்து வரும் மரபுகளுக்கு அமைய பிற்பகல் மாட்டு வண்டிகளில் தொண்டர்கள் ஆலய முன்றலில் இருந்து புறப்பட்டுள்ளனர்.

தொன்று தொட்டு பேணப்படும் மரபுகளுக்கு அமைவாக இவ்வாறு புறப்பட்ட இவர்கள் யாழ் மீசாலை புத்தூர் சந்தியில் அமைந்துள்ள பண்டமரவடிக்கு சென்று அங்கேயே தங்கியிருந்து பொங்கலுக்கான பொருட்களை எடுத்து எதிர்வரும் 18ஆம் திகதி ஆலயத்தை வந்தடைந்து அங்கே பொங்கல் வழிபாடுகள் நடைபெறும் என்பது குறிப்பிடத்தக்கது

வவுனியா மயானத்தில் சிரமதானப்பணி

ஓமந்தை விஷேட நிருபர்

வவுனியா தோணிக்கல் பொது மயான சிரமதானப் பணி நேற்று இடம்பெற்றது.

வவுனியா தோணிக்கல்லில் உள்ள பொது மாயானமானது நீண்ட காலமாக சிரமதானம் செய்யப்படாமையால் பற்றைகள் சூழ்ந்த இடமாக மாறியதுடன் இங்கு சடலங்களை எரிப்பதற்கு அல்லது புதைப்பதற்கு பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களிற்கு உள்ளாகினர்.

இந் நிலையினை கருத்திற்கொண்டு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் லறி தலைமையில் கிராம சேவையாளர், அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் பொதுமக்கள் இணைந்து சிரமதான பணியினை முன்னெடுத்திருந்தனர்.

சுமார் 1500 குடும்பங்கள் வாழும் தோணிக்கல், தேக்கவத்தை, கற்குழி ஆகிய கிராமங்களை உள்ளடக்கிய கிராம சேவையாளர் பிரிவிற்கான பொது மயானமாக இம்மயானம் விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

யாழ் மாவட்டத்தில் ஜெய்ப்பூர் செயற்கை கால் பொருத்தும் முகாம்

கோப்பாய் குறூப் நிருபர்

இந்திய அரசின் நிதியுதவியுடன், யாழ் இந்தியத் துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் "ஜெய்ப்பூர் செயற்கை கால் பொருத்தும் முகாம்" யாழ் மாவட்டத்தில் நேற்று ஆரம்பிக்கப்பட்டது. இம்முகாம் எதிர்வரும் 30ம் திகதி வரை, யாழ். மாவட்ட முகாமைத்துவ திறன் அபிவிருத்தி பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

வலுவிழந்தோருக்கு சேவை செய்யும் பகவான் மகா வீரர் சஹயட சமித்தி (BHAGWAN MAHAVEER VIKLANG SAHAYATA SAMITI) தொண்டு நிறுவனமும், யாழ் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழு அலுவலகமும் இணைந்து இம்முகாமை நடாத்துகின்றன.

இதுதொடர்பான கலந்துரையாடல் கடந்த பெப்ரவரி மாதம் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளரும், யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான அங்கஜன் இராமநாதனுக்கும், பகவான் மகா வீரர் சஹயட சமித்தி (Bhagwan Mahaveer Viklang Sahayata Samiti) தொண்டு நிறுவனத்தின் சர்வதேச விவகாரங்களுக்கான பணிப்பாளர் சதீஷ் சி மேத்தாவுக்குமிடையில் நடைபெற்றிருந்தது.

இதில், வடக்கில் போரினால் அங்கங்களை இழந்த மற்றும் இதர காரணங்களால் அங்கங்களை இழந்த வறுமைக் குட்பட்ட மக்களை கருத்தில்கொண்டு ஜெய்பூர் செயற்கை கால் பொருத்தும் முகாமை யாழ் மாவட்டத்தில் நடாத்துவது தொடர்பிலும், யாழ் மாவட்டத்தில் Jaipur Foot நிறுவனத்தின் கிளையொன்றை நிறுவுவது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. அதனடிப்படையில் முதற்கட்டமாக, ஜெய்பூர் செயற்கை கால் பொருத்தும் முகாம் நடத்தப்படுகிறது.

இம்முகாமில் கலந்து கொள்ளும் பயனாளிகள் தமது பதிவுகளை தத்தமது பிரதேச செயலகங்கள் ஊடாக மேற்கொள்ள முடியும்.

கடந்த 35 வருடங்களாக 1.2 மில்லியன் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சேவையாற்றிவரும் பகவான் மகா வீரர் சஹயட சமித்தி தொண்டுநிறுவனம் கடந்த 2010 ம் ஆண்டில் போரில் பாதிக்கப்பட்ட வடபகுதி மக்களுக்கும் சேவையாற்றியமையும் குறிப்பிடத்தக்கது.

கடல் கடந்த வீரர்களுடன் களமாடி வெற்றிவாகை சூடிய பேசாலை மைந்தனுக்கு பாராட்டு

(தலைமன்னார் விஷேட நிருபர்)

பூ பந்தாட்ட உள்ளக அரங்கு விளையாட்டுப் போட்டிகளில் மாவட்ட ரீதியில் மாகாண ரீதியில் தேசிய ரீதியில் இருபது வயதுக்கு உட்பட்ட வீரர்களுக்கான போட்டிகளில் முதல் இடங்களைப் பெற்று பின் 17.11.2021 தொடக்கம் 26.11.2021 வரை கடல் கடந்து துபாய் நாட்டு விளையாட்டரங்கில் நாடுகளின் வீரர்களுடன் களமாடி முதல் இடத்தை வென்றெடுத்த மன்னார், பேசாலை கிராமத்தைச் சேர்ந்தவரும் மன்.பற்றிமா தேசிய பாடசாலை மாணவனுமாகிய செல்வன் ததேயு சில்வியன் டலிமாவுக்கு கௌரவிப்பு விழா இடம்பெற்றது.

பேசாலை விழிகள் கலா முற்றம் அமைப்பின் ஏற்பாட்டில் பேசாலையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இவ் அமைப்பின் இயக்குனர் தேசியக் கலைஞர் சாஹிக்கிய எஸ்.ஏ.உதயன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் பிரதம அதிதியாக பேசாலை பங்கு தந்தை அருட்பணி ஏ.ஞானப்பிரகாசம் அடிகளார் பலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினராக ஓய்வு நிலை அதிபர் அருட்சகோதரர் ஸ்ரனிஸ்லாஸ் (டிலாசால் சபை) மன்னார் பிரதேச செயலக உதவித் திட்டப்பணிப்பாளர் பெ.யூட் றொஹான் குரூஸ் உட்பட பூப்பந்து விளையாட்டு சம்மேளன தலைவர் எம். பிறின்ஸ் லெம்பேட் மன்னார் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் திருமதி ர.தவமதி, மன். பத்திமா தேசிய பாடசாலை பிரதி அதிபர் க.மெரில் குரூஸ் ஆகியோருடன் பலர் இவ்விழாவில் கலந்து கொண்டனர்.

எங்கள் பிரதேச வீரர்களை நாங்கள் அடையாளப்படுத்த வேண்டும் – செ.மயூரன்

ஓமந்தை விஷேட நிருபர்

எங்கள் பிரதேச விளையாட்டு வீரர்களை எங்களுடைய பிரதேசங்களிலே உருவாக்கி நாங்களே அடையாளப்படுத்த வேண்டும் என முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் செந்தில்நாதன் மயூரன் தெரிவித்தார்.

வவுனியாவில் சிறிநகர் மக்களின் 25 வருட கோரிக்கையாக இருந்த விளையாட்டு மைதானம் திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு, பின்னர் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில், மக்களாகிய எங்களுக்கு அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்வது என்பது மிக அரிதாகவே காணப்படுகின்றது. இங்கே விளையாட்டு வீரர்களை உருவாக்குவதற்கான மைதானத்தை பெற்றுக்கொள்ள 25 வருடங்களாகி இருக்கின்றது.

ஆனால் தெற்கிலே இருக்கின்ற ஒரு சிங்கள பாடகி ஒரே ஒரு பாடலை பாடிவிட்டு இன்று கொழும்பிலே ஒரு வீட்டை பெற்றிருக்கின்றார். ஜனாதிபதி என்ற முறையில் ஒரு பாராட்டை தெரிவித்திருக்கலாம் ஆனால் வீட்டை கொடுத்திருக்கின்றார்கள். நாங்கள் 25 வருடங்களாக எங்களுக்கு ஒரு மைதானத்தை பெற்று கொள்வதற்கும், எங்களுடைய சொந்த காணிகளை ஆக்கிரமித்து கொண்டிருக்கின்றவர்களை வெளியேற்றுவதற்கும் நாங்கள் இன்னும் போராடி கொண்டிருக்கின்றோம்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் இருபத்தைந்தாவது வருடாந்த மாநாடு

படம்: அஷ்ரப் ஏ.ஸமத்

சமூகப் பணியில் அர்ப்பணிப்புடன் செயற்படும் கலாநிதி தேசபந்து ஏ.எச்.எம்.முகுத்தார் ஹாஜியார்

மாத்தளை உக்குவளையில் கலாநிதி தேசபந்து ஏ. எச். எம். முகுத்தார் ஹாஜியார் என்ற நாமம் அனைவரும் அறிந்ததாகும். என்னேரமும் முக மலர்ச்சியுடன் காணப்படும் முகுத்தார் ஹாஜியார் ரத்வத்த கோப்பி தொழிற்சாலை உரிமையாளர்,செல்வந்தர் அ.வு என செல்லமாக அழைக்கப்பட்ட அபூபக்கர் உமரின் புதல்வராவார். சிறு வயது முதல் சமூக சேவையில் ஈடுபாடு கொண்டதால் வயதான காலத்திலும் சேவை மனப்பான்மையை விட்டு கொடுக்காமல் களத்தில் செயற்படுவராக திகழ்கிறார்.இவரின் சமூக சேவையை அங்கீகரித்து தேசபந்து. சமாதான தூதுவர்,சமாதான நீதவான்,கலாநிதி பட்டங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

1946 12 01 ஆம் திகதி பிறந்த இவர் 4 ஆண்கள் 3 பெண்களின் தந்தையாவார். பிள்ளைகள் அனைவரும் பட்டதாரிகளாக பெரும் பதவிகள் வகிப்பவர்கள்.இவர் மாத்தளை பாக்கியம் வித்தியாலயம், மாத்தளை சாஹிரா கல்லூரி, சென் தோமஸ் கல்லூரிகளின் பழைய மாணவராவார்.

1970 களில் மாத்தளை மாவட்ட கல்வி அபிவிருத்தி சங்கத்தை அன்றைய காலத்தில் ஆரம்பித்து நாளியகந்த, இரத்தோட்டை, தேவஹுவ போன்ற இடங்களில் முஸ்லிம் பாடசாலைகளை ஆரம்பித்து முஸ்லிம்களின் கல்வி வளர்ச்சிக்கு அன்று முதல் இன்று வரை பாரிய பணியாற்றி வருகிறார் முகுத்தார் ஹாஜியார். அக்காலத்தில் இஸ்லாம் பாடம் போதிக்க முடியாத பாடசாலைகளுக்கு இஸ்லாம் ஆசிரியர்களை நியமிக்கவும் பாடுபட்டவர். மாத்தளை மாவட்ட கல்வி அபிவிருத்தி சங்கத்தின் பொதுச் செயலாளராக இருந்து கல்வி மேம்பாட்டுக்கு பெரும் சேவை செய்தவர். அன்று அவரின் சேவையைப் பாராட்டி 1981ம் ஆண்டு இவருக்கு சமாதான நீதவான் பதவி வழங்கப்பட்டது.

மத்ரஸத்துல் நஜா அரபுக் கல்லூரியை டவுண் பள்ளியில் ஆரம்பித்து பின்னர் மாத்தளை கொங்காவெல பள்ளியில் பல வருடங்களாக நடத்தி தற்போது வாரியபொல தோட்டத்தில் புதிய கட்டிடத்தில் நடைபெற்று வருகிறது. இக்கல்லூரியில் அபிழ்கள், ஆலிம்கள் பட்டம் பெற்று நாட்டின் பல பகுதிகளில் சேவையாற்றி வருகின்றனர். இக் கல்லூரியின் தலைவராக ஹாஜியார் செயற்பட்டு வருகிறார்.

1970 ஆம் ஆண்டு சவூதி இலங்கை நட்புறவு சங்கத்தை ஸ்தாபிக்க அப்துல் காதர் (உயர் நீதிமன்ற நீதிபதி) சட்டத்தரணி யூ. எல். அன்வர் ஆகியோருக்கு முகுத்தார் ஹாஜியார் பக்கபலமாக செயற்பட்டவர். அத்தோடு 2006ஆம் ஆண்டு மஸ்ஜிதுகளில் ஏற்படும் பிணக்குகளை பொலிஸ், நீதிமன்ற கொண்டு செல்லாமல் தீர்ப்பதற்கான ஒரு யோசனை முன்வைக்கப்பட்டு அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா, முஸ்லிம் பண்பாட்டலுவல்கள் அமைச்சு ஆகியவற்றின் ஆலோசனையின் பேரில் மாத்தளை மாவட்ட மஸ்ஜித் சம்மேளனம் ஆரம்பிக்கப்பட்டது. அதன் தலைவராக முகுத்தார் ஹாஜியார் அன்று முதல் இன்று வரை செயலாற்றி கொண்டிருக்கிறார். மஸ்ஜித் சம்மேளனம். நாட்டில் எந்த அனர்த்தங்களின் போதும் அதன் பங்களிப்பை நல்கியுள்ளது. தனவந்தர்கள் ஏனையோரின் பெரும் முயற்சிகளில் இன்று வரை முழு நாட்டிற்கும் மாத்தளை மாவட்ட மஸ்ஜித் சம்மேளனம் சேவையாற்றி வருகிறது.

நாட்டில் ஏற்பட்ட அனைத்து அனர்த்தங்களின் போது மாத்தளை மாவட்ட மஸ்ஜித் சம்மேளனம் கரம் கொடுத்து உதவின சந்தர்ப்பங்கள் அநேகம். மாத்தளை மாவட்டத்திற்கு மட்டுமல்ல முழு நாட்டிற்கும் பெரும் நற்பணிகளையும் உதிவிகளையும் செய்து வருகின்றது. அதன் ஆரம்பம் முதல் இன்று வரை சம்மேளனத்தின் தலைவராக முகுத்தார் ஹாஜியார் செயற்பட்டு வருகிறார்.

மாத்தளையில் இந்த சம்மேளனம் ஆரம்பித்த பின்னர் நாட்டில் பல மாகாணங்களில் இவ்வாறான சம்மேளனங்கள் ஆரம்பிக்கப்பட்டு சேவைகள் ஆற்றப்படுகின்றன. மாத்தளை மாவட்டத்தில் பள்ளிகள் மற்றும் மத்தரஸாக்களில், காதி நீதிமன்றங்களில் ஏற்படும்

பிணக்குகள், தனிப்பட்ட பிரச்சினைகள், சமூக ஒற்றுமை ஆகியவற்றில் ஆர்வத்துடன் செயற்படக்கூடிய நிர்வாக குழு காணப்படுகிறது. கல்விமான்கள் மற்றும் அனைவரையும் உள்ளடக்குவதாக இந்த குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்த சம்மேளனத்தின் ஊடாக வரக்காமுறை, உக்குவளை தோட்டத்தில் உள்ள வறிய முஸ்லிம் மக்களுக்கு 40 பேர்ச் வீதம் காணிகள் வழங்கப்பட்டன. அதில் 186 குடும்பங்களுக்கு பல பிரச்சினைகளுக்கு மத்தியில் பாராளுமன்ற உறுப்பினர் பி.பி. கவிரத்னவின் ஒத்துழைப்பும் கிடைக்கப்பெற்றன. இன்று இங்கு ஹிஜ்ராபுர என்ற முஸ்லிம் கிராமமும் உருவாக்கப்பட்டுள்ளது. உக்குவளை பிரதேசத்தில் அக்காலத்தில் பெரும் பிரச்சினையாக இருந்த குடிநீர் தட்டுப்பாடு தொடர்பாக முகுத்தார் ஹாஜி காலம் சென்ற முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தனவிடம் அன்றிருந்த மாத்தளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பி.பி. கவிரத்தனவின் ஒத்துழைப்போடு கலந்துரையாடி அத்திட்டத்தை செயற்படுத்த முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர் மறைந்த அமைச்சர் காமினி திசாநாயக்கவிடம் ஒப்படைத்தார். அதேவேளை அன்றைய அரசாங்க அதிபர் தென்னகோன் (முகுத்தாரின் ஆசிரியர்) ஆகியோரின் முய்றசியில் உக்குவளை குடிநீர் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர் அங்குரார்ப்பணம் செய்து வைத்தார். அத்தோடு உக்குவளையை சுற்றி இருக்கும் ஊர்களில் காணப்பட்ட குடிநீர் பிரச்சினைக்குத் தீர்வாக (டெலிடா) என்ற அமைப்புடன் பேச்சுவார்த்தை நடத்தி அவர்களின் திட்டத்தில் குடிநீர் பிரச்சினைக்கு தீர்வு கிட்டியது.

அஜ்மீர் தேசியப் பாடசாலை பெற்றார், ஆசிரிய சங்கத்தில் உறுப்பினராக இருந்த காலப்பகுதியில் பாடசாலையின் குறைபாடுகளை நிவர்த்திக்க பெரும் பங்காற்றினார்.

அத்தோடு தனது ஊரிலுள்ள வெலிகல விஹாரைக்கான பாதை, பாலம், மின்சாரம், நீர் ஆகிய திட்டங்களை முன்னிருந்து செயற்படுத்தி பூர்த்தி செய்து கொடுத்துள்ளார். 2002 ஆம் ஆண்டு சமீலுஸ் சலாம் என்ற அரபுக் கல்லூரியை தனது சொந்த காணியில் 11 மாணவர்களுடன் ஆரம்பித்து சுமார் 250 மாணவர்கள் கற்கும் கலாசாலையாக உருவாக்கியுள்ளார். இக்கலாசாலையை விரிவாக்க தனது தந்தை,தாயின் காணியை வழங்கி உயர் நிலைக்கு கொண்டு வந்துள்ளார். இதில் கற்ற மாணவர்கள் இன்று உள் நாட்டிலும் வெளிநாட்டுகளில் தொழில் புரிகின்றனர். சமூக சேவை செய்வதற்கு தன் வாழ் நாளை அர்ப்பணித்து செயற்பட்டு வருகிறார். 2019ஆம் ஆண்டு இவரின் சேவையை பாராட்டி ஐக்கிய நாடுகள் மற்றும் ஏனைய நிறுவனங்கள் இணைந்து தேசபந்து பட்டமும் 2020ஆம் ஆண்டு குலோபல் பீஸ் யுனிவர்சிட்டியில் கலாநிதி பட்டம், 2022 ஆம் ஆண்டு இந்து சிலோன் சங்கம், சிலோன் ஏச்சுவர்ஸ் பவுன்டேசன் ஆகிய இணைந்த சமாதான தூதுவர் கௌரவ பட்டமும் வழங்கப்பட்டுள்ளன.

எம். சதுர்தீன் ...✍
மாத்தளை சுழற்சி நிருபர்

கிழக்கின் குரல்

காட்டு யானைகளின் அட்டகாசத்தால் பாதிப்படைந்த சம்மாந்துறை மக்கள்

கல்முனை மத்திய தினகரன் நிருபர்

சம்மாந்துறை பிரதேச சபை எல்லைக்குட்பட்ட சம்மாந்துறை மக்கள் குடியிருப்பு பிரதேசத்தினுள் நேற்று (13) அதிகாலையில் புகுந்த யானைகளின் அட்டகாசத்தினால் வீட்டு மதில்கள், வாயிற்கதவு மற்றும் பயிர்கள் சேதப்படுத்தப்பட்டுள்ளன.

சம்மாந்துறை வீட்டு குடியிருப்புகளை நோக்கி ஊடுருவிய காட்டு யானைகளின் நடமாட்டத்தினால் பிரதேசவாசிகள் அச்சமடைந்துள்ளனர்.

இதனால் இரவு நேரங்களில் அச்சம் நிலவிவருவதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

யானைகளின் அட்டகாசத்தினால் பிரதேச காணிகளில் உள்ள பயிர்கள் அதிகமாக சேதமாகியுள்ளதுடன் வீட்டில் தங்கியிருந்த மக்கள் தெய்வாதினமாக உயிர் தப்பியுள்ளனர். மேலும் இரவு வேளைகளில் ஊடுருவும் காட்டு யானைகள் அயலிலுள்ள காடுகளுக்குள் இருந்து குறித்த கிரமங்களுக்குள் வந்து சேதம் விளைவித்து வந்ததாக மக்கள் தெரிவித்தனர்.

யானைகள் கூட்டம் வீட்டு மதிலினை உடைத்து சேதம் விளைவித்ததோடு பயன்தரும் பயிர்களையும் மரங்களையும் கூட துவம்சம் செய்து சென்றுள்ளன. காட்டு யானைகள் ஏற்படுத்தும் சேதம் தொடர்பாக கிராம சேவையாளரிடமும் பொலிஸாரிடமும் கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலைமை அம்பாறை மாவட்டத்தில் வயலை அண்டிய பிரதேசங்களில் வேளாண்மை அறுவடை நிறைவடைந்த நிலையில் குறித்த காலத்தில் இந்த யானைகள் வருவதாகவும் இக்காலப் பகுதியில் மக்கள் அன்றாட அத்தியாவசிய தேவைகளுக்காக வெளிச்செல்ல முடியாமல் சிரமப்படுவதுடன் உயிராபத்தை எதிர்கொண்டு வருவதாகவும் கவலை தெரிவிக்கின்றனர்.

வெள்ளரிப்பழம் வியாபாரம் அதிகரிப்பு

மாளிகைக்காடு குறூப் நிருபர்

கல்முனை, சாய்ந்தமருது, மாளிகைக்காடு பிரதேசங்களில் வெள்ளரிப்பழம் வியாபாரம் களைகட்டியுள்ளது.

இப்பிரதேசத்தில் சுட்டெரிக்கும் வெயில் காலநிலைக்கு உடம்பின் சூட்டை தணிக்கும் வகையில் பிரதான வீதியில் பயணிக்கும் பலரும் இப்பழத்தினை கொள்வனவு செய்து வருகின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் களுதாவளை, களுவாஞ்சிக்குடி, பெரிய போரதீவு மற்றும் பழுகாமம் போன்ற இடங்களில் சேதனப்பசளை மூலம் உற்பத்தி செய்யப்படும் இப்பழமொன்று 60 ரூபா முதல் 300 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றன.

சைக்கிள்களிலும், மோட்டார் சைக்கிள்களிலும், சிறிய ரக லொறிகளிலும் இப்பழங்கள் மட்டக்களப்பின் பல பகுதிகளிலுமிருந்து ஏனைய மாவட்டங்களுக்கு கொண்டு செல்லப்படுகின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்திற்கு இரண்டு வாரங்களின் பின்னர் சமையல் எரிவாயு

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

மட்டக்களப்பு மாவட்டத்திற்கு கடந்த இரண்டு வாரங்களுக்கு பின்னர் லீட்ரோ சமையல் எரிவாயு சிலிண்டர்கள் (12) சனிக்கிழமை கொண்டுவரப்பட்டுள்ளது.

1200 சமையல் எரிவாயு சிலிண்டர்கள் மட்டக்களப்பு மாவட்டத்துக்கு கொண்டுவரப்பட்டதாக லீட்ரோ சமையல் எரிவாயுக்கான மட்டக்களப்பு மாவட்ட ஏக விநியோகஸ்தர் எஸ். எஸ். எம். சொல்தான் அண்ட் பிரதர்ஸ் நிறுவனத்தினர் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு மாவட்டத்துக்கு வந்த 1200 சமையல் எரிவாயு சிலிண்டர்கள் மாவட்டத்திலுள்ள சகல பிரதேசங்களுக்கும் பிரித்து வழங்கப்பட்டதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

காத்தான்குடிக்குரிய சமையல் எரிவாயு போத்தல்கள் காத்தான்குடி கடற்கரையில் வைத்து இலக்கங்கள் வழங்கப்பட்டு வரிசைக்கிரமமாக வைக்கப்பட்டு பொதுமக்களுக்கு வழங்கி வைக்கப்பட்டது.

கடந்த இரண்டு வாரங்களாக மட்டக்களப்பு மாவட்டத்தில் சமையல் எரிவாயு இல்லாததால் பல்வேறு சிரமங்களை ஹோட்டல்கள், சிற்றுண்டிச்சாலைகள், உணவகங்கள் நடத்துவோர் எதிர்நோக்கியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

சாய்ந்தமருதை சேர்ந்த 3 பிள்ளைகளின் இளம் தாயை காணவில்லை

கல்முனை மத்திய தினகரன் நிருபர்

அம்பாறை மாவட்டத்தின் சாய்ந்தமருது பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பொலிவேரியன் கிராமத்தில் வசித்து வந்த மூன்று பிள்ளைகளின் தாயான அப்துல் கபூர் பர்ஸானா (வயது 34) எனும் இளம் குடும்பப் பெண்ணை கடந்த 2022.01.29ம் திகதி முதல் காணவில்லை. காணாமல் போன அன்று அரிசி வாங்கி வருவதற்கென கடைக்கு சென்ற அப்பெண்மணி அக்கரைப்பற்றிலிருந்து கல்முனை நோக்கிச்சென்ற பேருந்தில் ஏறி சென்றதாக அப்பெண்ணை இறுதியாக கண்டவர்கள் தெரிவித்ததாகவும் இரண்டு மாதங்களை அண்மித்தும் இன்னமும் அவர் வீடு திரும்பவில்லை என இவரது தந்தை அப்துல் கபூர் ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

இப்பெண்மணி தொடர்பாக சாய்ந்தமருது பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. கணவனை சிறிது நாட்களாக பிரிந்து வாழும் மனநோயாளியான இந்த தாயின் பிரிவினால் மூன்று மாத கைக்குழந்தை உட்பட சிறிய பிள்ளைகள் செய்வதறியாது திணறி வருகின்றனர். தாய்ப்பால் கூட இல்லாமல் தாயினுடைய தாயின் பராமரிப்பில் உள்ள கைக்குழந்தை அழுதவண்ணம் உள்ளதால் இந்த இளம் தாய் தொடர்பில் தகவல் அறிந்தவர்கள் அல்லது இவரை பார்த்தாலோ அல்லது இவரைப் பற்றி தகவல் அறிந்தாலோ அண்மையில் உள்ள பொலிஸ் நிலையம் ஊடாக சாய்ந்தமருது பொலிஸ் நிலையத்திற்கு அறியத்தருமாறு அப்பெண்ணின் தந்தை அப்துல் கபூர் பொதுமக்களை கேட்டுக்கொள்கிறார்.

அக்கரைப்பற்று தேசிய பாடசாலையின் பாடவிதான அபிவிருத்தி மற்றும் பரீட்சைப் பிரிவிற்காக புகைப்பட பிரதி பண்ணும் இயந்திரம் கல்லூரியின் அதிபரின் வேண்டுகோளிற்கமைவாக தொழிலதிபர் ஒருவரினால் அன்பளிப்புச் செய்யப்பட்ட போது...

படம்: அட்டாளைச்சேனை தினகரன் நிருபர்

மட்டக்களப்பு நகரில் உள்ள பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுகளில் வசிக்கும் பொது மக்களுக்கான கொவிட்19 தொற்றுக்கு எதிரான தடுப்பூசிகள் செலுத்தும் நிகழ்வு நேற்று (13) மட்டக்களப்பு மாநகர பொதுச் சந்தை வளாகத்தில் நடைபெற்றபோது கோட்டைமுனை பொதுச் சுகாதார பரிசோதகர் ரி.மிதுன்ராஜ் தடுப்பூசிகளை ஏற்றி வைத்தார்.

படம்: மட்டக்களப்பு விசேட நிருபர்

நிந்தவூரில் முதலாவது டோஸ் பைசர் தடுப்பூசி செலுத்தும் பணி ஆரம்பம்

நிந்தவூர் குறூப் நிருபர்

நிந்தவூர் ஆதார வைத்தியசாலையில் இன்று (14) முதல் கொவிட் முதலாவது பைசர் தடுப்பூசி செலுத்தும் பணி ஆரம்பிக்கப்படுகிறது.

இதுவரைகாலமும் தடுப்பூசி பெற்றுக்கொள்ளாத 18 வயதிற்கு மேற்பட்ட அனைவரும் முதலாவது கொவிட் தடுப்பூசியான பைசர் தடுப்பூசியினைப் பெற்றுக் கொள்வதுடன், ஏற்கனவே தடுப்பூசிகளை செலுத்திக் கொண்டவர்கள் இரண்டாம் மற்றும் மூன்றாம் தடுப்பூசிகளையும் செலுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

அண்மைக்காலமாக சைனோபாம் தடுப்பூசிகளை செலுத்தாமலிருந்து, பைசர் தடுப்பூசிகளை செலுத்திக் கொள்ள எதிர்பார்த்தவர்களுக்கு, இது மிகப்பெரும் வாய்ப்பாக அமைந்துள்ளதுடன், இதனைப் பயன்படுத்திக் கொள்ளுமாறும் நிந்தவூர் ஆதார வைத்தியசாலை பொது மக்களைக் கேட்டுள்ளது.

திருமலை மாவட்டத்தில் விடுபட்டுள்ள

240 பட்டதாரி பயிலுனர்களுக்கும் நிரந்தர நியமனம் வழங்கவும்

இம்ரான் எம்.பி கோரிக்கை

ரொட்டவெவ குறூப் நிருபர்

அரசின் பட்டதாரி பயிலுனர் திட்டத்தில் இணைக்கப்பட்டு இதுவரை நிரந்தர நியமனம் வழங்கப்படாத திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த 240 பேருக்கும் நிரந்தர நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் பொதுநிர்வாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோனிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் அமைச்சருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பட்டதாரி பயிலுனர்கள் விடயம் தொடர்பாக இதற்கு முன்னர் நான் தங்களுக்கு அனுப்பிய கடிதம் தொடர்பில் உடன் நடவடிக்கை எடுத்தமைக்கு எனது மனம் நிறைந்த நன்றியை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன்.

பட்டதாரி பயிலுனராகப் பணியாற்றிய பலருக்கு நாடளாவிய ரீதியில் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது. திருகோணமலை மாவட்டத்தில் 240 பேர் தவிர்ந்த ஏனையோருக்கும் இந்த நிரந்தர நியமனம் கிடைக்கப் பெற்றுள்ளது.

எனினும், நிரந்தர நியமனம் கிடைக்கப் பெறாத திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த 240 பேரினதும் தகவல்கள் அமைச்சின் தரவுத்தளத்தில் இற்றைப்படுத்தப் படாமையே நிரந்தர நியமனத்தில் இருந்து இவர்கள் விடுபட்டமைக்கு காரணம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஸ்ரீ பாசுபதேசுவரர் ஆலய மகோற்சவம்

பனங்காடு தினகரன் நிறுபர்

அக்கரைப்பற்று பனங்காடு மாதுமை உடனுறை ஸ்ரீ பாசுபதேசுவரர் ஆலய திருக் கொடியேற்றம் கடந்த (09)புதன்கிழமை ஆலய பிரதம குருவும் மகோற்சவ குருவுமான சிவஸ்ரீ புண்ணிய குமார சிவாச்சாரியாரால் இடம்பெற்றது.

ஆலயத்தின் கொடியேற்றத்தினைத் தொடர்ந்து பத்துநாட்கள் சிறப்பாக திருவிழாக்கள் இடம்பெறும்.

இதில் திரிபுரதகனத் திருவிழா(11), தெப்பத்திருவிழா (12), பாசுபதாஸ்திரத்திருவிழா (14), மாம்பழத்திருவிழா (15) திருவேட்டைத் திருவிழா (16), சங்காபிஷேகம் (17) இடம்பெற்று எதிர்வரும் 18ம் திகதி தீர்த்தோற்சவம், தொடர்ந்து பூங்காவனம் மற்றும் வயிரவரின் மடையுடன் நிறைவடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கு மாகாண ஆளுநர் கிண்ணியா விஜயம்

கந்தளாய் தினகரன் நிருபர்

கிண்ணியா நகர சபையின் தவிசாளர் எம். எம்.நிவாஸின் வேண்டுகோளுக்கிணங்க வெள்ளிக்கிழமை (11) கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா ஜகம்பத் கிண்ணியா நகர சபைக்கு விஜயம் செய்து தேவையான குறைபாடுகளை கேட்டறிந்துள்ளதுடன், குறிஞ்சாக்கேணி பால நிர்மாணப் பணிகளை பார்வையிட்டு கட்டட நிர்மாணத்தை துரிதப்படுத்தும் நடவடிக்கையை மேற்கொள்ள பணித்துள்ளார்.

படகு சேவையைப் பயன்படுத்துகின்ற பாடசாலை மாணவர்களுக்கான பாதுகாப்பு அங்கிகளும் இதன்போது நகர சபை தவிசாளரிடம் கையளித்தார்.

எதிர்காலத்தில் எமது கிண்ணியா பிரதேசத்தின் அபிவிருத்திக்காக பல வழிகளிலும் உதவி செய்து தருவதாக ஆளுநர் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வின் போது நகரசபையின் உறுப்பினர்களான ஏ.எம். மஹ்தி, கலீபத்துள்ளா, ஆசாத், நசுருத்தீன் ஆகியோரும் சபையின் செயலாளர் மற்றும் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் அனைவரும் பங்கேற்றிருந்தனர்.

ஹப்புத்தளை தொட்டலாகலை தோட்ட பிரச்சினைக்கு தீர்வு

வடிவேல் சுரேஷ் எம்.பி நடவடிக்கை

ஒரு மாத காலமாக நிலவிவந்த ஹப்புத்தளை தொட்டலாகலை தோட்ட பிரச்சினைக்கு தோட்ட நிர்வாகத்தினருடன் நடைபெற்ற கலந்துரையாடலை தொடர்ந்து தீர்வு எட்டப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளருமான வடிவேல் சுரேஷ் தெரிவித்துள்ளார்.

ஹப்புத்தளை தொட்டலாகலை பெருந்தோட்ட பிரச்சினை தொடர்பாக தோட்ட முகாமைத்துவ அதிகாரிகளுடன் நடைபெற்ற கலந்துரையாடலைத் தொடர்ந்து அவர் மேற்கண்டவாறு கருத்து தெரிவித்தார்

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,..

ஹப்புத்தளை தொட்டலாகலை தோட்ட முகாமைத்துவம் தோட்டத் தொழிலாளர்களை வஞ்சித்து அவர்களுடைய வேலை நாட்களை குறைத்து அடாவடி நிர்வாகத்தில் ஈடுபட்டதன் விளைவாக மக்கள் தொடர் போராட்டங்களில் ஈடுபட்டிருந்தார்கள்.அதனைக் கருத்தில் கொண்டு கடந்த மாதம் நானும் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் உறுப்பினர்களும் பிரதேச மக்களுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டதுடன் இது தொடர்பில் ஹப்புத்தளை தொழில் ஆணையாளருக்கும் அறிவித்திருந்த போதிலும் தொடர்ந்து நிலவிய பிரச்சினையை தீர்க்கும் முகமாக கடந்த பேச்சுவார்த்தையில் வழங்கப்பட்டிருந்த 14 நாட்கள் கால அவகாசத்தை தொடர்ந்து நேற்று முன்தினம் மீண்டும் பிரதேசத்திற்கு விஜயம் செய்திருந்தோம்.

அத்துடன் பிரதேச மக்களையும் தோட்ட முகாமைத்துவ அதிகாரியையும் ஒரே இடத்திற்கு அழைத்து நேருக்கு நேராக பேச்சுவார்த்தை நடத்தி தொழிற்சங்க சட்டங்கள் மீறுவது தொடர்பாக என்னால் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை முகாமைத்துவம் முழுமையாக ஏற்றுக்கொண்டதை அடுத்து எம்மால் முன்வைக்கப்பட்ட 13 பிரச்சினைகளையும் கட்டம் கட்டமாக எதிர்வரும் புதுவருடத்திற்கு முன்னதாகவே சீர் செய்ய நடவடிக்கை எடுப்பதாக தோட்ட முகாமையாளர் உறுதியளித்தார்.

எரிபொருள், எரிவாயு பிரச்சினையால்

மரக்கறி உற்பத்தியாளர்கள், வியாபாரிகள் பாதிப்பு

தலவாக்கலை குறூப் நிருபர்

நாட்டில் ஏற்பட்டுள்ள எரிப்பொருள் தட்டுபாடு மற்றும் சமையல் எரிவாயு நெருக்கடி காரணமாக மரக்கறி உற்பத்தியாளர்களும் மரக்கறி வியாபாரிகளும் 40 வீதத்தால் வீழ்ச்சியடைந்து பாதிக்கப்பட்டுள்ளார்கள் என அகில இலங்கை திறந்த பொருளாதார மத்திய நிலையங்களின் சங்கத்தின் தலைவர் அருண சாந்த ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

நுவரெலியா திறந்த பொருளாதார மத்திய நிலையத்தின் காரியாலயத்தில் (11) வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அருண சாந்த ஹெட்டியாராச்சி மேலும் தெரிவிக்கையில்,

கடந்த வருடம் இரசாயன உரம், கிருமிநாசினி இறக்குமதி தடை செய்யப்பட்டதால் மரக்கறி உற்பத்தியில் பாரிய பாதிப்பு ஏற்பட்டது. அதனை தொடர்ந்து டீசல், பெற்றோல், மண்ணெண்ணெய் தட்டுப்பாடு காரணமாக மரக்கறி உற்பத்தியாளர்களும் விவசாயிகளும் விவசாய வர்த்தகர்களும் பாதிக்கப்பட்டார்கள். தற்பொழுது சமையல் எரிவாயு தட்டுப்பாடு காரணமாகவும் மரக்கறி உற்பத்தியாளர்களும் மரக்கறி வர்த்தகர்களும் பெரிதும் பாதிக்கப் பட்டுள்ளார்கள்.

சமையல் எரிவாயு தட்டுபாடு காரணமாக பல இடங்களில் உணவங்களிலும் சுற்றுலா விடுதிகளிலும் உணவு மற்றும் தேனீர் வழங்க முடியாமல் உணவங்களும் ஹொட்டல்களும் தற்காலிகமாக மூடிவைத்துள்ளனர். இதனால் சந்தைக்கு காய்கறிகளை கொள்வனவு செய்வதற்கு வருவதில்லை.

அதேவேளை டீசல் தட்டுபாடு காரணமாகவும் வெளிமாவட்டங்களிலிருந்து மரக்கறிகளை கொள்வனவு செய்வதற்கு நுவரெலியா கெப்படிபொல போன்ற இடங்களிலுள்ள திறந்த பொருளாதார மத்திய நிலையங்களுக்கு மரக்கறிகளை கொள்வனவு செய்வதற்கு லொறிகள் வருவதில்லை இதனால் மரக்கறிகளின் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

தங்க நகைகளை ஈடுவைத்தும் வட்டிக்கு கடன் பெற்றும் மரக்கறி உற்பத்தி செய்து மரக்கறிகளை அறுவடை செய்த பின் ஒரு நல்ல விலைக்கு மரக்கறிகளை விற்பனை செய்து ஈடுவைத்த நகைகளை மீளப்பெறமுடியாமலும் வட்டிக்கு வாங்கிய கடனை திருப்பி செலுத்த முடியாமலும் மரக்கறி உற்பத்தியாளர்கள் கஷ்டப்படுகின்றார்கள்.

அரசாங்கத்தின் ஒரு முறையான செயல் திட்டம் இல்லாததால் இன்று மரக்கறி உற்பத்தியாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்றார்.

பெறுகை அறிவித்தல்

குளியாப்பிட்டிய நகர சபை

குளியாபிட்டிய நகர சபையின் சபை மண்டபத்திற்கு மாநாட்டு மாதிரியான ஒலி பெருக்கித் தெகுதி ஒன்றை வழங்கி நிறுவுதல்

01. குளியாப்பிட்டிய நகர சபையின் சபை மண்டபத்திற்கு மாநாட்டு மாதிரியான ஒலிபெருக்கித் தொகுதி ஒன்றை வழங்கி நிறுவுவதற்காக கீழ்க்காணப்படும் நிபந்தனைகளின் அடிப்படையில் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

நிபந்தனைகள்

- ➢ அனைத்து விலைமனுக்களும் கீழ்க்காணப்படும் அடிப்படை விபரக்குறிப்புக்களிற்கமைவாக தெளிவாக, உருப்படிகளின்படி தனித்தனியாக சுயமாகத் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
- ➢ இச்சபை மண்டபத்தின் நீளம் 14.560 மீற்றர் மற்றும் அகலம் 5.300 மீற்றர் என்பதுடன், அதற்குப் போதியளவு ஒலிபரப்பக்கூடியவாறு குறைந்தபட்சம் கீழ்க்காணப்படும் விபரக்குறிப்புகளிற்கமைவாக சுவரில் பொறுத்தக்கூடிய, ஒலி பரப்பி உபகரணங்கள் (Wall Mounted Speakers) 04 இருத்தல் வேண்டும்.
- ➢ மாநாட்டு மாதிரியில் மைக்ரோபோன்கள் (Conference Microphone) 17 மற்றும் தலைவருக்கு மாநாட்டு மாதிரியில் மைக்ரோபோன் (Conference Microphone for Chairman) இருத்தல் வேண்டும்.
- ➢ அனைத்து இணைப்பு கம்பிகளும் PVC Casing மூலம் மறைக்கப்பட்டு நிறுவுதல் வேண்டும்.
- ➢ Rated output 60W இற்குக் குறையாத Mixer Amplifier ஒன்று இருத்தல் வேண்டும்.
- ➢ Conference Control unit ஒன்றின் மூலம் தலைவர் மைக்ரோ∴போன் ஒன்றுக்கு மேலதிகமாக, ஒரே முறையில் மைக்ரோ∴போன் ஒன்று முதல் 4 வரை கூடுதலாக உரையாற்றுவதற்காக கட்டுப்பாட்டு ஆளி ஒன்று இருத்தல் வேண்டும்.
- ➢ அனைத்து மாநாடுகளையும் (நாடாக்களில்) பதிவுசெய்து கொள்ளும் இயலுமை இருத்தல் வேண்டுமென்பதுடன் அதற்காக குறைந்தபட்சம் 6GB pendrive ஒன்றை வழங்கி ஒப்படைத்தல் வேண்டும்.
- ➢ Conference Microphone for Chairman unit ஒன்றினால் ஏதேனும் மைக்ரோ∴போன் ஒன்றை நிறுத்தி (off) அடுத்தவர் உரையாற்றுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படக்கூடியதாக இருத்தல் வேண்டும்.
- ➢ முழுமையான தொகுதிக்கும் குறைந்தபட்சம் இரண்டு வருட பொறுப்புக்கூறுங்காலம் இருத்தல் வேண்டும்.
- ➢ Amplifier ஆனது சுவரில் பொருத்தப்படும் (well mounted Rack) ஒன்றின் மூலம் நிறுவுதல் வேண்டும்.
- ➢ விலைமனுக்களைச் சமர்ப்பிக்கையில் ஒவ்வொரு உருப்படிக்குமான மாதிரிகள் என்ன என்பதனை தெளிவாக குறிப்பிடுதல் வேண்டுமென்பதுடன், பெறுமதி சேர் வரி செலுத்துபவராயின், அவற்றை தனித்தனியாகச் சமர்ப்பித்தல் வேண்டும்.
- ➢ நீங்கள் சமர்பிக்கும் விலைமனுக்கள், தொகுதியை நிறுவி ஒப்படைத்த நாளிலிருந்து 06 மாத பராமரிப்பு காலத்திற்கு உட்பட்டதெனவும் அதற்காக சித்திகரமான விலைமனுவின் 5% வைப்புத் தொகைக் கட்டணமொன்று, தடுத்து வைத்துக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
- ➢ தடுத்து வைத்துக் கொள்ளும் காலத்தின் பின்னரும் கூட, நியாயமான தொகையொன்றிற்கு ஏதேனும் பராமரிப்பு ஒன்றைச் செய்வதற்கு ஏற்பட்டால், அதனை மேற்கொள்வதற்கு ஒத்திசைதல் வேண்டும்.
- ➢ சித்திகரமான விலைமனுதாரர், மேற்படி விடயங்களை உள்ளடங்கிய ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திடுதல் வேண்டும்.
- ➢ விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கு முன்னர், குளியாப்பிட்டிய நகர சபையின் சபை மண்டபத்திற்கு அலுவலக நேரங்களில் சமுகமளித்து பரிசீலனை மேற்கொண்டு தேவையான அனைத்து அளவீடுகளையும் பெற்றுக்கொண்டு, அனைத்து துணை உறுப்புக்கள் மற்றும் பணிச்சிரமம் உட்பட விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

Conference Microphone

NO	Item	Specification
1	Mic Type	Conference system, Condenser Mic
2.	Indicator	Yes
3.	Mounting	Fixed Tabletop
4.	Pointing Feature	Omni-Directional
5.	Frequency Response	50Hz – 18 KH_2
6.	Sensitivity	46dB ± 4dB
7.	THD	<0.3%

SPEAKER

NO	Item	Specification (minimum)
1.	Rated Input	Min 10W
2.	Impedance	100V line : 1kΩ (10w) 70V linę : 500Ω (10w)
3.	Sensitivity (1m/1w)	90 dB
4.	Frequency Response	120-20000H_2
5.	Speaker Component	Low Frequency: 5" (12 cm) Cone Type High Frequency; Balanced dome - Type

Mixer Amplifier

NO	Item	Specification (minimum)
1.	Power Input	220-240 V,AC
2.	Rated Output	Min.60w
3.	Frequency Response	50-20000 H_2
4.	Distortion	Under 1% at 1KH_2, 1/3 Rated power
5.	Input	Mic 1-3 (min) - 60dB*,600Ω, Balanced, phone jack AUX1,2: -20dB,10kΩ, Un balanced, RC⋀ pin Jack
6.	Output	Speaker Out; Balanced (Floating) High impedance ; 170Ω (100V), 83Ω (70V) Low impedance ; 4Ω (15.5V) . Rec Out; OdB;600Ω, unbalanced, RCA pin jack
7.	Phantom Power	Dc+21V (Mic1)
8.	S/N Ratio	Over 60dB
9.	Cone Control	Bass ± 10 dB at 100 H_2 Treble ± 10 dB at 10 KH_2
10.	Indicator	Power; Signal; Peak

02. மேற்படி விபரக்குறிப்புகளிற்கமைவாக இந்த ஒலி பெருக்கித் தொகுதியை வழங்கி நிறுவுவதற்கான அனைத்து விரபங்களும் உள்ளடக்கப்பட்டு சுயமாகத் தயாரிக்கப்பட்ட விலைமனுக்கள் 2022.03.31 அன்று பி.ப.1.30 இற்கு முன்னர் பதிவுத்தபாலில் அல்லது நேரடியாக குளியாப்பிட்டிய நகர சபையின் செயலாளருக்கு கிடைக்கச் செய்தல் வேண்டும். விலைமனுக்களை அடக்கும் உறைகளின் இடதுபக்க மேல் மூலையில், விலைமனு விடயம் குறிப்பிடப்படல் வேண்டும். இது தொடர்பான மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் நகர சபையின் கைத்தொழில் வேலை அத்தியட்சகர்/வழங்கல் அலுவலரை அழைத்துப் பெற்றுக் கொள்ளலாம்.

03. விலைமனுத் தொடர்பான இறுதித்தீர்மானம் குளியாப்பிட்டிய நகர சபையின் பொது சபைக்கு உரித்தாகும்.

ஏ.எம்.லக்ஷ்மன் அதிகாரி, தலைவர்
நகரசபை - குளியாப்பிட்டிய
2022.03.11

அலுவலகம் - 037-2281275/037-4947850/037-4947851
மின்னஞ்சல் - kuliyauc@gmail.com
தொலைநகல் - 037-2281114
இணையம் - www.kuliyapitiya.uc.gov.lk

விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத்தொகுதி அதிகார

விளையாட்டுத்துறை பொருட்களுக்கான பெறுகை

ஒப்பந்த இல – SNSCA/Procurement/07/2022

1. சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத்தொகுதி அதிகார சபையின் விளையாட்டுத்துறைப் பொருட்களின் தேவைப்பாடுகளை வழங்குவதற்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத்தொகுதி அதிகார சபையின் பெறுகைக் குழுவின் தலைவர் முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

தொ. இல.	உருப்படிகள்	குறிப்பிடவும்	அளவு
01	Javelin Racks	எண்ணிக்கை	04
02	Hurdles Racks	எண்ணிக்கை	04
03	Stop Boards (for shot put- for International Meets)	எண்ணிக்கை	04
04	Stop Boards (for shot put-for Local use)	எண்ணிக்கை	01
05	Athletic Shelter Mobile	எண்ணிக்கை	02
06	Line marker Liquid (12.5 Lts)	வாளிகள்	25
07	Telescopic Measuring Device	எண்ணிக்கை	02
08	Measuring tape Steel - 10 m	எண்ணிக்கை	10
09	Measuring Tape Steel - 20 m	எண்ணிக்கை	10
10	Fiber Measuring Tape - 30 m	எண்ணிக்கை	07
11	Steel Measuring tape - 30 m	எண்ணிக்கை	12
12	Fiber Measuring tape - 50 m	எண்ணிக்கை	07
13	Steel Measuring tape - 50 m	எண்ணிக்கை	12
14	Fiber Measuring tape - 100 m	எண்ணிக்கை	07
15	Steel Measuring tape - 100 m	எண்ணிக்கை	14
16	Manual Lap Counter with bell	எண்ணிக்கை	01
17	Basket ball net (pair)	எண்ணிக்கை	94
18	Football net	தொகுதி	01
19	Corner Flags (Set) for Football	தொகுதி	01
20	Rugby Post	சோடிகள்	01
21	Rugby Post Padding	தொகுதி	01
22	Corner Flags (Set) For Rugby	தொகுதி	01
23	Starting block	எண்ணிக்கை	10
24	Relay Battens	தொகுதி	01
25	High Jump Mattress Complete (for local use)	தொகுதி	01
26	High Jump uprights	சோடிகள்	01
27	High Jump Measuring Devices	எண்ணிக்கை	01
28	Take -off board with foul strip	எண்ணிக்கை	03
29	Discuss 750g	எண்ணிக்கை	04
30	Judges flags (White)	எண்ணிக்கை	10
31	Judges flags (Yellow)	எண்ணிக்கை	10
32	Judges flags (Red)	எண்ணிக்கை	10
33	Sector Line tape (roll)	எண்ணிக்கை	03
34	Finishing Post (Athletic)	எண்ணிக்கை	02
35	Netball Net	சோடிகள்	50
36	Swimming Lane Ropes with adjustable hooks (50m)	எண்ணிக்கை	19
37	Karate Court (Complete)	தொகுதி	01
38	Table Tennis Surroundings	எண்ணிக்கை	200
39	Netball Score Board (Manual) Stand	எண்ணிக்கை	02
40	Basketball - Balls	எண்ணிக்கை	05
41	Badminton Net Measures	எண்ணிக்கை	02
42	Badminton Net Post	தொகுதி	05
43	Gymnastic Spring Board	எண்ணிக்கை	01
44	Gymnastic Parallel Bar	எண்ணிக்கை	01
45	Gymnastic Uneven Bar	எண்ணிக்கை	01
46	Gymnastic Horizontal Bar	எண்ணிக்கை	01
47	Table Tennis Score Board (Manual) Table	எண்ணிக்கை	10
48	Table Tennis Net with Uprights	சோடிகள்	06
49	Table Tennis Measuring Equipment	எண்ணிக்கை	05
50	Swimming Kick boards	எண்ணிக்கை	30
51	Swimming Pull Buoys	எண்ணிக்கை	30
52	Stopwatch - Lap Memory 10	எண்ணிக்கை	01
53	Life Saving Rings	எண்ணிக்கை	04
54	Basket Ball post Outdoor	எண்ணிக்கை	01
55	Lane Ropes Store Reels	எண்ணிக்கை	09

02. விலைக்கோரல்கள் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் மூலம் இடம்பெறும்.

03. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகைமையைப் பெறுவதற்கு
- சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலில் இடம்பெறாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் பொருட்கள், அலுவலக துணைப்பாகங்கள் மற்றும் உபகரணங்களை வழங்குதல் / உற்பத்தி செய்தல் / இறக்குமதி செய்வதற்கு கம்பனி பதிவுச் சட்டத்தின் கீழ் செல்லுபடியாகும் பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும். மேலும் இதற்கு நிகரான பொருட்களை வழங்குவதில் (2020 மற்றும் 2021 தவிர) ஆகக் குறைந்தது 5 வருட கால அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- சகல விலைமனுதாரர்களும் மேற்குறிப்பிடப்பட்டவற்றை நிரூபிப்பதற்கான ஆவண ரீதியான சான்றுகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- அரசாங்கத் திணைக்களங்களுக்கு வழங்கிய மற்றும் விளையாட்டுத்துறை பொருட்களை வழங்குதற்கு உங்களின் கொள்ளளவிற்கான ஆதாரத்தை நிரூபிப்பதற்கான ஆவண ரீதியான சான்றுகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- பங்குதாரரானால் 48ஆம் படிவத்துடன் கம்பனியின் பதிவுச் சான்றிதழை விண்ணப்பத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
- சகல விளையாட்டுத்துறைப் பொருட்களும் IAAF, FIBA, INF, WKF, FIG, FIFA, FINA, BWF, ITTF விபரக்குறிப்பின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்டவையாக இருத்தல் வேண்டும்.

04. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத்தொகுதி அதிகார சபையின் பெறுகைப் பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் 2022-03-15ஆம் திகதி முதல் 2022-04-01ஆம் திகதி வரையான வார நாட்களில் மு.ப. 09.00 மணிக்கும் பி.ப. 3.00 மணிக்கும் இடைப்பட்ட காலத்தில் பின்வரும் முகவரியில் விலைக்கோரல் ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்காலாம்.

05. மீளளிக்கப்படாத 2,500.00 ரூபா கட்டணத்தைச் செலுத்தியதன் பின் 2022-03-15ஆம் திகதி முதல் 2022-04-01ஆம் திகதி வரையான வார நாட்களில் மு.ப. 09.00 மணிக்கும் பி.ப. 2.30 மணிக்கும் இடைப்பட்ட காலத்தில் கொழும்பு-13, ஆர்தர் டி சில்வா மாவத்தை, சுகததாச தேசிய விளையாட்டு கட்டிடத்தொகுதி அதிகார சபையின் பெறுகைப் பிரிவு தலைவருக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் விலைக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கொள்வனவு செய்யலாம்.

06. அனைத்து விலைமனுக்களுடனும் 100,000.00 ரூபா பெறுமதிக்கு இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையில் செயற்படும் வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்ட சுகததாச தேசிய விளையாட்டு கட்டிடத்தொகுதி அதிகார சபையின் பெறுகைப் பிரிவு தலைவரின் பெயருக்கு வழங்கப்பட்ட விலைமனுப் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனுப் பிணை முறி 2022-07-29ஆம் திகதி வரை செல்லுபடியாகும் தன்மையில் இருத்தல் வேண்டும். (விலைக்கோரல்கள் முடிவுறுத்தப்படும் நாள் முதல் 119 நாட்கள் வரை)

07. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2022-03-25ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு சுகததாச வெளியக விளையாட்டரங்கின் நிர்வாகத் தொகுதியில் இடம்பெறும்.

08. தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர் ஒப்பந்தப் பெறுமதியின் 10% தொகையை வினைத்திறன் முறியாக சமர்ப்பித்தல் வேண்டும்.

09. விலைமனுக்கள் 2022-07-01ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும். (விலைக்கோரல்கள் முடிவுறுத்தப்படும் நாள் முதல் 91 நாட்கள் வரை)

10. நகல் பிரதிகளுடனான முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை ‘‘மூலப் பிரதி” மற்றும் ‘‘நகல் பிரதி” எனத் தெளிவாகக் குறிப்பிட்டு 2022-04-04ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் பின்வரும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும் அல்லது கொழும்பு-13, ஆர்தர் டி சில்வா மாவத்தை, சுகததாச தேசிய விளையாட்டு கட்டிடத்தொகுதி அதிகார சபையின் பெறுகைப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். இதே பிரிவில் விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்ட உடனடுத்து அவைகள் திறக்கப்படும் என்பதுடன் விலைமனுதாரர் அல்லது அவரது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் சமுகம் தரலாம். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

11. மேலும் விண்ணப்பிக்கும் விலைமனுதாரர் விபரக்குறிப்புகளின் பிரகாரம் ஒவ்வொரு உருப்படிக்காகவும் மாதிரிகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

12. விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ‘‘விளையாட்டுத்துறைப் பொருட்களுக்கான விலைமனு - 2022, ஒப்பந்த இல. SNSCA/Procurement/07/2022” எனக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்

தலைவர்,
பெறுகைக்குழு,
சுகததாச தேசிய விளையாட்டு கட்டிடத்தொகுதி அதிகார சபை,
ஆர்தர் டி சில்வா மாவத்தை, கொழும்பு-13.
தொலைபேசி: 0112445677 / தொலைநகல்: 0112445675

விலைமனு அழைத்தல்

வீதிப்பயண போக்குவரத்து அதிகார சபை

மேல் மாகாணம்

தெல்கொட, பொரள்ள, வெயாங்கொட, திவுலபிட்டிய, பாணந்துறை, கொட்டாவ மற்றும் அளுத்கம பஸ் நிலையங்களில் நிர்மாணிக்கப்பட்டுள்ள கடைகளைக் குத்தகைக்கு விடுதல்.

மேல் மாகாண வீதிப்பயண போக்குவரத்து அதிகார சபைக்கு உரித்தான பிரதான பஸ் நிலையங்களில் நிர்மாணிக்கப்பட்டுள்ள கீழ் காணப்படும் கடை அறைகள் அவற்றிற்கு முன்னால் குறிப்பிடப்படும் காலத்திற்குக் குத்தகைக்கு விடுவதற்காக விலைமனுக் கோரப்படுகின்றது.

பஸ் நிலையம்	கடை அறை இலக்கம்	கடை எண்ணிக்கை	குத்தகைக் காலம்
அளுத்கம	கீழ் மாடி (கடை இல 06) மேல் மாடி (கடை இல 12)	02	05 வருடங்கள்
தெல்கொட	கீழ் மாடி (கடை இல 02) மேல் மாடி (கடை இல 01, 02, 03, 04, 05, 06)	07	10 வருடங்கள்
பொரள்ள	கீழ் மாடி (கடை இல 07)	01	
வெயாங்கொட	கீழ் மாடி (கடை இல 08)	01	
திவுலபிட்டிய	மேல் மாடி (கடை இல 07, 08, 10, 11, 14,)	05	
கொட்டாவ	01	01	
பாணந்துறை	மேல் மாடி (கடை இல 42)	01	
	மொத்தம்	18	

விலைமனுப்படிவங்களை வழங்கும் இறுதித் தினம் மற்றும் நேரம் : 2022.04.03 பி.ப. 1.00 வரை
விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி மற்றும் நேரம் : 2022.04.04. பி.ப. 2.00 வரை

விலைமனுத்திறக்கப்படும் திகதி மற்றும் நேரம்: 2022.04.04 பி.ப. 2.00

மீளளிக்கப்படாத ரூபா 2,000.00 இற்கான படிவக் கட்டணம் மற்றும் மீளளிக்கப்படும் ரூபா 5,000.00 இற்கான விலைமனு வைப்புத் தொகையை காசாகச் செலுத்தி, விலைமனுப் படிவங்களைக் கீழ்க்காணப்படும் முகவரியின் பிரதான அலுவலக நிதிப் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம்.

விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினத்திற்கு மற்றும் நேரத்திற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபாலில் அல்லது நேரடியாகப் பிரதான அலுவலக நிருவாகப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியில் சேர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும். மேலும் விலைமனுக்களை அடக்கும் உறைகளின் இடது பக்க மேல் மூலையில் 'கடை இல..... குத்தகைக்கு எடுத்தல்..... பஸ் நிலையம்' எனக் குறிப்பிடல் வேண்டும்.

மேலதிக தகவல்களை தொ.பே.இல. 0112871355 மூலம் பிரதி பொது முகாமையாளர் (நிதி)ஐ அழைத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

தலைவர், பெறுகைக்குழு,
வீதிப்பயணப் போக்குவரத்து அதிகார சபை (மே.மா)
இல. 89, ரண்மக பாய, கடுவெல வீதி, பத்தரமுல்ல.
2022.03.14

விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

கல்வி அமைச்சு

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்

தூரிதப்படுத்தப்பட்ட உயர்கல்வி விரிவாக்கம் மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகள் உலக வங்கி செயற்றிட்டம்

பிரதான துணைப்பாகங்கள் சகிதம் Studio Consoleஐ வழங்குதல், விநியோகித்தல் மற்றும் நிறுவுதல்

Bid No. AHEAD/RA3/RIC/SJP/FHSS/GOODS/08

1. ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவரினால் தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து பின்வரும் அட்டவணையிலுள்ள விபரக்குறிப்புகளின் பிரகாரம் பிரதான துணைப்பாகங்கள் சகிதம் Studio Console ஐ வழங்குதல், விநியோகித்தல் மற்றும் நிறுவுதலுக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

தொ. இல.	விபரங்கள்	எண்ணிக்கை	இல. ரூபாயில் விலைக் கோரல் பிணை முறி தொகை
01	பிரதான துணைப்பாகங்கள் சகிதம் Studio Console ஐ வழங்குதல், விநியோகித்தல் மற்றும் நிறுவுதல் (மொத்த எண்ணிக்கைக்கும்)	01	319,900.00

2. நிறுவனங்களுக்கு இதனையொத்த அளவிலான பிரதான துணைப்பாகங்கள் சகிதம் Studio Console ஐ வழங்குதல், விநியோகித்தல் மற்றும் நிறுவுதலின் குறைந்தபட்சம் 5 வருட கால அனுபவத்தைக் கொண்ட கேள்விதாரர்கள் விலைகளைச் சமர்ப்பிக்கலாம்.
3. கேள்வி கோரல் தேசிய திறந்த போட்டி ரீதியிலான கேள்வி கோரல் மேற்கொள்ளப்படும்.
4. சகல விலைமனுக்களுடனும் மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைக்கு விலைமனு ஆவணத்தின் தரப்பட்டுள்ள வடிவத்திலான வங்கி உத்தரவாதமொன்று விலைக்கோரல் பிணை முறியாக இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். வங்கி உத்தரவாதமானது இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையில் செயற்படும் வங்கியொன்றினால் உறுதிப்படுத்தப்பட்டதாகவிருத்தல் வேண்டும். இந்த விலைக்கோரல் பிணை முறியானது நிபந்தனையற்ற கோரிக்கை பிணை முறியாகவும் 2022-08-02ஆம் திகதி வரையில் செல்லுபடியாகும் தன்மையில் இருத்தல் வேண்டும். (விலைக்கோரல் முடிவுறுத்தப்படும் நாள் முதல் 118 நாட்கள் வரையில்)
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை நுகேகொட, ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம், OTS அலுவலகம், AHEAD செயற்பாடுகள், பிரதிப் பணிப்பாளர்/ பெறுகைகள் அவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி இல. 011-2801639)
6. ஆங்கில மொழியில் அச்சடிக்கப்பட்ட விலைமனுக் கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை நுகேகொட, கங்கொடவில, ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம், துணை வேந்தர் விடுதி, (பட்டக் கல்வி பீடத்திற்கு அருகில்), OTS அலுவலகம், 2ஆம் தளம், AHEAD செயற்பாடுகள், (OTS) பெறுகைகள் - பிரதிப் பணிப்பாளருக்கு சமர்ப்பிப்பதன் பேரில் 2022-03-15ஆம் திகதி முதல் 2022-04-05ஆம் திகதி வரை மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரையான காலத்தில் மீளளிக்கப்படாத 3,500.00 ரூபா கட்டணத்தை பல்கலைக்கழகத்தின் சிறாப்பருக்குச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டைச் சமர்ப்பிப்பதன் பேரில் பெற்றுக்கொள்ளலாம்.
ஒப்பந்த அடிப்படையில் பின்வரும் பதவிகளுக்காக பொருத்தமான தகுதியுடைய இலங்கை பிரசைகளிடம் இருந்து இத்தால் விண்ணப்பங்கள் கோரப்படுவதோடு, கீழ் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைப்பதற்கு 2022.03.28 அன்று அல்லது அதற்கு முன்னர் இரு உறவினர் அல்லாத நடுவர்கள் மற்றும் கல்வி, தொழில் தகைமை அனுபவத்தின் சான்றிதழ்களை உள்ளடக்கியதாக தமது சுயவிபரக் கோவையைக் கொண்டதாக தமது விண்ணப்பங்களை பதிவுத் தபாலில் அனுப்புவதற்கு விண்ணப்பதாரர்கள் கோரப்படுகின்றனர். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிடவும். இது தவிர, முன் நகல் ஒன்றாக அதே விண்ணப்பத்தை மின்னஞ்சலின் தலைப்பில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிட்டு hr.mwsip@gmail.com என்ற முகவரிக்கு பிரதி வைப்பதுடன் pdadbproject@gmail.com என்ற முகவரிக்கு அனுப்பவும்.

திட்டப் பணிப்பாளர்,
மகாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டுத் திட்டம்,
இல. 493-1/1, டீ.பி. ஜாயா மாவத்தை,
கொழும்பு-10.

உயர் தகைமைகள் மற்றும் அனுபவத்தின் அடிப்படையில் தேர்வு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள், நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவதோடு தகுதி அடிப்படையில் தேர்வு இடம்பெறும். எனவே, ஆட்சேர்ப்பு நடைமுறைக்காக பிரதிநிதித்துவத்தை ஏற்படுத்துவது அல்லது எந்த ஒரு செல்வாக்கு செலுத்தலும் விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதற்கு காரணமாகலாம். அடிப்படை தகைமைகளை நிரூபிப்பதற்கு சான்றிதழ்களின் பிரதிகளை விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும் என்பதோடு முழுமை பெறாத அனைத்து விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும். அரச சேவைகள்/ சட்டரீதியான சபைகள்/ கூட்டுத்தாபனங்கள் மற்றும் ஏனைய அரச நிறுவனங்களைச் சேர்ந்த அபேட்சகர்களின் விண்ணப்பங்கள், தேர்வு செய்யப்பட்டால் முழு நேர அடிப்படையில் விண்ணப்பதாரர்களை விடுவிப்பதை குறிப்பிட்டு முறையே தமது நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் அனுப்பப்படல் வேண்டும்.

பதவி மற்றும் தொழில் விபரம்	தகைமை மற்றும் அனுபவம்
02. சமூக மற்றும் வர்த்தக மேம்பாட்டு அதிகாரி (PS-05) **தொழில் விபரம்** • திட்டத்தின் வாழ்வாதார மேம்பாட்டுத் திட்டத்தை செயற்படுத்துவதற்கு திட்டத்தின் சமூக பாதுகாப்பு கூறினை உறுதிப்படுத்துவதற்காக ADB மற்றும் இலங்கை அரசாங்கத்தின் (GOSL) வழிகாட்டல்களின்படி செயற்படல் வேண்டும். • மீள் குடியேற்றத்திற்கு பின் வருவாய் மூலங்கள் மற்றும் அவர்களின் வாழ்வாதாரத்தை மீளமைக்க திட்டத்தால் பாதிக்கப்பட்ட நபர்களின் (PAP) தொடர்ச்சியான வசதிகளை மேம்படுத்தல். • சிறந்த வாழ்க்கைத் தரங்களுக்காக வருவாய் ஈட்டும் செயற்பாடுகள், அவர்களின் தொழில் வாய்ப்புகள் மற்றும் அரசாங்கம் மற்றும் ஏனைய அமைப்புடன் உறவினை ஏற்படுத்தி PAP இன் திறன்களை மேம்படுத்தல். • நிதி மற்றும் சமூக ஒழுங்குகளை மேம்படுத்தல் மற்றும் PAP, சமூக அமைப்புகள் மற்றும் தொடர்புடைய வர்த்தக அமைப்புகளுடன் சிறந்த உறவை பேணுதல். • வாழ்வாதார செயற்பாடுகள் தொடர்பான அறிக்கைகளை தயாரித்தல்.	2019/01 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்கள (MSD) சுற்றுநிருபத்திற்கு அமைய தகைமைகள் இருத்தல் வேண்டும். 1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மூலம் அங்கீகரிக்கப்பட்ட தொடர்புடைய துறையில் இளமாணிப் பட்டத்தை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல். **அல்லது** தொடர்புடைய துறையில் பட்டப்படிப்புக்கு இணையான தகைமை ஒன்றுக்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மூலம் அங்கீகரிக்கப்பட்ட ஒரு தகைமை **அல்லது** தொடர்புடைய துறையில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் இருந்து பெறப்பட்ட இணை அங்கத்துவம்/ அதனை ஒத்த ஒரு தொழில்முறை தகைமை **அல்லது** தொடர்புடைய துறைக்கு தொடர்புபட்ட பதவி ஒன்றுக்காக முன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு மூலம் அங்கீகரிக்கப்பட்ட தொழில் பயிற்சி நிறுவனம் ஒன்றினால் வழங்கப்பட்ட தேசிய தொழில் தகைமை அளவு 7க்கு குறையாத தேர்ச்சி சான்றிதழ் ஒன்றை பெற்றிருத்தல் **மற்றும்** தேவையான நிபுணத்துவ பரப்பில் குறைந்தது 06 ஆண்டுகள் அனுபவம். 2. தொடர்புடைய துறைக்கு தொடர்புபட்ட பதவி ஒன்றுக்காக முன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு மூலம் அங்கீகரிக்கப்பட்ட தொழில் பயிற்சி நிறுவனம் ஒன்றினால் வழங்கப்பட்ட தேசிய தொழில் தகைமை அளவு 6க்கு குறையாத தேர்ச்சி சான்றிதழ் ஒன்றை பெற்றிருத்தல் **மற்றும்** தேவையான நிபுணத்துவ பரப்பில் குறைந்தது 11 ஆண்டுகள் அனுபவம். 3. தொடர்புடைய துறைக்கு தொடர்புபட்ட பதவி ஒன்றுக்காக முன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு மூலம் அங்கீகரிக்கப்பட்ட தொழில் பயிற்சி நிறுவனம் ஒன்றினால் வழங்கப்பட்ட தேசிய தொழில் தகைமை அளவு 5க்கு குறையாத தேர்ச்சி சான்றிதழ் ஒன்றை பெற்றிருத்தல் **மற்றும்** தேவையான நிபுணத்துவ பரப்பில் குறைந்தது 16 ஆண்டுகள் அனுபவம். **சம்பள அளவு:** PS – 5 - ரூபா 105,000 - ரூபா 113,000.00
2. தொழில்நுட்ப அதிகாரி பராமரிப்பு (PS 06 – பிரிவு B) **தொழில் விபரம்** • TEC இன் அங்கத்தவராக செயற்படுதல் மற்றும் கட்டிடங்கள் மற்றும் வாகனங்களின் அனைத்து பராமரிப்பு பணிகளுக்கும் தொடர்புடைய ஆவணங்களை தயாரித்தல் மற்றும் கையாளுதல் • வாகனங்கள், உபகரணங்கள் மற்றும் கட்டிடங்களின் சோதனை மற்றும் பராமரிப்பு • தேவைப்படும்போது PMU வின் அனைத்து சிவில் பொறியியல் அல்லாத விடயங்கள் மற்றும் பிரச்சினைகளில் கவனம் செலுத்தல் • PMU மற்றும் PIU வின் அனைத்து வாகனங்களையும் பயன்படுத்தும் நிலையில் பராமரித்தல் • குறிப்பிட்டு மேல் குறிப்பிடப்பட்ட வேலைக்கு தொடர்புபட்ட விடயங்கள் உட்பட கூறுவிலை ஆவணங்களுக்கான கோரிக்கைகளை தயாரித்தல் • போக்குவரத்து பிரிவுடன் தொடர்புபட்ட அனைத்து விடயங்களிலும் பங்கேற்றல்	2019/01 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்கள (MSD) சுற்றுநிருபத்திற்கு அமைய தகைமைகள் இருத்தல் வேண்டும். 1. தொழில்நுட்ப துறையுடன் தொடர்புடைய பதவி ஒன்றுக்காக முன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு மூலம் அங்கீகரிக்கப்பட்ட தொழில் பயிற்சி நிறுவனம் ஒன்றினால் வழங்கப்பட்ட தேசிய தொழில் தகைமை அளவு 7க்கு குறையாத தேர்ச்சி சான்றிதழ் ஒன்றை பெற்றிருத்தல் **மற்றும்** தேவையான நிபுணத்துவ பரப்பில் குறைந்தது 03 ஆண்டுகள் அனுபவம். 2. தொழில்நுட்ப துறையுடன் தொடர்புடைய பதவி ஒன்றுக்காக முன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு மூலம் அங்கீகரிக்கப்பட்ட தொழில் பயிற்சி நிறுவனம் ஒன்றினால் வழங்கப்பட்ட தேசிய தொழில் தகைமை அளவு 6க்கு குறையாத தேர்ச்சி சான்றிதழ் ஒன்றை பெற்றிருத்தல் **மற்றும்** தேவையான நிபுணத்துவ பரப்பில் குறைந்தது 07 ஆண்டுகள் அனுபவம். 3. தொழில்நுட்ப துறையுடன் தொடர்புடைய பதவி ஒன்றுக்காக முன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு மூலம் அங்கீகரிக்கப்பட்ட தொழில் பயிற்சி நிறுவனம் ஒன்றினால் வழங்கப்பட்ட தேசிய தொழில் தகைமை அளவு 5க்கு குறையாத தேர்ச்சி சான்றிதழ் ஒன்றை பெற்றிருத்தல் **மற்றும்** தேவையான நிபுணத்துவ பரப்பில் குறைந்தது 12 ஆண்டுகள் அனுபவம். **(சம்பள அளவு:** PS 06 – பிரிவு B - ரூபா 56,000.00 - ரூபா 58,000.00)

*01/2019 ஆம் இலக்க MSD சுற்றுநிருபத்திற்கு அமைய மேல் கூறப்பட்ட சம்பளத்திற்கு மேலதிகமாக வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு வழங்கப்படும்.

பொது நிபந்தனைகள்

1. விண்ணப்பதாரர்கள் 64 வயதுக்குக் குறைவாக இருத்தல் வேண்டும்.
2. அனைத்து உத்தியோகத்தர்களும் தொடர்புடைய அரச நிறுவனங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களுடன் பிணைப்பு மற்றும் ஒருங்கிணைப்பு செயற்பாடுகளுடன் தமது பணிகளை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.
3. இலங்கையில் மேற்கொள்ளப்படும் வெளிநாட்டு நிதியிலான திட்டங்களில் உள்ள பணி அனுபவம் மேலதிக அனுகூலமாக அமையும்.
4. இந்த பதவிகளுக்கான முன் நிபந்தனைகளாக ஆங்கிலத்தில் தேர்ச்சி, அரசாங்க ஒழுங்குமுறைகளில் பரீட்சயம் மற்றும் கணினி அறிவு அவசியமாகும்.
5. செயற்றிட்டங்களின் தேவை மற்றும் செயல்திறன் அடிப்படையில் ஆண்டுதோறும் புதுப்பிக்கும் வகையில் ஓர் ஆண்டு ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்படும்.
6. 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபத்தின்படி கொடுப்பனவுகளுடன் அரசாங்கம் அங்கீகரித்த சம்பளம் வழங்கப்படும் என்பதோடு அதன் பின் எந்த மாற்றங்களும் மேற்கொள்ளப்படும். (http://www.treasury.gov.lk)

செயலாளர்
நீர்ப்பாசன அமைச்சு

Best way to fulfil your Future Dreams
E-mail your advertisements to, classified@lakehouse.lk
Piyumi- 0112 429 383 Ramani - 0112 429 347 | Gayani - 0112 429 343 / 342
SUNDAY OBSERVER Marriage Proposals Decades of Trusted Service

கேள்விக்கான அழைப்பு

மேல் மாகாண கல்வித் திணைக்களம்

மேல் மாகாண கல்வித் திணைக்களம் சார்பாக அதன் பெறுகைக் குழுவின் தலைவரால் கீழ்க்காணும் நிர்மாண வேலைகளுக்காக தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் இப்போது அழைக்கப்படுகின்றன.

பாடசாலையின் பெயர் மற்றும் வேலை விபரம்	கேள்விப் பிணைத் தொகை (ரூபா) மீளளிக்கப்படும்	கேள்விகளை சமர்ப்பிப்பதற்கான குறைந்த பட்ச தகைமை (உறுதி செய்வதற்காக தேவையான ஆவணங்களை கட்டாயமாக சமர்ப்பித்தல் வேண்டும்)	மாதிரிப் பத்திரக் கட்டணம் (மீளளிக்கப்படாதது)	முழுச் செலவு மதிப்பீடு ரூபா	கேள்வி சமர்ப்பிக்கும் குறைந்த பட்ச பதிவு	ஒப்பந்தக் கால நாட்கள்
01	02	03	04	05	06	07
01. பண்டாரகம மத்திய மகா வித்தியாலய ஆரம்பப் பிரிவு 90x25 கட்டிடம் உட்பட மேலும் கட்டிடங்களை பழுது பார்த்தல்	காசாக ரூ. 50,000/- அல்லது கேள்வி திறக்கப்பட்ட தினம் முதல் 105 நாட்களுக்கு செல்லுபடியாகும் ரூ. 100,000/- வங்கிப் பிணை அல்லது காப்புறுதி பிணை முறி	01. துறையில் 3 வருட குறைந்தபட்ச அனுபவம் 02. கடந்த 5 வருடத்திற்குள் நிர்மாண வேலை பற்றிய சாதாரண நிதி ஆகு செலவு குறைந்த பட்சம் 11.5 மில்லியனுக்கு குறையாது இருத்தல் வேண்டும். 03. திரவச் சொத்துக்கள் மற்றும் அல்லது கடன் பெற்றுக்கொள்ளும் குறைந்தபட்ச பெறுமதி ரூ. 4.2 மில்லியன்	3000/-	8,486,240.80	C6 மற்றும் C7	180
02. மத்துகம ஆனந்த சாஸ்திராலயம் 6ம் ஆண்டு வகுப்பறைக் கட்டிடத்தை பழுதுபார்த்தல்	காசாக ரூ. 25,000/-	01. துறையில் 3 வருட குறைந்தபட்ச அனுபவம்	2000/-	4,427,963.40	C7 மற்றும் C8	105
03. சென் ஜோன் தேசிய பாடசாலை பாணந்துறை அதிபர் உத்தியோகபூர்வ இல்லம் பழுதுபார்த்தல்	காசாச ரூ. 25,000/-	01. துறையில் 3 வருட குறைந்தபட்ச அனுபவம் 02. கடந்த 5 ஆண்டுகளில் நிர்மாண வேலை பற்றிய சாதாரண நிதி செலவு குறைந்த பட்சம் 9 மில்லியன் இற்கு குறைவாக இருத்தல். 03. திரவச் சொத்துக்கள் மற்றும் அல்லது கடன் பெற்றுக்கொள்ளும் குறைந்தபட்ச பெறுமதி ரூ. 3.45மில்லியன்	1000/-	2,879,286.55	C7 மற்றும் C8	75
04. அளுத்கம் வீதி முஸ்லிம் பாலிகா மகா வித்தியாலயம் 68x20 உயர் தர விஞ்ஞான கூட கட்டிடம் பழுதுபார்த்தல் (மிகுதி வேலைகள்)	காசாக ரூ. 10,000/-	01. துறையில் 3 வருட குறைந்தபட்ச அனுபவம்	1000/-	2,205,222.00	C8	60
05. அளுத்கம் வீதி முஸ்லிம் பாலிகா மகா வித்தியாலயம் 60x20 ஆரம்பப் பிரிவு வகுப்பறைக் கட்டிடம் பழுதுபார்த்தல்	காசாக ரூ. 25,000/-	01. துறையில் 3 வருட குறைந்தபட்ச அனுபவம்	2000/-	3,006,767.00	C8	75
06. கம்/ கம்பஹ பண்டார நாயக்க மத்திய மகா வித்தியாலயம், உணவகம் அருகில் பக்கச் சுவர் நிர்மாணம்	காசாக ரூ. 50,000/- அல்லது கேள்வி திறக்கப்பட்ட தினம் முதல் 105 நாட்களுக்கு செல்லுபடியாகும் ரூ. 100,000/- வங்கிப் பிணை அல்லது காப்புறுதி பிணை முறி	01. துறையில் 3 வருட குறைந்தபட்ச அனுபவம்	3000/-	4,631,240.00	C7	120
07. கோதமி பாலிகா கல்லூரி விளையாட்டு மைதானத்தை மேம்படுத்தல்	கேள்வி திறக்கப்பட்ட தினம் முதல் 105 நாட்களுக்கு செல்லுபடியாகும் ரூ. 250,000/- கேள்விப் பிணை	01. துறையில் 3 வருட குறைந்தபட்ச அனுபவம் 02. கடந்த 5 வருடங்களில் குறைந்த பட்சம் ரூ. 15 மில்லியன் இதற்குச் சமமான திட்டத்தை நிறைவேற்றியிருத்தல் 03. கடந்த 5 வருடத்திற்குள் நிர்மாண வேலை பற்றிய சாதாரண நிதி செலவு குறைந்தபட்சம் 38 மில்லியனாவது இருத்தல். 04. திரவச் சொத்துக்கள் மற்றும்/ அல்லது கடன் பெற்றுக்கொள்ளும் குறைந்த பட்ச பெறுமதி ரூ. 9 மில்.	4000/-	19,752,917.80	C6 மற்றும் C5	210
08. மேமா/ பிலி/ பிரின்சஸ் வேல்ஸ் கல்லூரி 113x31.5 அளவாகட வடிவமுள்ள கட்டிடத்தை பழுதுபார்த்தல்	காசாக ரூ. 25,000/-	01. துறையில் 3 வருட குறைந்தபட்ச அனுபவம்	2000/-	3,629,540.50	C7 மற்றும் C8	105
09. ஸ்ரீ சுபுதி தேசிய பாடசாலை நீர் வழங்கல் அமைப்பை மேம்படுத்துதல்	காசாக ரூ. 10,000/-	01. துறையில் 3 வருட குறைந்தபட்ச அனுபவம் மற்றும் பூர்த்தி செய்யப்பட்ட அதற்குச் சமமான செயற்றிட்ட பிரதான ஒப்பந்தக் காரராக செயற்பட்டிருத்தல்	1000/-	1,046,406.85	C8 மற்றும் C9	56
10. கொ/ ராமநாதன் இந்து மகளிர் கல்லூரி மின் அமைப்பு உற்பட பழுதுபார்த்தல் வேலைகள்	காசாக ரூ. 25,000/-	01. துறையில் 3 வருட குறைந்தபட்ச அனுபவம் மற்றும் பூர்த்தி செய்யப்பட்ட அதற்கு சமமான செயற்றிட்டத்தில் பிரதான ஒப்பந்தக்காரராக செயற்பட்டிருத்தல் 03. திரவச் சொத்துக்கள் மற்றும்/ அல்லது கடன் பெற்றுக்கொள்ளும் குறைந்த பட்ச பெறுமதி ரூ. 5 மில்.	3000/-	4,402,694.50	C7 மற்றும் C8	70
11. ஹொ/ ரோயல் கல்லூரி, மலசலகூடம் நிர்மாணித்தல்	காசாக ரூ. 10,000/-	01. துறையில் 3 வருட குறைந்தபட்ச அனுபவம்	1000/-	2,067,666.85	C8	60
12. தக்சிலா மத்திய மகா வித்தியாலயம் ஹொரன மகளிர் விடுதியை பழுதுபார்த்தல்	காசாக ரூ. 50,000/- அல்லது கேள்வி திறக்கப்படும் தினம் முதல் 105 நாட்களுக்கான செல்லுபடியாகும் ரூ. 100,000/- வங்கிப் பிணை அல்லது காப்புறுதி பிணை முறி	01. துறையில் 3 வருட குறைந்தபட்ச அனுபவம் மற்றும் பூர்த்தி செய்யப்பட்ட அதற்குச் சமமான செயற்றிட்டமொன்றில் பிரதான ஒப்பந்தக்காரராக செயற்பட்டிருத்தல் 02. கடந்த 5 வருடத்திற்குள் நிர்மாண வேலை பற்றிய சாதாரண நிதி செலவுகள் குறைந்தபட்சம் 9 மில்லியனுக்கு குறையாது இருத்தல் 03. திரவச் சொத்துக்கள் மற்றும்/ அல்லது கடன் பெற்றுக்கொள்ளும் குறைந்தபட்ச பெறுமதி ரூ. 3.2 மில்.	1000/-	4,358,478.50	C7 மற்றும் C8	120
13. கொ/ ஆனந்த பாலிகா கல்லூரி விடுதியின் ஓர் பகுதியை பழுதுபார்த்தல்	காசாக ரூ. 50,000/- அல்லது கேள்வி திறக்கப்படும் தினம் முதல் 105 நாட்களுக்கு செல்லுபடியாகும் ரூ. 100,000/- வங்கிப் பிணை அல்லது காப்புறுதி பிணை முறி	01. துறையில் 3 வருட குறைந்தபட்ச அனுபவம் மற்றும் பூர்த்தி செய்யப்பட்ட அதற்குச் சமமான செயற்றிட்டமொன்றில் பிரதான ஒப்பந்தக்காரராக செயற்பட்டிருத்தல் 02. கடந்த 5 வருடங்களில் நிர்மாண வேலை பற்றிய சாதாரண நிதி செலவு குறைந்தபட்சம் 9.5 மில்லியனுக்கு குறைவாக இருத்தல் வேண்டும். 03. திரவச் சொத்துக்கள் மற்றும்/ அல்லது கடன் பெற்றுக்கொள்ளும் குறைந்தபட்ச பெறுமதி ரூ. 3.4மில்.	3000/-	4,593,930.38	C7 மற்றும் C8	120
14. ஸ்ரீ ஜயவர்தனபுர மகா வித்தியாலயம் மனையியல் கூடத்தை பழுதுபார்த்தல்	காசாக ரூ. 25,000/-	01. துறையில் 3 வருட குறைந்தபட்ச அனுபவம்	2000/-	3,765,184.80	C7 மற்றும் C8	105
15. பிலி/ பிலியந்தல மத்திய கல்லூரி உடைந்துள்ள மதிலை மீண்டும் அமைத்தல்	காசாக ரூ. 25,000/-	01. துறையில் 3 வருட குறைந்தபட்ச அனுபவம்	2000/-	2,567,916.00	C7 மற்றும் C8	105
16. கோத்தமி மகளிர் கல்லூரி 100x20 கட்டிடத்தின் கூரையைப் பழுதுபார்த்தல்	காசாக ரூ. 25,000/-	01. துறையில் 3 வருட குறைந்தபட்ச அனுபவம் மற்றும் பூர்த்தி செய்யப்பட்ட அதற்குச் சமமான செயற்றிட்டத்தில் பிரதான ஒப்பந்தக்காரராக செயற்பட்டு இருத்தல் 02. திரவச் சொத்துக்கள் மற்றும்/ அல்லது கடன் பெற்றுக்கொள்ளும் குறைந்தபட்ச பெறுமதி ரூ. 4.4 மில்.	2000/-	4,497,678.60	C7 மற்றும் C8	120
17. ஜய/ ஸ்ரீ சுபுதி தேசிய பாடசாலை அழகியற்கலை கட்டிடத்தின் பாதுகாப்பை உறுதி செய்தல், மதில மற்றும் பக்கச்சுவர்	காசாக ரூ. 12,500/- அல்லது கேள்வி திறக்கப்படும் தினம் முதல் 105 நாட்கள் செல்லுபடியாகும் ரூ. 25,000/- வங்கிப் பிணை அல்லது காப்புறுதி பிணை முறி	01. துறையில் 3 வருட குறைந்தபட்ச அனுபவம் மற்றும் பூர்த்தி செய்யப்பட்ட அதற்குச் சமமான செயற்றிட்டத்தில் பிரதான ஒப்பந்தக்காரராக செயற்பட்டிருத்தல் 02. திரவச் சொத்து மற்றும்/ அல்லது கடன் பெற்றுக்கொள்ளும் குறைந்தபட்ச பெறுமதி ரூ. 1.9 மில்.	1000/-	2,306,619.80	C7 மற்றும் C8	105
18. ஸ்ரீபாளி கல்லூரி ஹொரண பக்கச் சுவர், எல்லை மதில் உட்பட விளையாட்டரங்கின் மிகுதி வேலை	கேள்வி திறக்கப்படும் தினம் முதல் 105 நாட்களுக்குள் செல்லுபடியாகும் ரூ. 200,000/- வங்கிப் பிணை முறி அல்லது காப்புறுதி பிணை முறி	01. 5 வருடத்திற்குள் இதற்குச் சமமான 02 செயற்றிட்டங்களை நிறைவேற்றி இருத்தல் குறைந்தபட்ச ஒப்பந்த செலவு 5.5 மில்லியன் 02. கடந்த 5 வருடதிற்குள் குறைந்த பட்ச செலவின் அளவு குறைந்தபட்சம் 5 மில்லியன் 03. துறையில் 3 வருட குறைந்தபட்ச அனுபவம்	4000/-	9,254,336.00	C6	210
19. ஹொரண ஸ்ரீபாளி கல்லூரி கேட்போர் கூடத்தின் அவரச பழுது பார்த்தல் வேலைகள்	காசாக ரூ. 10,000/-	01. துறையில் 3 வருட குறைந்தபட்ச அனுபவம்	1000/-	1,831,974.40	C8	60
20. மஹாநாம கல்லூரி, கொழும்பு டிரான்ஸ் போர்மர் மற்றும் டிரான்ஸ் போர்மர் அறையை நிர்மாணித்தல்	காசாக ரூ. 10,000/-	01. துறையில் 3 வருட குறைந்தபட்ச அனுபவம்	1000/-	1,810,657.25	C8 மற்றும் C9	60

1. கேள்வி கோரல் மேல் மாகாண பிரதேச கேள்விதாரர்களுக்கு இடையில் தேசிய போட்டி கேள்விகோரல் முறைமையின் அடிப்படையில் இடம்பெறும்.
2. மேற்படி அட்டவணையின் இல. 03 இன் கீழ் ஒவ்வொரு செயற்றிட்டத்திற்காக விண்ணப்பித்துள்ள குறைந்தபட்ச தகைமைகளை உறுதி செய்வதற்கான ஆவணங்கள், வியாபார பதிவுச் சான்றிதழ், வெட் வரி சான்றிதழ், நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் (CIDA) செல்லுபடியாகும் பதிவுடனான சான்றிதழ் போன்றவற்றின் உறுதி செய்யப்பட்ட பிரதிகளை இணைத்திருத்தல் கட்டாயமாவதுடன் பின்னர் கோரல்கள் இடம்பெற மாட்டாது என்பதை கவனிக்கவும்.
3. ரூ. 5 மில்லியனுக்கு மேற்பட்ட ஒப்பந்தங்களுக்காக 1987 இல. 03 பொது ஒப்பந்த சட்டத்தின் கீழ் கேள்விதாரராக பதிவு செய்யும் சான்றிதழ் கேள்வி ஆவணத்துடன் கட்டாயமாக சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
4. C5 தரம் வரையான செயற்றிட்டங்களுக்கு ஒப்பந்தங்கள் வழங்கும் தன்மை பெறுவதற்கு, குறித்த கேள்விதாரர்கள் மேல் மாகாணத்தில், நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் (CIDA) தற்போது செல்லுபடியாகும் பதிவுடன் கூடியவர்களாக இருத்தல் வேண்டும்.
5. ஆர்வம் காட்டுகின்ற தகைமையுடனான கேள்விதாரர்களுக்கு தொ.பே.இல. 0112875727 மூலம் மேல் மாகாண கல்வித் திணைக்களத்தின் பிரதம கணக்காளர்/ பெறுகை அதிகாரியிடம் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடிவதுடன், அவ் அலுவலகத்தில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை அலுவலக நேரங்களில் கேள்வி கோரல் ஆவணங்களை பரீட்சித்துப் பார்க்கலாம்.
6. ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களுக்கு மேல் மாகாண கல்விப் பணிப்பாளருக்கு எழுத்துமூல விண்ணப்பத்தை சமர்ப்பித்த பின்பு, குறித்த கட்டணங்களை மேல் மாகாண கல்வித் திணைக்களத்தின் காசாளரிடம் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச் சீட்டை பெறுகைப் பிரிவிற்கு சமர்ப்பித்து கேள்வி ஆவணங்களை 2022 மார்ச் 16 முதல் 2022 ஏப்ரல் 05 பி.ப. 3.00 வரை பெற்றுக்கொள்ளலாம்.
7. பூர்த்தி செய்யப்பட்ட ளேவி ஆவணங்கள் 2022 ஏப்ரல் 06 மு.ப. 10.00 இற்கு முன், இல. 89, 'ரன்மகபாய', கடுவலை வீதி, பத்தரமுல்லவில் அமைந்துள்ள மேல் மாகாண கல்வித் திணைக்களத்தின் பிரதம கணக்காளரின் அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடன், தனிப்பட்ட முறையில் வருகைதந்து சமுகமளிக்கும் கேள்விதாரர்கள் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் கேள்விகள் திறக்கப்படும். சகல கேள்வியுடனும் கேள்விப் பிணை சார்பாக செலுத்தப்படும் மீளளிக்கப்படும் வைப்புத் தொகைக்காக விநியோகிக்கப்படும் பற்றுச்சீட்டின் மூலப் பிரதி / வங்கிப் பிணை முறியின் அல்லது காப்புறுதிபிணை முறி ஒன்றை இணைத்தல் கட்டாயமாகும்.

பீ. ஸ்ரீலால் நோனிஸ்
தலைவர், பெறுகைக் குழு,
மேல் மாகாண கல்வித் திணைக்களம்,
இல. 89, 'ரன்மகபாய'
கடுவலை வீதி,
பத்தரமுல்ல.
2022 மார்ச் 10ம் திகதி

அற்றோணித் தத்துவத்தை இரத்து செய்தல்

இதனை சமர்ப்பிப்பதன் மூலம் அனைவருக்கும் அறியத்தருவதாவது அவிசாவளை பகிரங்க நொத்தாரிசு **விஜயசிங்க ஆரச்சிகே ஜயவர்தன** மூலம் எழுதி உறுதி செய்யப்பட்டு நுகேகொடை பழைய கெஸ்பேவ வீதி இல. 34பி இல் வசிக்கும் **கலபத்திகே மியூலசீ அசோக்க டீ சில்வா** என்ற நபருக்கு நுகேகொடை இல. 11-2சி பெலவத்த வீதியில் வசிக்கும் **ரன்பட்டபந்திகே இரோஷா வீரவர்ன நிலவீர** ஆகிய என்னால் வழங்கப்பட்ட இல. 2859 எனும் இலக்கத்தையும் 2012.06.10 எனும் திகதியையும் கொண்ட அற்றோணித் தத்துவம் இத்தால் இரத்துச் செய்யப்பட்டு அகற்றப்படுகிறது. என்றும் மேற்குறிப்பிட்ட அற்றோணித் தத்துவத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற அல்லது நிறைவேற்றப்படுகின்ற அனைத்து அல்லது எந்த ஒரு செயற்பாடும் வெற்றும் வெறிதுமானதும் என்று கருதப்படவேண்டும் என்றும் இலங்கை சனநாயக சோஷலிச குடியரசுக்கும் பொதுமக்களுக்கும் நான் மேலும் அறியத்தருகின்றேன்.

நிலவீர

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

தற்போதுள்ள கொங்கிறீட் நடைபாதையை வெட்டுதல் மற்றும் இடித்தல், அகழ்வு, குறைபாடு/ கசிவை கண்டறிதல், குழாய் பழுதுபார்த்தல், குழாய் இடுதல், சோதனை, மீள்நிரப்பல் மற்றும் கொங்கிறீட் இடுதல் உட்பட கட்டுநாயக்க BIA வின் வாகனக் காப்புத்தளம் ஒன்றின் HP 07 தொடக்கம் HP 09 வரை எரிபொருள் நீர்முனை (HYDRANT) குழாய்வழியை சீரமைத்தல்

நீடிப்பு அறிவித்தல்

B/18/2022

மேலுள்ள தலைப்பின் கீழ் செய்திப் பத்திரிகைகள் மற்றும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன (CPC) இணையதளத்தில் வெளியிடப்பட்ட விளம்பரம் தொடர்பில் விலைமனு ஆவணங்களை ஏற்கனவே பெற்ற எதிர்பார்ப்புடைய விலைமனுதாரர்களின் அவதானத்திற்கு CPC இத்தால் அழைப்பு விடுக்கிறது. முந்தைய விளம்பரத்தில் பின்வரும் திருத்தம் தொடர்பில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் சார்பில் திணைக்கள பெறுகைக் குழு, தலைவரினால் இந்த அறிவித்தல் விடுக்கப்படுகிறது.
2022.03.14 ஆம் திகதி 14.00 மணிக்கு (இலங்கை நேரம்) தீர்மானிக்கப்பட்டிருந்த விலைமனு சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதி 2022.03.21ஆம் திகதி 14.00 மணி வரை (இலங்கை நேரம்) தற்போது நீடிக்கப்பட்டுள்ளது.
விலைமனு ஆவணத்தில் உள்ள ஏனைய அனைத்து நிபந்தனைகளும் மாற்றமின்றி தொடரும்.

தலைவர்,
திணைக்கள பெறுகைக் குழு,
C/O முகாமையாளர் (பெறுகை மற்றும் களஞ்சியங்கள்),
பெறுகை மற்றும் களஞ்சிய செயற்பாடு,
1ஆவது மாடி, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,
இல. 609, டொக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை,
கொழும்பு 09.
தொலைபேசி: 0094 11 5455331
தொலைநகல்: 0094 11 5455424

சிறாமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை மற்றும் கட்டிடப் பொருட்கள் கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை

பொருட்களின் பகிரங்க ஏல விற்பனை

பாவனையிலிருந்து அகற்றப்பட்ட அலுவலக மரத் தளபாடங்கள், உபகரணங்கள், இரும்பு, உருக்கு பாகங்கள், ஜீ.ஐ தகடு, அஸ்பஸ்டஸ் ஷீட், டயர் மற்றும் மேலும் பல பொருட்கள், ஏல விற்பனையில் விற்கப்படும்.

மேற்படி பொருட்களின் ஏல விற்பனை 2022.04.02 மற்றும் 03 ஆகிய இரு தினங்களில் மு.ப. 9.30 முதல் பி.ப. 3.00 வரை கம்பஹா ரன்பொக்குனுகம களஞ்சிய வளாகத்தில் நடைபெறும்.

2022.03.31 மற்றும் 2022.04.01 ஆகிய இரு தினங்களிலும் இப்பெருட்களை பரீட்சித்துப்பார்ப்பதற்கு முடியும் அத்துடன் நீங்கள் ஏல விற்பனையில் கொள்வனவு செய்யும் பொருட்களுக்காக செலுத்த வேண்டிய கொடுப்பனவுகள் அவ்வேளையிலேயே காசாக மட்டும் மேற்கொள்வதுடன் அன்றே மாலை 5.00 இற்கு முன் ஏல விற்பனை வளாகத்திலிருந்து குறித்த பொருட்களை அகற்றிக் கொள்ள வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு:

கணக்காளர் (களஞ்சிய முகாமையாளர்)	- 011 2321884
மாவட்ட முகாமையாளர் (கம்பஹா)	- 033-2228160
முகாமையாளர் (ரன்பொக்குனுகம)	- 033-2280236

தலைவர்,
தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை,
கொழும்பு -02.

காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460) 7ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல. KHDS/LND/03/ACQ/Other/16

அரசாங்கம் கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணியைக் கையகப்படுத்துவதற்கு எதிர்பார்க்கின்றது. மேலதிக விபரங்களுக்கு இலங்கை குடியரசின் வர்த்தமானப் பத்திரிகைகளான 2021 ஏப்பிரல் மாதம் 09ஆந் திகதிய இலக்கம் 2222/63 மற்றும் 2021 யூலை மாதம் 31ஆந் திகதிய இலக்கம் 2238/44 என்பவற்றின் பகுதி IIIஐப் பார்க்கவும்.

அட்டவணை

மாகாணம்	: சப்பிரகமுவ
மாவட்டம்	: இரத்தினபுரி
பிரதேச செயலகப் பிரிவு	: கஹவத்தை
கிராமம்	: வெல்லந்துர
மூல திட்டத்தின் இலக்கம்	: அ.க.பி. 12 மேலதிக இல. 30 பக்க இல. 28
காணி துண்டின் இல.	: 967 & 968
காணியின் பிரமானம்	: 0.207 ஹெக்டெயார்
காணியின் பெயர்	: மஹயாய

பீ. டி. கயனி அய். கருணாரத்ன
பிரதேச செயலாளர்,
கஹவத்தை.

2022.03.08ஆந் திகதி
கஹவத்தை பிரதேசச் செயலகத்தில்

பெறுகை அறிவித்தல்

பெருந்தோட்ட அமைச்சு

கம்பனி தோட்டங்களை மறுசீரமைத்தல், தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்கள் சார்ந்த பயிர்ச்செய்கைகள், தொழிற்சாலைகளை நவீனமயப்படுத்துதல் மற்றும் தேயிலை மற்றும் இறப்பர் ஏற்றுமதி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு

தேயிலைச் சிறு பற்றுநிலங்கள் அபிவிருத்தி அதிகாரசபை

விவசாய உபகரணங்கள் மற்றும் பொருட்கள் கொள்வனவு - 2022 ஆம் ஆண்டு

தேயிலைச் சிறு பற்றுநிலங்கள் அதிகாரசபை மூலம் தேயிலை காணிகளில் உச்ச பொருளாதார பலனை பெறுவதற்கான செயற்திட்டத்திற்கு விவசாய உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய கீழ் குறிப்பிடப்பட்ட விவசாய உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு அந்த விவசாய உபகரணங்களை வழங்குவதற்கு ஆர்வம் காட்டும் தரப்புகளிடம் இருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

1. குழி தோண்டும் இயந்திரம் -160
2. வெட்டும் இயந்திரம் -160
3. திரவம் தெளிக்கும் இயந்திரம் -400
4. தலைக்கவசம் -800
5. போர்வை -800
6. பூட் காலணி -800
7. கையுறை -800
8. கண் கவசம் -800
9. மண் கொட்டும் இயந்திரம் (பொறிமுறை) -01
   (நாளொன்றுக்கு 10000 கொள்கலன்களுக்கு தேவையான மண் கொட்டும் இயந்திர கொள்ளளவை கொண்டிருத்தல் வேண்டும்.)
10. கை டிரக்டர் (Land Master) -01
11. நீர் சேமிக்கும் பிளாஸ்டிக் தொட்டி (5000 L) -05
12. திரவம் தெளிக்கும் இயந்திம் (16 L) -10
13. மண்வெட்டி -20
14. அலவாங்கு -20
15. சவல் -20
16. வெட்டுக் கத்தி -20
17. தண்டுக் கிளைகளை வெட்டும் கத்தி -20
18. தண்ணீர்க் கேன் -20
19. ஹோஸ் குழாய் (50 அடி) -10
20. தள்ளு வண்டி -10
21. 9 x 2 அங்குலம் 150 கெஜம் கொஸ்டட் பொலிதீன் பை (மறைப்பு) -600,000
22. 15 x 8 அங்குலம் 300 கெஜம் கொஸ்டட் பொலிதீன் பை (கறுப்பு) -600,000
23. நிழல் வலைகள் -6,000 சதுர மீற்றர்
24. நீர் மோட்டார் (ஹோஸ் வலு 01”) -500
25. நீர் மோட்டார் (ஹோஸ் வலு 01” ½) -500
26. Water Sprinkler -24,000
27. கொம்போஸ்ட் உரம் -28 கி. மில்லியன்
28. தேயிலைச் செடி -14 மில்லியன்
29. கோழிக் குஞ்சு -750,000

மேல் குறிப்பிடப்பட்டுள்ள இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை வழங்குவதற்கு ஆர்வம் காட்டும் அங்கீகரிக்கப்பட்ட பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களில் இருந்து விலைமனுக்கள் கோரப்படுவதோடு, 2022.03.14 ஆம் திகதி தொடக்கம் 2022.03.28 ஆம் திகதி வரை விலைமனுக்கள் கோரப்படும். சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள் 2022.03.28 ஆம் திகதி பி.ப. 2.00க்கு முன்னர் முத்திரை பொறிக்கப்பட்ட கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் இயந்திர உபகரணங்களுக்கான விலைமனு சமர்ப்பித்தல் (விலைமனு சமர்ப்பிக்கும் உருப்படி அல்லது உருப்படி இலக்கத்தை குறிப்பிடவும்) – 2022 என்று குறிப்பிட்டு பதிவுத் தபாலில் அனுப்புவது அல்லது கீழுள்ள முகவரியில் அமைந்திருக்கும் இந்த அதிகாரசபையின் சேவை பிரிவில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டிக்கு இடுவதற்கு வேண்டும் என்பதோடு, விலைமனுக்கள் 2022.03.28 ஆம் திகதி பி.ப. 2.30 க்கு திறக்கப்படும்.

மேலுள்ள இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களுக்காக ஒவ்வொரு உருப்படிக்கும் வெவ்வேறு விலைமனுக்கள் சமர்ப்பித்தல் வேண்டும். குறித்த விபரக்குறிப்பு மற்றும் விலைமனு ஆவணத்தை இந்த அதிகாரசபையின் நிதிப் பிரிவில் மீளளிக்கப்படாத 25,000.00 ரூபாவை செலுத்தி 2022.03.14 ஆம் திகதி தொடக்கம் 2022.03.28 ஆம் திகதி பி.ப. 12.00 வரை பெற்றுக்கொள்ள முடியும்.

விலைமனுக்கள் திறக்கப்படும் சந்தர்ப்பத்தில் விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படும் நிறுவனத்தின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் ஒருவருக்கு அதற்காக பங்கேற்க முடியும். விலைமனு பிணையாக மீளளிக்கப்படும் 20,000 ரூபா தொகையை இந்த அதிகாரசபையின் நிதிப் பிரிவுக்கு செலுத்தி விலைமனுவுடன் அந்தப் பற்றுச்சீட்டின் இரண்டாம் பிரதியை இணைத்து அனுப்ப வேண்டும். மேலும் ஒப்பந்தம் வழங்கப்பட்ட பின் வெற்றிகரமான விலைமனுதாரர் இந்த அதிகாரசபையுடன் முறையான ஒப்பந்தம் ஒன்றுக்கு வருதல் வேண்டும். மேலுள்ள ஒவ்வொரு இயந்திரம் மற்றும் உபகரணங்களுக்காக வெவ்வேறாக விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படும் உருப்படி அல்லது உருப்படிகளை குறிப்பிட்டு விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கு முடியுமான வகையில் விலைமனு ஆவணங்கள் தயாரிக்கப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களை திட்ட உதவி முகாமையாளர் 076-3598695/ 011-7909039 என்ற இலக்கங்களை அழைத்து பெற்றுக்கொள்ள முடியும்.

தலைவர்
பெறுகைக்குழு
தேயிலைச் சிறு பற்றுநிலங்கள் அபிவிருத்தி அதிகாரசபை
இலக்கம் 70, பாராளுமன்ற வீதி,
பெலவத்த, பத்தரமுல்லை.

கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில்

வழக்கு இல: DST/272/21
தன்மை: சாசனம்
நடவடிக்கை முறை: சுருக்குமுறை
பெறுமதி: ரூபா 41,000.000/-

இல. 159, க்ரொசஸ் வீதி, ட்ரரல்கன், விக்டோரியா அவுஸ்திரேலியா எனும் முகவரியைச் சேர்ந்த காலஞ் சென்ற பட்டகே சுரின் சந்தன பெர்னாண்டோ எனும் பத்தகே சுரின் சந்தன பெர்னாண்டோ அவர்களின் டெஸ்டேட் தோட்டம் விடயத்தில்

இல 40/11ஏ கொழும்பு வீதி, நீர்கொழும்பு எனும் முகவரியைச் சேர்ந்த அற்றோணி தத்துவத்தை வைத்திருக்கின்ற குருகுலசூரிய கிளவுடி ப்ரிமால் லுட்டன் சார்பில் தோன்றும் இல. 159, க்ரொசஸ் வீதி, ட்ரரல்கன், விக்டோரியா அவுஸ்திரேலியா எனும் முகவரியைச் சேர்ந்த காலஞ்சென்ற குருகுலசூரிய சஞ்சீவனி ரன்மலி பெர்னாண்டோ.

மனுதாரர்

அவுஸ்திரேலியா விக்டோரியா உச்ச நீதிமன்றத்தால் 2020.04.08 அன்று வெளியிடப்பட்ட இல. 159, க்ரொசஸ் வீதி, ட்ரரல்கன், விக்டோரியா அவுஸ்திரேலியா எனும் முகவரியைச் சேர்ந்த காலஞ்சென்ற பட்டகே சுரின் சந்தன பெர்னாண்டோ எனும் பத்தகே சுரின் சந்தன பெர்னாண்டோ அவர்களின் டெஸ்டேட் தோட்டம் சார்பில் விருப்பறிவிப்பு ஆவணத்தை மீண்டும் முத்திரையிடுவதற்காக சிவில் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 554 யூ (1977ஆம் ஆண்டின் 20ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறு) இன் கீழ் விண்ணப்பம் வெளியிடப்பட்ட நாளிலிருந்து 28 நாட்கள் காலாவதியான பிறகு, கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று இதன் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

2022 மார்ச் மாதம் 10ஆம் திகதி

மனுதாரர் சார்பில் சட்டத்தரணி

விலைமனுக் கோரல்

நீர்கொழும்பு வலயக் கல்விப் பணிமனை - கட்டுநாயக்கா - (2022)

நீர்கொழும்பு கல்வி வலயப் பாடசாலைகளிற்குப் பின்வரும் உருப்படிகளைக் கொள்வனவு செய்து கொள்வதற்காக திறந்த தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரும் முறைமையின் அடிப்படையில் தகுதியுள்ள வழங்குநர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

P1 டெஸ்க் டொப் கணனிகள் லெப்டொப் கணனிகள் போட்டோ பிரதியிடும் இயந்திரங்கள் டுப்ளோ இயந்திரங்கள் ஸ்மார்ட் சட்டக அறிவித்தல் பலகைகள் அச்சு இயந்திரங்கள்

இதற்காக ஆர்வமுள்ள வழங்குநர்கள், இதற்கான மேலதிக விபரங்களை, கட்டுநாயக்காவிலுள்ள நீர்கொழும்பு வலயக் கல்விப் பணிமனையின், பிரதி வலயக்கல்விப் பணிப்பாளர் (நிருவாகம்) (தொ.பே. இல: 011-2265639) மூலம் பெற்றுக்கொள்ளலாம். மேலும், குறித்த வழங்குநர்கள் பிரதி வலயக் கல்விப் பணிப்பாளருக்கு (நிருவாகம்) விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்து, முழுமையான விலைமனுப்படிவத் தொகுதியொன்றை, 2022.03.14 முதல் 2022.04.08 வரை வார நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.30 வரை தொகுதியொன்றிற்கான மீளளிக்கப்படாத ரூபா 750.00 இற்கான கட்டணம் மற்றும் மீளளிக்கப்படும் ரூபா 5,000.00 இற்கான கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். இக்கட்டணங்களைக் காசாகச் செலுத்துதல் வேண்டும்.

குறித்த விலைமனுக்கள், 2022.04.11 அன்று மு.ப. 10.00 இற்கு அல்லது அதற்கு முன்னர், “பிரதி வலயக் கல்வி பணிப்பாளர் (நிருவாகம்) நீர்கொழும்பு வலயக் கல்விப்பணி மனை கட்டுநாயக்கா” என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அல்லது நேரடியாக உரித்தான பெறுகைப் பெட்டியிற் சேர்த்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் மூடப்பட்டதும் உடனடியாக 2022.04.11 அன்று மு.ப. 10.00 இற்கு அவை திறக்கப்படும்.

அவ்வேளையில் விலைமனுதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதியொருவர் சமுகமளித்திருக்கலாமென்பதுடன், அவர்களின் முன்னிலையில் அவை திறக்கப்படும் அனைத்து விலைமனுக்களும், விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினத்திலிருந்து வருடத்தின் முன்வரும் காலத்திற்குச் செல்லுபடியாகுதல் வேண்டும். (2022.12.31)

தலைவர்,
பிராந்தியப் பெறுகைக் குழு,
நீர்கொழும்பு வலயக் கல்விப் பணிமனை,
கட்டுநாயக்கா.

Replies to Classifieds

&

Casual Advertisements published C/o the

Daily News

should only be sent by ordinary post.

Replies sent under registered cover will not be accepted.

இலங்கை சனநாயக சோசலிச குடியரசு
நெடுஞ்சாலைகள் அமைச்சு
வீதி அபிவிருத்தி அதிகாரசபை

விலைமனுக்கோரல்

01. வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பெறுகைக் குழுவின் தலைவரினால் வீதி அபிவிருத்தி அதிகார சபை சார்பாக **பதுளை மாவட்டத்தில்** கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள வேலைத்திட்டத்திற்கான தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றது.

ஒப்பந்த இலக்கம்	ஒப்பந்தத்தின் பெயர்	பொறியியலாளர்களின் மதிப்பீட்டுத் தொகை (மேலதிக செலவுகளற்ற) (ரூ. மில்லியன்)	ஒப்பந்த காலம் (நாட்கள்)	காப்புறுதிப் பிணை மனுத் தொகை (ரூ)
RDA/DC/UVA/IR - GOSL/2022/02	பெரகல வீதிக்கான பாதசாரி சுரங்கப்பாதை மற்றும் பாதசாரி சுரங்கப்பாதை நிர்மாணம் உட்பட பண்டாரவளை சந்தியில் குறுக்கு-வெட்டுக்கான மேம்பாடுகள்	490.0 Mn	546	6.0 Mn

2. பாதசாரி சுரங்கப்பாதை கட்டுமானம், பாதசாரி சுரங்கப்பாதை 3.5 மீ x 3.0 மீ நீளமுள்ள 16.7 மீ நீளமுள்ள ஒற்றை செல் பெட்டி, வீதிப் பணிகள், சிக்னல் நிறுவல் வேலை மற்றும் பிற கட்டமைப்புகளைக் கொண்டுள்ளது.

3. மனுக்கோரலானது தேசிய மனு கோரல் போட்டி முறைக்கமைய நடைபெறும் (NCB).

4. ஒப்பந்தத்திற்கு தகுதியுடையவர்களாவதற்கு மனுதாரர்கள் கட்டுமான கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் (CIDA) தரத்தில் **C1 இற்கு மேலான தரத்தில் பாலக்கட்டுமானத்** துறையில் நிபுணத்துவத்திற்கு ஏற்ப பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.

5. இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் மேலதிக விபரங்களை கீழ் குறிப்பிடப்பட்டுள்ள காரியாலயங்களில் பெற்றுக் கொள்ளக்கூடியதுடன், மனு ஆவணங்களை **www.rda.gov.lk** எனும் இணையத்தளத்திலிருந்து **2022.03.15** ஆம் திகதி முதல் பெற்றுக்கொள்ளலாம்.

   (அ). **பணிப்பாளர் (கட்டுமானம்) வீதி அபிவிருத்தி அதிகார சபை, மூன்றாம் மாடி, “மகநெகும மஹமெதுர” இல-216, டென்சில் கொபேகடுவ மாவத்தை, பத்தரமுல்லை.**
   தொலைபேசி : 011-2864388 மற்றும் பெக்ஸ் : 011-2861821

   (ஆ). **மாகாண பணிப்பாளர் (ஊவா மாகாணம்), வீதி அபிவிருத்தி அதிகார சபை, இல-40, தர்மபால மாவத்தை, பண்டாரவளை.**
   தொலைபேசி : 057-2222170 மற்றும் பெக்ஸ் : 057-2222170

6. மனு தொடர்பான கூட்டம் **2022.03.21 ஆம் திகதி மு.ப.10.00 மணிக்கு மாகாணப் பணிப்பாளர் (ஊவா), வீதி அபிவிருத்தி அதிகார சபை, இல-40, தர்மபால மாவத்தை, பண்டாரவளையில்** நிகழ்நிலை மூலமாக இடம் பெறும். தேவையேற்படின் உடனடியாக வேலைத்தளப் பரீட்சிப்பும் ஏற்பாடு செய்துத் தரப்படும்

   Zoom தள இணைப்பு :

   https://us05web.zoom.us/j/87170771461?pwd=b3FSVjJPQTBqZ0ptb1lmK29YU01hdz09

   முன் மனுக்கூட்டத்திற்கான ID : 871 7077 1461

   இரகசிய குறியீடு : E8gqM7

7. ஒப்பந்தத்திற்கான எழுத்துபூர்வமான விண்ணப்பம் மற்றும் மீளச்செலுத்தப்படாத கட்டணத்தை செலுத்திய வெல்லுபடியாகும் இரசீது **(ஒப்பந்த இலக்கம் மற்றும் ஒப்பந்ததாரரின் பெயர் என்பன இரசீதில் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்). மின்னஞ்சல்** மூலமாக பணிப்பாளர் (கட்டுமானம்) வீதி அபிவிருத்தி அதிகார சபை, **மூன்றாம் மாடி, “மகநெகும மஹமெதுர” இல-216, டென்சில் கொபேகடுவ மாவத்தை, பத்தரமுல்லையில் 2022.03.15** ஆம் திகதியிலிருந்து **2022.04.04** ஆம் திகதி வரை **09.00 மணியிலிருந்து 15.00 மணி** வரையான காலப்பகுதியினுள் அனுப்புவதன் மூலமாக ஆர்வமுள்ள மனுதாரர்களுக்கு மின்னஞ்சல் மூலமாக அச்சிடப்பட்ட ஆங்கில மொழியிலான விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ள முடியும்.

   மின்னஞ்சல் முகவரி : construction.rda@gmail.com.

   மீளச்செலுத்தப்படாத **ரூ.64,800/- (வட்வரிகளுக்கு உட்பட்ட)** கட்டணத்தை கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள கணக்கிலக்கத்திற்கு செலுத்துதல் வேண்டும்.

   அ. கணக்கின் பெயர் : பணிப்பாளர் நாயகம் - RDA
   ஆ. கணக்கு இலக்கம் : 0000001943
   இ. வங்கி : இலங்கை வங்கி - கூட்டுறவு கிளை

8. அனைத்து மனுக்களும், **2022.09.27** ஆம் திகதி வரை செல்லுபடியாகும் காப்புறுதிப்பிணையுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

9. பூரணப்படுத்தப்பட்ட மனு ஆவணங்களை பிரதிகளுடன் **2022.04.05 ஆம் திகதி 13.00** மணித்தியாலங்களுக்கு முன் **தலைவர், வீதி அபிவிருத்தி அதிகார சபை, பணிப்பாளர், வழங்கல் குழு, வீதி அபிவிருத்தி அதிகார சபை, ஏழாம் மாடி, “மகநெகும மஹமெதுர” 216, டென்சில் கொபேகடுவ மாவத்தை, பத்தரமுல்லை** எனும் முகவரியில் கையளிக்கப்படல் வேண்டும். காலம் தாழ்த்தி கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மனுக்கள் திறக்கப்படும் வேளையில் மனுதாரர் அல்லது அவரது பிரதிநிதிக்கு அவ்வேளையில் பிரசன்னமாயிருக்க முடியும்.

10. மனுக்கள் **2022.08.30** ஆம் திகதி வரை செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும்.

தலைவர்,
வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கொள்முதல் குழு,
நெடுஞ்சாலைகள் அமைச்சு,
கொள்முதல் பிரிவு
ஏழாம் மாடி, 'மகநெகும மஹமெதுர', டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை.

சுற்றாடல் அமைச்சு

மத்திய சுற்றாடல் அதிகாரசபை

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் வவுனியா மற்றும் களுத்துறை மாவட்ட அலுவலகங்களுக்காக குத்தகை அடிப்படையில் கட்டிடங்களை பெற்றுக்கொள்வதற்கு விலைமனுகோரல்

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் வவுனியா மற்றும் களுத்துறை மாவட்ட அலுவலகங்களுக்காக குத்தகை அடிப்படையில் கட்டிடங்களை பெற்றுக்கொள்வதற்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளைக் கொண்ட பொருத்தமான கட்டிடம் ஒன்றை குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கு விரும்பும் நபர்கள்/ நிறுவனங்களிடம் இருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் இத்தால் கோரப்படுகின்றன.

மாகாண/ மாவட்ட அலுவலகம்	கேள்விமனு இலக்கம்	சதுர அடி அளவு	கட்டிடம் அமைந்திருக்கும் இடம்	வாகன தரிப்பிட வசதி	கழிப்பறை மற்றும் குளியலறை எண்ணிக்கை
வவுனியா மாவட்ட அலுவலகம்	CEA/AD/ Proc/ CA/16/2022	1500 அல்லது அதற்கு மேல் (அதிகபட்சம் இரு மாடிகள் கொண்டதாக இருத்தல் வேண்டும்.)	வவுனியா நகர் அல்லது நகர மையத்தில் இருந்து 5 கி.மீற்றருக்கு குறைந்த தூரம்	02 வாகனங்கள் நிறுத்தி வைக்க முடியுமாக இருத்தல்	02 அல்லது அதற்கு மேல்
களுத்துறை மாவட்ட அலுவலகம்	CEA/AD/ Proc/ CA/17/2022	5500 அல்லது அதற்கு மேல் (அதிகபட்சம் இரு மாடிகள் கொண்டதாக இருத்தல் வேண்டும்.)	களுத்துறை நகர் அல்லது நகர மையத்தில் இருந்து 8 கி.மீற்றருக்கு குறைந்த தூரம்	04 வாகனங்கள் நிறுத்தி வைக்க முடியுமாக இருத்தல்	06 அல்லது அதற்கு மேல்

குறிப்பிட்ட கட்டிடம்,

- பொதுமக்கள் மற்றும் பணிக்குழுவுக்கு இலகுவாக அணுக முடியுமான இடத்தில் அமைந்திருத்தல் வேண்டும்.
- திட்டத்தின் பிரதி மற்றும் காணியை நெருங்க முடியுமான பாதையின் வரைபடத்தை சமர்ப்பித்தல் வேண்டும். (காணி உறுதி உரிமையாளரின் பெயரில் மாத்திரம் இருத்தல் வேண்டும்.)
- காணி உறுதி மற்றும் காணி திட்டத்தின் உறுதி செய்யப்பட்ட பிரதிகளை பெற்றுத்தருதல் வேண்டும்.
- கட்டிடத்தின் சதுர அடி அளவு என குறிப்பிடுவது படிக்கட்டு, கழிப்பறை, மேல்மாடம் மற்றும் குளியலறைகளின் சதுர அடி தவிர்த்து எஞ்சிய சதுர அடி அளவு.
- தேவை அடிப்படையில் அரசாங்க மதிப்பீட்டு விலையை பெற்றுக்கொள்வதற்கு இணங்குதல் வேண்டும்.
- 03 ஆண்டு காலத்திற்கு கட்டிடத்தை குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கு முடியுமாக இருத்தல் வேண்டும் என்பதோடு, வழங்கலின் பின் திணைக்களத்தினால் ஒப்பந்தம் ஒன்றுக்கு வருதல் வேண்டும்.

மேல் குறிப்பிடப்பட்ட ஆவணங்கள் மற்றும் தேவைகளை பூர்த்தி செய்கின்ற கட்டிட உரிமையாளர்களுக்கு மாத்திரம் விண்ணப்பிக்க முடியும் என அறிவுறுத்தப்படுவதோடு தேவைகள் மற்றும் ஆவணங்களை சமர்ப்பிக்க முடியாத கேள்விமனுதாரர்கள் மதிப்பீட்டு செயற்பாட்டில் இருந்து நீக்கப்படும் என்பதை அறியத்தருகிறோம்.

முத்திரை பொறிக்கப்பட்ட கேள்விமனு உறையின் இடது பக்க மேல் மூலையில் தெளிவாக குறித்த கேள்விமனு இலக்கம் மற்றும் “மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் வவுனியா மற்றும் களுத்துறை மாவட்ட அலுவலகங்களுக்காக குத்தகை அடிப்படையில் கட்டிடங்களை பெற்றுக்கொள்ளல்” என்று குறிப்பிட்டு விண்ணப்பதாரரின் பெயர், முன்மொழியப்பட்ட கட்டிடத்தின் முகவரி, தொலைபேசி இலக்கம், கூறுவிலை மற்றும் குறிப்பிட்ட விபரக்குறிப்புகள் தொடர்பில் விபரம் (சதுர அடி அளவு, கழிப்பறைகள் எண்ணிக்கை, நிறுத்த முடியுமான வாகனங்களின் எண்ணிக்கை) ஆகிவற்றை உள்ளடக்கிய விண்ணப்பம் ஒன்றை மேல் கோரப்பட்டிருக்கும் விபரங்களுடன் கீழுள்ள முகவரிக்கு 2022.04.04 ஆம் திகதி பி.ப. 2.00க்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புவதற்கு அல்லது கைகளால் கொண்டுவந்து மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் நிர்வாகப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டிக்கு இடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். கேள்விமனு ஏற்கும் காலம் முடிவுற்ற உடன் அன்றைய தினம் பி.ப. 2.00க்கு கேள்விமனுக்கள் திறக்கப்படும். தாமதித்து கிடைக்கின்ற கேள்விமனுக்கள் நிராகரிக்கப்படும் இது தொடர்பில் மேலதிக விபரங்களை உதவிப் பணிப்பாளர் (நிர்வாகம்) மூலம் பெற்றுக்கொள்ள முடியும். (தொலைபேசி இலக்கம் 070 – 3990090)

கருத்தில்கொள்ளவும் - முன்மொழியப்பட்ட கட்டிடம் தொடர்பில் விசாரணை செய்வதற்கு தொலைபேசி இலக்கம் ஒன்றை விண்ணப்பதாரர் குறிப்பிடுதல் வேண்டும்.

தலைவர்
பெறுகைக்குழு
மத்திய சுற்றாடல் அதிகாரசபை
இலக்கம் 104, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை

இலங்கை சதுரங்க சம்மேளன பி பிரிவில் விளையாட ஆக்கில் கான் தெரிவு

(கல்முனை விசேட நிருபர்)

இலங்கை சதுரங்க சம்மேளனம் தேசிய ரீதியில் நடாத்திய சதுரங்க சுற்றுப் போட்டியில் Pro Knights Chess Academy சார்பாக பங்குபற்றிய கல்முனை ஸாஹிரா கல்லூரி மாணவன் ஐ.கே.முஹம்மட் ஆக்கில் கான் அடுத்த சுற்றான பி பிரிவில் விளையாட தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

பொலநறுவை றோயல் கல்லூரியில் கடந்த ஒரு வார காலமாக இடம்பெற்ற இப்போட்டி 07 சுற்றுக்களைக் கொண்டதாக அமைந்திருந்தது.

வயது வரையறைகள் இன்றி ஆண்களுக்கு தனியாக நடாத்தப்பட்ட இப்போட்டித் தொடரில் சுமார் 40 போட்டியாளர்கள் பங்குபற்றியிருந்தனர். இதில் பல சர்வதேச தரப்படுத்தல் போட்டியாளர்களுடனும் விளையாடியே இவர் அடுத்த சுற்றில் விளையாடத் தகுதி பெற்றுள்ளார்.

இப்போட்டித் தொடருக்கு அம்பாறை மாவட்டத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட முதல் வீரரான இவரை Pro Knight Chess Academy பணிப்பாளர் ஸாக்கீர் அஹமட் பயிற்றுவித்திருந்தார்.

கல்முனை ஸாஹிரா கல்லூரியில் 07 ஆம் ஆண்டில் கல்வி பயில்கின்ற இம்மாணவன் ஆசிரியர் எம்.கே.இர்ஷாட் கான் மற்றும் எஸ். தஸ்லீன் ஆகியோரின் புதல்வர் என்பது குறிப்பிடத்தக்கது.

பெண்கள் உலக கிண்ணம் - நியூசிலாந்தை வீழ்த்தி அவுஸ்திரேலியா அபார வெற்றி

நியூசிலாந்துக்கு எதிரான போட்டியில் அவுஸ்திரேலியாவின் எல்லிஸ் பெரி 68 ஓட்டங்களும், ஒரு விக்கெட்டும் வீழ்த்தி ஆட்டநாயகி விருது பெற்றார்.

வெல்லிங்டனின் நடந்த மகளிர் உலக கிண்ணத்தின் 11வது லீக் ஆட்டத்தில் நியூசிலாந்து, அவுஸ்திரேலியா அணிகள் மோதின. நாணயச்சுழற்சியில் வென்ற நியூசிலாந்து அணி பந்து வீச்சை தேர்வு செய்தது.

அதன்படி, முதலில் களமிறங்கிய அவுஸ்திரேலிய அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 8 விக்கெட் இழப்புக்கு 269 ஓட்டங்கள் எடுத்தது. அந்த அணியில் அதிகபட்சமாக எல்லிஸ் பெரி 68 ஓட்டங்களும், டஹிலா மெக்ராத் 57 ஓட்டங்களும், கார்ட்னர் 48 ஓட்டங்களும் எடுத்தனர்.

இதையடுத்து, 270 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் நியூசிலாந்து அணி களமிறங்கியது. அவுஸ்திரேலிய அணியின் பந்து வீச்சில் சிக்கி விரைவில் சகல விக்கெட்டையும் இழந்தது. நியூசிலாந்து 30.2 ஓவரில் 128 ஓட்டங்களுக்கு சகலவிக்கெட்டையும் இழந்தது. எமி சாட்டர்வெயிட் 44 ஓட்டங்கள் எடுத்தார். இதன்மூலம் அவுஸ்திரேலியா 141 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

அவுஸ்திரேலியா சார்பில் டார்சி பிரவுன் 3 விக்கெட்டும், அமெண்டா வெல்லிங்டன், ஆஷ்லெக் கார்ட்னர் தலா 2 விக்கெட்டும் வீழ்த்தினர்.

இந்திய - இலங்கை 2ஆவது டெஸ்ட்; முதல் நாளில் 16 விக்கெட்டுக்கள்

இலங்கை இந்திய அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியின் முதல் நாள் ஆட்டம் கடந்த (12) நிறைவுக்கு வந்தது.

போட்டியின் முதல் நாளில் இலங்கை கிரிக்கெட் அணியின் சுழல் பந்துவீச்சாளர்களும், இந்திய அணியின் வேகப்பந்துவீச்சாளர்களும் ஆதிக்கம் செலுத்தியிருந்த நிலையில் 16 விக்கெட்டுக்கள் வீழ்த்தப்பட்டிருக்கின்றன.

பகலிரவு மோதலாக நடைபெறுகின்ற இந்த டெஸ்ட் போட்டி, பெங்களூரில் ஆரம்பமாகியது. போட்டியின் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணித்தலைவர் ரோஹித் ஷர்மா முதலில் துடுப்பாடும் சந்தர்ப்பத்தினைப் பெற்றிருந்தார்.

இப்போட்டிக்கான இலங்கை அணி உபாதை காரணமாக பெதும் நிஸ்ஸங்க, லஹிரு குமார ஆகியோருக்கு ஓய்வு வழங்கியிருக்க, குசல் மெண்டிஸ் மற்றும் பிரவீன் ஜயவிக்ரம ஆகியோருக்கு வாய்ப்பு வழங்கப்பட்டிருந்தது.

மறுமுனையில் இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் 10 என முன்னிலை பெற்றிருக்கும் இந்திய அணி, ஜயந்த் யாதவ்விற்குப் பதிலாக அக்ஷார் பட்டேலினை தமது குழாத்திற்குள் இணைத்திருந்தது.

இதன் பின்னர் நாணயச் சுழற்சிக்கு அமைய முதலில் இந்திய அணிக்கு ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களாக ரோஹித் சர்மா மற்றும் மயான்க் அகர்வால் ஆகியோர் களம் வந்தனர். தொடர்ந்து பிரவின் ஜயவிக்ரமவின் அசத்தலான ரன் அவுட்டுடன் இந்திய அணியின் முதல் விக்கெட் பறிபோனது. இந்திய அணியின் முதல் விக்கெட்டாக ஆட்டமிழந்த மயான்க் அகர்வால், வெறும் 4 ஓட்டங்களுடன் ஓய்வறை நடந்தார்.

அதன் பின்னர் இந்திய அணியின் ஏனைய ஆரம்ப துடுப்பாட்ட வீரர் ரோஹித் சர்மாவின் விக்கெட் அவர் 15 ஓட்டங்கள் பெற்றிருந்த நிலையில் லசித் எம்புல்தெனியவின் பந்துவீச்சில் பறிபோனது. இதன் பின்னர், இந்திய அணியின் மூன்றாம் விக்கெட்டுக்காக விராட் கோஹ்லி மற்றும் ஹனுமா விஹாரி ஆகியோர் நல்ல இணைப்பாட்டம் ஒன்றுக்கு அடித்தளம் போட்டிருந்தனர். 47 ஓட்டங்கள் வரை நீடித்த இந்திய அணியின் மூன்றாம் விக்கெட் இணைப்பாட்டம் ஹனுமா விஹாரியின் விக்கெட்டோடு நிறைவுக்கு வந்தது. பிரவின் ஜயவிக்ரமவின் பந்துவீச்சில் ஆட்டமிழந்த விஹாரி 31 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

விஹாரியின் பின்னர் இந்திய அணியின் முக்கிய வீரரான விராட் கோஹ்லியின் விக்கெட்டும் பறிபோனது. தனன்ஞய டி சில்வாவின் பந்துவீச்சில் ஆட்டமிழந்த கோஹ்லி 23 ஓட்டங்களுடன் ஓய்வறை சென்றார். இதனால் இலங்கையின் சுழல் பந்துவீச்சாளர்களை எதிர்கொள்வதில் தடுமாற்றம் கொண்ட இந்திய கிரிக்கெட் அணி, சடுதியாக விக்கெட்டுக்களைப் பறிகொடுக்க தொடங்கியது. எனினும், இந்திய அணிக்காக தனியொருவராக போராடிய ஸ்ரேயாஸ் ஐயர் ஓட்டங்களைச் சேர்க்கத் தொடங்கினார். கடைசியில் ஐயரின் விக்கெட்டும் பறிபோக இந்திய கிரிக்கெட் அணி, முதல் நாளின் இராப்போசணத்திற்கு முன்னதாக தமது விக்கெட்டுக்கள் அனைத்தினையும் பறிகொடுத்து 59.1 ஓவர்களில் 252 ஓட்டங்களை தமது முதல் இன்னிங்சுக்காக எடுத்துக் கொண்டது.

இந்திய அணியின் துடுப்பாட்டம் சார்பில் தன்னுடைய 4ஆவது அரைச்சதத்தோடு போராட்ட இன்னிங்ஸினை வெளிப்படுத்திய ஸ்ரேயாஸ் ஐயர் 98 பந்துகளில் 4 சிக்ஸர்கள் மற்றும் 10 பௌண்டரிகள் அடங்கலாக 92 ஓட்டங்களை எடுத்திருந்தார்.

இலங்கை அணியின் பந்துவீச்சில் லசித் எம்புல்தெனிய மற்றும் பிரவீன் ஜயவிக்ரம ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்கள் வீதம் சாய்க்க, தனன்ஞய டி சில்வா 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

தொடர்ந்து முதல் நாளின் இராப்போசணத்திற்குப் பின்னர், தமது முதல் இன்னிங்ஸ் துடுப்பாட்டத்தினை ஆரம்பித்த இலங்கை அணி, இந்திய அணியின் வேகப்பந்துவீச்சாளர்களை சமாளிக்க முடியாமல் போட்டியின் முதல் நாள் ஆட்டம் நிறைவுக்கு வரும் போது 85 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுக்களை இழந்து தடுமாற்றமான நிலையில் காணப்படுகின்றது.

இலங்கை அணியின் துடுப்பாட்டம் சார்பில் முன்வரிசை வீரர்கள் அனைவரும் பிரகாசிக்கத்தவற, அஞ்செலோ மெதிவ்ஸ் 43 ஓட்டங்களைப் பெற்றிருந்தார். மறுமுனையில், களத்தில் ஆட்டமிழக்காமல் நிற்கும் நிரோஷன் டிக்வெல்ல 13 ஓட்டங்களுடனும், லசித் எம்புல்தெனிய ஓட்டமேதுமின்றியும் காணப்படுகின்றனர். இந்திய அணியின் பந்துவீச்சு சார்பில் ஜஸ்பிரிட் பும்ரா 3 விக்கெட்டுக்களையும், மொஹமட் சமி 2 விக்கெட்டுக்களையும் சாய்த்திருந்தனர்.

இலங்கை ரக்பிக்கு நிப்போன் பெயின்ட் அனுசரணை

140 ஆண்டுகளுக்கு மேலான வரலாற்றை கொண்ட இலங்கை ரக்பி சங்கத்திற்கு புதிய அனுசரணை வழங்க நிப்போன் பெயின்ட் நிறுவனம் முன்வந்துள்ளது. அனுசரணை வழங்கும் நிகழ்வு ஹோட்டல் ரமடாவில் அண்மையில் ஊடகவியலாளர் சந்திப்பை நடத்தியது.

இலங்கை ரக்பி சங்க தலைவர் ரிஸ்லி இல்யாஸ் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில், "இலங்கை லொக் டவுன்கள் மற்றும் பொருளாதார நெருக்கடிகளில் இருந்து வெளிவரத் தொடங்கியுள்ள இந்த நேரத்தில், இலங்கை ரக்பிக்கு அனுசரணை வழங்கி ஆதரவளிப்பதற்கான எனது அழைப்பை நிப்போன் பெயின்ட் உடனடியாக ஏற்றுக்கொண்டது.

எனவே அனுசரணையை நிப்போன் பெயின்ட் மற்றும் ஹேமந்த எங்கள் சொந்த பீட்டர்சன் ஸ்போர்ட்ஸ் கழக முன்னாள் வீரர் தினேஷ் தில்ஹான் (வணிக மேம்பாட்டு முகாமையாளர் நிப்போன் பெயின்ட்) ஆகியோருக்கு நான் என்றும் நன்றியுள்ளவனாக இருக்கிறேன், மேலும் இந்த கூட்டாண்மையை நீண்ட காலத்திற்கு தொடர ஆவலுடன் காத்திருக்கிறேன்.

கொழும்பு மஹாநாம கல்லூரி மற்றும் பீட்டர்சன் விளையாட்டுக் கழகத்தின் முன்னாள் ரக்பி வீரரும் நிப்போன் பெயின்ட்டின் பொது முகாமையாளருமான ஹேமந்த அபேசிங்க கூறுகையில், நாங்கள் ஜப்பானை தளமாகக் கொண்ட தாய் நிறுவனத்துடன் 140 ஆண்டுகளுக்கும் மேலான உலகளாவிய நிறுவனமாகும், எனவே நாங்கள் எதிர்பார்க்கிறோம். முன்பு கிரிக்கெட் மற்றும் மோட்டார் பந்தயத்தை ஆதரித்தேன், ஆனால் இலங்கையில் ரக்பி மிகவும் பிரபலமானது மற்றும் 140 ஆண்டுகளுக்கும் மேலாக இருந்து வருவதால், ஏன் இலங்கை ரக்பியை உயர்நிலைகளை அடைய ஆதரிக்கக்கூடாது என்று நினைத்தேன்.

"நானும் கடந்த கால ரக்பி வீரராக இருந்தேன், நாட்டில் ரக்பி விளையாட்டை ஆதரிப்பதே எங்கள் குறிக்கோள். இல்யாஸ் இந்த யோசனையை முன்வைத்த போது, இந்த முறை ஏன் ரக்பியை ஆதரிக்கக்கூடாது என்று நாங்கள் நினைத்தோம்" என்று அபேசிங்க கூறினார்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 மார்ச் மாதம் 14ம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.